# இளமை உள்ளங்கள்



ஞானரதன்

வீரகேசரி
பிரசுரம்

T. K. CHELLIAH.

KURUMBASIDDY,

TELLIPPALAI.

S. KARUNAKARAN.

KURUMPASI[illegible] WEST

TELLIP[illegible]I.

வீரகேசரி பிரசுரம்: 40

# ஊமை உள்ளங்கள்

ஞானரதன்

வெளியீடு
வீரகேசரி
த.பெட்டி 160,
கொழும்பு.

# "Oomai Ullangal"

by

V. Sachchidanandasivam
(Gnanarathan)

*FIRST EDITION*
MARCH 1976

COPY RIGHTS

RESERVED WITH
THE PUBLISHERS

VIRAKESARI PIRASURAM 40

PRICE Rs. 3 60

Published by

VIRAKESARI
P.O.Box 160, COLOMBO.

Sole Distributors:
EXPRESS NEWSPAPERS (Cey.) LTD.
185, GRANDPASS ROAD,
COLOMBO-14.

# பதிப்புரை

இந்நாவலாசிரியர் அளவெட்டி என்னும் கிராமத்தில் 1940ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22ந் திகதி பிறந்தவர். ஆரம்பக் கல்வியை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும், உயர் கல்வியை சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் பயின்றவர். தற்போது நில அளவைத்திணைக்களத்தில் படம் வரை அறிஞராகக் கடமையாற்றுகின்றார். ''சொர்ணன்'', ''ஞானரதன்'' ஆகிய புனை பெயர்களில் இருபதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இதுவே இவரது முதல்நாவல். வீரகேசரி பிரசுர வரிசையில் அன்னாரது கன்னிப்படைப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இந்நூலின் அட்டைப்படத்தையும் வரைந்துதவியவர் இந்நாவலாசிரியரே. கலைக்குடும்பத்தில் பிறந்த இவரிடமிருந்து, இன்னும் பல படைப்புக்களை ஈழத்து வாசகர்கள் எதிர்பார்க்கலாம்.

2.6.76

பதிப்பாசிரியர்


## அடுத்த பிரசுரம்:

நடத்தை தவறிய கன்னிப்பெண்—
கன்னிப் பெண்ணைக் கைப்பிடித்த
அப்பாவிக் கணவன்—

இன்றைய சமூகத்தில் நாம் சந்திக்கும் ஒரு பிரச்சினையை மையமாக வைத்து

திரு. அருள் சுப்பிரமணியம்

அளிக்கும் சமூக நாவல்

# "நான் கெடமாட்டேன்"

# முன்னுரை

நாவல் இலக்கியத்துறையில் இதுவே எனது முதல்
முயற்சியாகும். இதில் வரும் கதாபாத்திரங்கள் நம்
மிடையே வாழும் சாதாரண மனிதர்களே. அவர்கள்
எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அநேகமாக அவர்களுக்கே
மட்டும் பிரத்தியேகமானவையுமல்ல. ஆரோக்கியமான
சிந்தனைகள் நலிவுறும் மக்களிடையே வேருன்றுது சிதைந்து
போவதால் இன்னும் பழமைதான் பாதுகாக்கப்பட்டுவரு
கிறதென்பதையும், அதை உடைத்தெறிவதென்பது இலே
சான காரியமல்லவென்பதையும் பின்னணியாகக் கொண்டு
எழுந்ததுதான் இந்த நாவல்.

இந்த நாவலை வாசக நேயர்களின் முன் வைக்கும் இவ்
வேளையில், ஓவியத்துறையில் ஈடுபட்டிருந்த எனக்கு எழுத்
தில் ஆர்வத்தை வளர்த்து, எனக்கு வழிகாட்டியாகஇருந்த
எனது நண்பனும், எழுத்தாளனுமான திரு. வி. கே. சபா
ரத்தினம் (நில அளவைத் திணைக்களம், அநுராதபுரம்) அவர்
களை நினைவுகூர்கிறேன்.

நான் எழுதக் கற்றுக்கொண்ட சிறுகதைகளுக்கெல்
லாம் மதிப்புக் கொடுத்துப் பிரசுரித்து என்னை ஊக்குவித்த
வீரகேசரிக்கும், எனது ஓவியங்களுக்கும், எழுத்துக்களுக்கும்
இடமளித்து அறுபதுக்களில் வெளியான 'தேனருவி'க்கும்
எனது நன்றிகள். எழுத்துத்துறையில் ஊக்கம் தந்த நண்
பர்கள் இன்னும் பலர் இருக்கிறார்கள்.

புதிய எழுத்தாளர்களை அறிமுகம் செய்து வைப்பதில்
வீரகேசரி பிரசுரத்தினர் ஆற்றிவரும் பணிக்கு இந்தநாவல்
சான்றாகும். இந்த நாவலை வீரகேசரி பிரசுரமாக ஏற்று
பிரசுரிப்பதோடு மட்டுமல்லாமல் எனது வேண்டுகோளுக்
கிணங்க நான் வரைந்த அட்டைப்படத்தையும் ஏற்றுப்
பிரசுரித்து எனக்குப் பலவகைகளில் உதவிபுரிந்த வீரகேசரி
புத்தக வெளியீட்டு நிர்வாகியான திரு. சி. பாலச்சந்திரன்
அவர்கள் எனக்கு இதற்கு முன் அறிமுகமானவரல்ல. அவ
ரின் பணியைப் பாராட்டுவதோடு எனது மனமார்ந்த நன்
றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

நில அளவைத் திணைக்களம்,
புத்தளம்.
1976-3-29

வை. சச்சிதானந்தசிவம்.
(ஞானரதன்)

# கேசரி — மித்திரன்
# புத்தகக் களஞ்சியங்கள்

எமது வீரகேசரி, ஜனமித்திரன் வெளியீட்டுப் புத்தகங்கள் அனைத்தையும் கீழ்க்காணும் எமது கேசரி - மித்திரன் புத்தகக் களஞ்சிய விற்பனையாளர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்:-

**கொழும்பு:**

- ராஜேஸ்வரி ஹோட்டல், 69, ஒல்கொட் மாவத்தை.

**புறக்கோட்டை:**

- வி. வடிவேல், மலர்விழி ஸ்டோர்ஸ், 25, செக்கு வீதி.
- லீலா ஸ்டோர்ஸ், 249, நொரிஸ் ரோட்.

**கொம்பனித் தெரு:**

- ரத்னு ஸ்ரோர்ஸ், 130, மலேவீதி.

**ாம்பலபபிட்டி:**

- கிறீன்லண்ட்ஸ் ஹோட்டல், 3 ஏ. சிறபரி கார்டின்ஸ், காலிவீதி.

**வெள்ளவத்தை:**

- விஜயலக்ஷ்மி புத்தகசாலை, 248, காலி வீதி.
- ரிஸ்வீஸ், 114, காலி வீதி.
- டானியல் புத்தக நிலையம், 248, காலி வீதி.

**முகத்துவாரம்:**

- எஸ். கருப்பையா பிள்ளை, 308, முகத்துவாரம் வீதி, கொழும்பு-15

**தெமட்டகொடை:**

- எம். கிருஷ்ண பிள்ளை, மொறயஸ் ஸ்ரோர்ஸ், 580, தெமட்டகொடை ரோட்.

**நீர்கொழும்பு:**

- திருமதி எம். நடராஜா, ஸ்ரீகணேசன் கபே, 180, பிரதானவீதி, நீர்கொழும்பு.

**களுத்துறை:**

- வி. ரி. சிவசுப்பிரமணியம், ரி. எஸ். கே. வி. பிரதர்ஸ், 606, பிரதானவீதி, களுத்துறை தெற்கு.

யாழ்ப்பாணம்:

- வீரகேசரி கிளைக் காரியாலயம், 82/2, ஸ்ரேஷன் ரோட்,
- ராஜன் புத்தகசாலை, 12, பஸ் ஸ்டாண்ட்.
- ராஜன் புக் சென்ரர், 57/ஏ, மொடல் மார்க்கட்.
- ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, கே. கே. எஸ். ரோட்.
- எஸ். பொன்னம்பலம், 1, கஸ்தூரியார் ரோட்.
- பூபாலசிங்கம் புத்தகநிலையம், பஸ் ஸ்டாண்ட்.
- புகையிரதநிலைய புத்தகசாலை, புகையிரதநிலையம்.

நல்லூர்:

- கே. கிருஷ்ணானந்தன், ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், 254, பருத்தித்துறைவீதி.

பண்டத்தரிப்பு:

- கே. சுந்தரம்பிள்ளை, சைவானந்தா இளம்.

சாவகச்சேரி:

- கே. கே. ஐயாத்துரை, சரஸ்வதி புத்தக நிலையம்.

கைதடி:

- ஏ. கந்தையா, சிவசக்தி ஸ்ரோர்ஸ், கைதடி சந்தி.

பளை:

- ஆர். பத்மநாதன், டியூரோ சொப், கண்டி வீதி.

மல்லாகம்:

- வி. குமாரசாமி, கோர்ட் ரோட்.

மாவிட்டபுரம்:

- திருமதி எம். செல்லையா, ராஜா ஸ்ரோர்ஸ்.

மானிப்பாய்:

- கே. ரி. நாயகம், நாயக பாலன் ஸ்ரோர்ஸ்.

பருத்தித்துறை:

- எஸ். கண்ணன், வட இலங்கை புத்தகசாலை.

நெல்லியடி:

- லக்ஷ்மி ஸ்ரோர்ஸ், கரவெட்டி.

வல்வெட்டித்துறை:

- கே. அருட்சோதி,
  கலைச்சோலை புத்தக நிலையம்.

சுன்னாகம்:

- தனலக்ஷ்மி புத்தக நிலையம்,
  பிரதான வீதி.

கீழ்மாகாணம்: —

திருகோணமலை:

- வி. ஏ. சிதம்பரப்பிள்ளை சன்ஸ்,
  43, பிரதான வீதி.

மூதூர்:

- ரி. கோபாலசிங்கம்,
  நொக்ஸ் வீதி, மூதூர்.

மட்டக்களப்பு:

- சக்தி நூல்நிலையம், 53, திருகோணமலை வீதி

கல்முனை:

- மணமகள் புத்தகசாலை, 29, பிரதானவீதி.

ஏருவூர்:

- சிவநடராஜா ஸ்ரோர்ஸ், 105, பிரதானவீதி,

அக்கரைப்பற்று:

- கே. கந்தசாமி,
  பரமேஸ்வரி ஸ்ரோர்ஸ், பாகாமம் றோட்.

களுவாஞ்சிக்குடி:

- வி. கந்தசாமி,
  ஈஸ்வரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

காத்தான்குடி:

- ஏ. கே. மொகமட்,
  டிவிஷன் இல: 6, 105, பிரதான வீதி.

வாழைச்சேனை:

- கே. முத்துராஜா,
  நேசம்ஸ், 540, பிரதான வீதி.

வவுனியா மாவட்டம்:

கிளிநொச்சி:

- குமரன் ஸ்ரோர்ஸ்,
  135, புகையிரதநிலைய வீதி.

முல்லைத்தீவு:

- பி. குகதாசன்,
  ரேணுகா ஸ்ரோர்ஸ், பிரதான வீதி.

வவுனியா:

- ஏ. செல்வரத்தினம்,
  கவிதா ஸ்ரோர்ஸ், 5, B பஸ் ஸ்ராண்ட்.

மன்னார்:

- ஏ. கதிரவேலு. கலாவதி கபே.

மலையகம்:

இரத்தினபுரி:
- சே. வேலுப்பிள்ளை, 223, பிரதான வீதி.

பண்டாரவளை:
- ஆர். கே. செல்வத்துரை,
  பராசக்தி அம்மன் ஸ்ரோர்ஸ்,
  71, பிரதான வீதி.

பதுளை:
- மீனம்பிகா நியூஸ் ஏஜண்ட்,
  235, லோவர் வீதி.

நுவரெலியா:
- ஸ்ரீ ஜோதி விலாஸ்,
  12, மொடல் சொப்.

ஹட்டன்:
- இம்பீரியல் பிரஸ், 96, பிரதான வீதி.

தலவாக்கொல்லை:
- பி. தங்கசாமி நாடார்,
  22, பிரதான வீதி.

நாவலப்பிட்டி:
- எஸ். பொன்னம்பலம்,
  ஸ்ரீ குமரன் ஸ்ரோர்ஸ், 1, கம்பளை ரோட்.

கம்பளை:
- ஏ. சுந்தரராஜா, 20, நுவரெலியா ரோட்.

மாத்தளை:
- எஸ். எஸ். அன்னலிங்கம்,
  ஸ்ரீகாந்தா ஸ்ரோர்ஸ்,
  73, திருகோணமலை வீதி.

கண்டி:
- கலைவாணி புத்தக நிலையம்,
  130, திருகோணமலை வீதி.
- வீரகேசரி கிளைக் காரியாலயம்,
  இன்சூரன்ஸ் பில்டிங், 23/1, தலதா வீதி.
- பொப்பியூலர் ஸ்ரோர்ஸ்,
  210, முதலாம் மாடி, மத்திய சந்தை.
- யாழ்ப்பாணம் ஸ்ரோர்ஸ்,
  51, யட்டிநுவர வீதி.

ஆன்கரஞேயா:
- எஸ். ரெங்கசாமி ரெட்டியார்.
  ஸ்ரீ கிருஷ்ண ஸ்ரோர்ஸ், 110, குகலை பஸார்.

# ஊமை உள்ளங்கள்

## 1.

அது ஒரு பிள்ளையார் கோவில். அக்கோவிலின் வீதிகளைச் சுற்றிப் பனை மரங்கள் சலசலத்தாடுவதை என்றும் காணலாம். அந்த ஓசையின் பின்னணியில் எத்தனையோ தலை முறைகள் வாழ்ந்து கெட்டதை மௌனமாகக் கண்டுவிட்டது அக்கோவில். தெற்கு வீதிக்கப்பால் ஒழுங்கை. அதில் மேளங்கள் முழங்க ஊர்வலம் போன பிணங்கள் எத்தனை?

திருமணமாகிக் கோவிலில் தேங்காய் உடைத்து, கற்பூரம் எரித்துவிட்டுக் கைகோர்த்துச் சென்ற புதுச் சோடிகள்தான் எத்தனை? காலத்தோடு கரைந்துவிட்ட இந்த நிகழ்ச்சிகளால் விட்டுச் சென்ற அனுபவங்கள் மட்டுமே அக்கோவிலைப் பற்றிப் படர்ந்திருந்தன.

தெற்கு வீதிப்புறமாக ஒரு மடம் அமைந்திருக்கிறது. அதற்கும் அப்பால் எருக்கலையும், கத்தாளையும் நிறைந்த வெறும் கலட்டிக் காணி. அதனூடாகச் செல்லும் ஒற்றையடிப் பாதை மல்லாகத்துக்குக் குறுக்கு வழியாகக் கொண்டு செல்லும். கோவிலின் முன்பாக, ஆல், அரசு, வேம்பு ஆகிய மூன்று மரங்களும் பின்னிப் பிணைந்து ஒரே மரமாகி, ஏதோ தத்துவமொன்றை விளக்குவது போல

அகல விரிந்து நிழல் பரப்புகின்றன. அதனடியில் இரும்புக் கிருதி அடிக்கப்பட்டிருக்கிறது. நடுவே சூலமொன்று கண் காணித்து நிற்கிறது. அதன் முன்பாக சிறிய தொரு மண் டபம். அவ்விடத்தைத் தாண்டிப் போவோர் கால்களில் உள்ள செருப்பைக் கழற்றுவார்கள். தலைப் பாகையை அவிழ்த்துக் குனிவார்கள். வருடத்தில் ஒரு முறை வைர வருக்கு வடை மாலை சாத்தி ஊர் மக்கள் பொங்கிப் படைப்பார்கள்.

பிள்ளையாருக்கும் திருவிழாக்கள் விமரிசையாக நடக் கும். ஆண்டுக்கொரு முறை வீதிகளை நிறைத்துவிட காப் புக் கடைக்காரர்களும், கடலைக்காரக் கிழவிகளும், மிட் டாய் வண்டிக்காரர்களும் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விடுவார்கள். திருவிழாக்களென்ருல் சும்மா வா? காசு பொசுங்கும். வாணங்கள் அசுரவேகத்தில் வானைத் துளைக் கும்.

சிகரத்தில் பல வண்ண 'பல்புகள்' சிமிட்ட தீப்பந் தங்களின் பின்னே கம்பீரமாகச் சப்பரம் அசைந்து வரும். நாதஸ்வரக்காரர்களின் இராக ஆலாபனைகள் ஒலிபெருக்கியில் இருந்து காற்ருேடுகலந்து தவழும். சின்ன மேளக்காரிகள் பலகைகளால் அமைக்கப்பட்ட மேடை யில், விடியற்புற சரிவு நேரத்தில், குதிகளால் குத்தி எழுப்பும் சலங்கை ஒலி ஆர்மோனியத்தின் பேரொலியில் மழுங்கும். மடத்தில் தூங்கி வழிந்தவர்கள் முகத்தைத் துடைத்துக் கொண்டு மேடையை நோக்கி ஓடுவார்கள். தூண்களுக்கிடையே கட்டப்பட்டிருக்கும் கயிறுகளுக்கு இடையே இறுகி, வியர்த்துப் பிசுபிசுப்பார்கள். வானத் தில் இடைக்கிடை வெடிக்கும் மத்தாப்பின்ஒளியில் மினுங்கு வார்கள். அடுத்த நாள் காலை, பெரும்பாலும் திருவிழாக் காரர் உறுதிக் கட்டுகளைத் தேடியெடுத்துக் கொண்டோடி 'ஈட்டைப் பாட்டை' வைத்து மானத்தைக் காப்பாற்று வார். அல்லது மனைவி மக்களின் நகை நட்டுகளைக் கழற்று வார்.

கோவிலின் வடக்குப்புறமாகக் குடியிருக்கும் 'உயர்ந்த சாதி' மக்கள் பெரும்பாலும் படித்தவர்கள்; அரசாங்க உத்தியோகத்தர்கள்; பென்சன்காரர்கள்; சிலர் வெளி ஊர்களில் வியாபார்த்தில் ஈடுபட்டிருக்கிறுர்கள். பொது வாக இவர்கள் பணத்தைக் கட்டி ஆளத்தெரிந்தவர்கள். அவர்களின் திருவிழாக்கள் பெரும்பாலும் கோவில் பொறுப்பாகவே நடக்கும். கோவிலின் மேற்குப் பகுதி மக்களைப் போல இப்படியான பொறியில் அகப்பட்டு அல்லல்படுவதில்லை.

கோவிலின் மேற்குப்புறமாக, கூப்பிடும் தொலேவில் குடிசனம் நெருக்கமான பகுதி உள்ளது. எல்லாச்சாதி களும் ஒழுங்கைக்கு ஒழுங்கை சங்கமிக்கும். இந்த நெரிச லுக்குள் ஒருவர்தான் சோமசுந்தரம். முன்பெல்லாம் ஒரு திருவிழாவைத் தனியாக நடத்தியவர். இப்பொழுது அவர் தனது வீட்டிலுள்ள ஜீவன்களுக்கு ஒருவேளை சாப்பாடு போடுவதற்குத் திண்டாடுகிறுர். சோமசுந்தரம் நகாசு வேலைக்காரர். அவரிடம் வேலை பழகிய பையன்கள் எல் லோரும் இப்பொழுது பெரும்புள்ளிகள். சிலர் பிற ஊர் களுக்குப் போய் கடையும் போட்டுவிட்டார்கள். சோம சுந்தரமோ அதே பல்லவியில்தான் ஓடுகிருர், சூத்திரத்து மாடுபோல.

கைகளில் நடுக்கம் ஏற்படாமல் இளமை முறுக்கோடு இருந்த நாட்களில் பட்டறையிலேயே படுத்தெழும்பி அடித் துழைத்த காலமொன்றிருந்தது. அப்படி உழைத்து அவ ரின் ஒரேயொரு சகோதரியான சிவபாக்கியத்தை மார்க் கண்டு மாஸ்டருக்குத் திருமணம் செய்து கொடுத்தார். சோமசுந்தரம் முதிசமாக இருந்த காணியை இரண்டாகப் பகிர்ந்து சிவபாக்கியத்திற்கு சிறிய வீடுமொன்று கட்டிக் கொடுத்தார். வீட்டின் குசினியும் பனை வரிச்சு மட்டை களால் இரண்டாக்கப்பட்டு இரண்டு குடும்பங்களும் பாவித் துக்கொள்கின்றன. கிணறுமட்டும் பொதுவாக சோமசுந் தரத்தின் வீட்டில் உள்ளது.

சோமசுந்தரத்தின் வாழ்விலும் வாலிபம் தனது அடையாளமாக நான்கு பெண் பிள்ளைகளைக் கொடுத்து விட்டுப் போய்விட்டது.

சிவபாக்கியத்துக்கு சந்திரசேகரன் என்ற ஒரேயொரு ஆண் பிள்ளையும், இரண்டு பெண்களும் இருந்தனர்.

★

பங்குனி மாதத்தின் அகோரம் வாட்டியெடுக்க; தலைப் பாகையைக் கழற்றிவிட்டுக் கோவில் மண்டபத்தில் மெல் லச் சரிகிறார் சோமசுந்தரம். மத்தியான நேரமென்றால் வழமையாக ஒரு போத்தல் 'கள்' குடித்துவிட்டு அந்த மடத்தில் சொற்ப நேரம் கண்களை மூடித் தன்னை மறக்கா விட்டால் அவருக்கு அமைதி கிட்டாது. அன்றும் அது போலவே அவர் வந்து சரிந்தார்.

மல்லாகத்தைக் கிழித்துக்கொண்டுபோகும் 'யாழ்தேவி' யின் அலறல் நிலத்தை அதிரச் செய்தது.

சோமசுந்தரத்தின் இமைகளுக்குள் செருகிய கண்கள் மீண்டும் விழிப்படைகின்றன. சந்திரசேகரன் மங்கலாக எதிரில் நின்றான்.

சோமசுந்தரம் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

''என்ன?''

''மாமா உங்களை மாமி வந்திட்டுப் போகட்டாம். ஏதோ அவசரமான அலுவலாம். எனக்குப் பள்ளிக்கூடம் போக நேரம் போட்டுது. நான் வாறன் மாமா.''

புத்தகக் கட்டுகளுடன் சந்திரசேகரன் போய்விட் டான்.

சோமசுந்தரம் புறுபுறுத்துக் கொண்டு சால்வையை எடுத்து விசிறியபின் தலையில் போட்டபடி வீட்டை நோக்கி நடக்கலானார்.

வழியில் சுமை ஏற்றி வந்த இரட்டை மாட்டு வண்டி ஒன்று குறுக்கிட்டது. சக்கரங்கள் மணலில் புதைந்திருந் தன. நாணயக் கயிறுகள் சுண்டியிழுத்ததால் மாடுகளின் விழிகள் பிதுங்கின.

''என்னடா மோனே! எக்கச்சக்கமான பாரத்தை ஏத்திப் போட்டு... ஏன்ரா போட்டு அந்த வாயில்லாப் பிராணிகளை வதைக்கிருய்.''

''இஞ்சாலே இறங்கி வா, நானும் பிடிக்கிறன்.''

இருவருமாகச் சக்கரங்களைப் புரட்டி உருள வைக்கப் பாடுபட்டனர். ம்... ம்... வண்டியில் அசையவில்லை.

''பாரத்தைக் கொஞ்சமெண்டாலும் இதிலே பறிச்சுப் போட்டுத்தான் வண்டிலே எடுக்க வேணும். இல்லாட்டி அசையாது'' என்ருர் சோமசுந்தரம்.

பாரத்தை இறக்கிவிட்டதும் சக்கரங்கள் தாளுகவே உருளத் தொடங்கின. பையன் மீண்டும் பாரத்தை ஏற்றினான். கற்தரையில் மண்ணை நெரித்து நின்றன சக்கரங்கள். சோமசுந்தரம் சால்வையால் நெற்றியைத் துடைத்துக் கொண்டார். சிறிது வேளைக்கு முன்பிருந்த உற்சாகமும் அவரை விட்டுப் போய்விட்டது.

பையன் துவரந்தடியால் மாடுகளுக்கு ஓங்கி ஒவ்வொன்று முதுகில் போட, அவை துடித்து நிமிர்ந்து, வெண்டயங்கள் கலகலக்கப் புது மூச்சுடன் முன்னேறின.

தளர் நடையுடன் சோமசுந்தரம் வண்டிலைப் பின் தொடர்ந்தார்.

வீட்டுப் படலையைத் திறந்த போது அவருடைய மனைவி செல்லம்மா, தங்கை சிவபாக்கியம், பக்கத்து வீட்டுப் புவனம் எல்லாரும் முற்றத்தில் நின்று அமளிப்படுகிருர்கள்.

''என்ன சங்கதி?'' என்ருர் சோமசுந்தரம்.

வீட்டு முற்றத்துப் பந்தலிலிருந்து மல்லிகையின் நறுமணம் அந்த மத்தியான வேளையிலும் மெல்ல வீசியது.

''எங்கடை மூத்தவள் அகிலா எல்லோ பெரியபிள்ளையாகிவிட்டாள்.'' செல்லம்மா அந்த நிகழ்ச்சியின் பின்ஞல் கனத்து நிற்கும் பொறுப்புகள் ஒன்றையும் சிந்திக்காது மிகவும் மகிழ்ந்தாள். ஒரு வசதியில்லாத குடும்பத்தில் பெண்கள் பருவமடைதலும் வேதனைக்குரிய சம்பவமாகிவிட்டதென்பதைச் செல்லம்மா அறிந்திருக்கவில்லை.

பஞ்சாங்கத்தைப் புரட்டிவிட்டு மார்க்கண்டு மாஸ்டர் சிவபாக்கியத்தைக் கூப்பிட்டார்.

''பொடிச்சி இண்டைக்குப் பக்குவப்பட்டிருக்கிற நாள் நட்சத்திரம் நல்லாக்கிடக்கு. அதோட இப்ப பூர்வபட்சம். நல்ல பலன்தான் செய்யும். கொண்ணரிட்டைச் சொல்லு. இந்த மாதம் பங்குனியாக இருக்கிறபடியாலே பின்போடாமல் வார திங்கட்கிழமை நல்ல நாளொன்று இருக்கு. அன்றைக்கு தண்ணீர் வாக்கலாமெண்டு.''

மார்க்கண்டு மாஸ்டரும், அவரது மைத்துனர் சோமசுந்தரமும் ஒருவரோடொருவர் அதிகம் பேசிக் கொள்வதில்லை. இருவருக்கிடையிலும் மனஸ்தாபங்களுமில்லை. அப்படி ஒரு சூழ்நிலை தானாகவே வளர்ந்துவிட்டது. எப்பொழுதாவது பெண்களுக்கிடையில் உண்டாகும் சிறு பூசல்களும் அவர்களின் இந்தப் போக்கால் சரிவந்து விடுவது வழக்கம்.

சிவபாக்கியம் குசினியில் நின்றபொழுது பனைமட்டை வரிச்சுகளினூடாக செல்லம்மா குனிந்து நிமிருவது தெரிந்தது.

''மச்சாள்! எப்ப தலைக்குத் தண்ணிவாக்கப்போறாய்? அண்ணை சொந்தக்காரருக்கெல்லாம் ஐஞ்சு, பத்தெண்டு குடுத்ததை வாங்க வேண்டாமே! கிட்டடிச் சொந்தக்காரருக்கு எண்டாலும் சொல்லிச் செய்யன். எங்கடை அவர் பஞ்சாங்கத்தைப் பார்த்துப் போட்டு அகிலா பக்குவப்பட்டது இண்டைக்கு மெத்த விசேஷமான நாளெண்டுசொன்னவர். வாற திங்கட் கிழமை நல்ல நாளொன்று இருக்காம்.''

சிவபாக்கியம் படபடவென அடுக்கிக்கொண்டு போனதைச் செல்லம்மா இடைமறித்தாள்.

''இல்லைப் பாக்கியம்! சாமத்தியச் சடங்கு செய்யிறதெண்டால் சும்மாவே. நாலு சனத்தைக் கூப்பிட்டால் மரியாதையாக நடத்த வேண்டாமே! அதுதான் கண்டியோ யோசிக்கிறன்.''

''உனக்கு எதுக்கெடுத்தாலும் கண்டறியாத யோசனை தான். ஒரு நூறை, இருநூறைப் போட்டுச் செலவழித்

தால் கடைசி ஒரு ஆயிரமாவது விழாதே.வேணுமெண்டா அவரிட்டைக் கைமாத்தா காசு வாங்கித்தாறன். விழுகிற காசிலே கொடடன்.'' என்ருள் சிவபாக்கியம்.

செல்லம்மாவிடமிருந்து சோமசுந்தரத்துக்குத் தாவியது இந்த யோசனை. சோமசுந்தரத்திற்கு இந்த ஏற்பாடெல்லாம் அவ்வளவு புத்திசாலித்தனமாகப்படவில்லை. அகிலா மூத்தமகளாக இருப்பதாலும், தனது குடும்பத்தில் நடக்கப் போகும் முதலாவது மங்களநிகழ்ச்சியானதாலும் அவரின் அடிமனதில் ஆசையொன்று உலுப்பிக்கொண்டிருந்தது. திருவிழாக்களுக்கெல்லாம் வாரியிறைத்துப் பழக்கப்பட்டவர், கடந்த கால அனுபவங்கள் அவரை ஏளனம் செய்ய அவரால் பொறுக்க முடியவில்லை.

சொந்தக்காரர்களென்று காசு விதைத்த இடங்களுக்கெல்லாம் குடும்ப சமேதரராக நடந்தும், பஸ்ஸுகளில் ஏறியும் அழைப்பிதழ்களைக் கொடுத்துத் திரிந்தார் சோமசுந்தரம்.

## 2.

அன்று திங்கட்கிழமைகாலை, வீட்டு முற்றத்திலிருந்த வெள்ளைக்கொழும்பு மாமரத்தில் ஒலிபெருக்கிக் குழாய்களைக் கட்ட அவை 'ஞானப்பழத்தைப் பிழிந்து' என முழங்கத் தொடங்கின. சந்திரசேகரன் அங்கு நிற்கப்பிடிக்காதவனாய் தனது வீட்டுப்பக்கமாக அடிக்கடி சென்று கொண்டிருந்தான். இரண்டு வீடுகளுக்கும் பொதுவான வைபவம் போல அமைந்துவிட்டதால், அவனுக்கு வேலைப் பளுவும் அதிகம்தான்.

அவன் இன்று பாடசாலைக்குப் போகவில்லை. வருட முடிவில் ஒன்பதாம் வகுப்புச் சோதனை எழுதப் போகிறான். நாளைக்குத் திரும்பவும் பள்ளிக்கூடம் போனால், நண்

பர்கள் சிலர் கிண்டலாகப் பேச்சுக்கொடுத்தால் அதை விளங்கிவிடக் கூடிய வயது அவனுக்கு. எப்படிக் கிண்டல் செய்தாலும், அவற்றை ஏற்றுப் பதிலுக்கொரு சிரிப்பை உதிர்க்கும் மனப்பாங்கு அவனுக்கில்லை.

அவன் ஒரு ரோசக்காரன். அவனுக்கு சட்டென்று கோபம் வந்துவிடும்.

★

குசினிக்குள் வெகு அமளி. பிட்டும், கழியும், பால் ரொட்டியும், பூக்களும், பழங்களும், தேங்காய்களும் அளவு கணக்காக ஒவ்வொரு தாம்பாளத்தில் அடுக்கப்பட்டிருக்கின்றன.

சோறு, கறிகள், சமையல் புறம்பான பகுதி.

கத்தரிக்காயை எண்ணெயில் வதக்கிவைத்த வெந்தயக் குழம்பு பெரிய சட்டியொன்றில் தளதளத்து மூக்கைத் துளைக்கிறது. பச்சை வெண்ணெய்போல நைசாகக்கடைந்து வைத்த முளைக்கீரைக் கறியும், சாம்பல் மொந்தன் வாழைக்காயில் போட்ட சம்பலும், பாவற்காய், பயிற்றங்காய், பூசணி, மரவள்ளிக்கிழங்கு ஆகியன தனித்தனிக் கறிகளாக அடுப்பிலிருந்து இறக்கிய சூட்டோடு ஆவி வர, அவ்விடத்தினருகே வருவோரின் பொறுமையைச் சோதிக்கின்றன.

மருதனு மடத்தில் கூடும் விடியப்புறச் சந்தையில் சந்திரசேகரன்தான் சைக்கிளில் போய் மரக்கறி வகைகளை மூட்டையாக வாங்கி வந்தான். அவற்றுடன் வாங்கி வந்த வாழை இலைக் கட்டுகள் நேரத்தை எதிர்பார்த்துச் சுருண்டு கிடந்தன.

சுபநேரம் நெருங்கியது.

கிட்டினர், ''அதைக் கொண்டுவா மோனை, இதைக் கொண்டுவா மோனை'' என்று சுட்டுவிரலால் பேசிக்கொண்டிருந்தார். சொந்தக்காரர்கள் யாராக இருந்தாலும் கிட்டினரை கட்டாயமாக தங்களது வைபவங்களுக்கு அழைத்துவிடுவார்கள். அவருக்கு ஒரு அரைப்போத்தல் சாராயத்

தைக் காட்டிவிட்டு, ''அண்ணை நீங்கள்தான் முன்னுக்கு நிண்டு எல்லாவற்றையும் நேர்சீராகப் பார்க்கவேணும்'' என்று அவரின் முதுகில் ஒரு முறை தட்டிப் பேசிவிட்டால் அந்தத் தட்டுதலுடன் பம்பரமாகச் சுழல்வார் என்பதை எல்லாரும் அறிவார்கள். இந்த விஷயத்தில் சோமசுந்த ரம் வெகு தாராளமென்பதைக் கிட்டினர் காட்டிக் கொண்டேயிருந்தார்.

என்னதான் பிசகினாலும் நிதானம் பிசகாது கிட்டின ருக்கு.

''எங்கை மாமன்காரன் முன்னுக்கு வரலாம்.'' அவரின் அழைப்பைக் கேட்ட மார்க்கண்டு மாஸ்டர் இடுப்பில்வரிந் திருந்த சால்வையை அவிழ்த்துத் தலையில் சுற்றினார். தேங் காயை எடுத்துப் பக்கம் பார்த்துக் கையில் புரட்டிய வாறு கத்தியை எடுத்துக்கொண்டு ஆயத்தமானார்.

அறுகம்புல்லும், பாலும் தலையில் வழிய அகிலாவைக் கிணற்றடிப்பக்கமாகக் கூட்டிச் சென்று ஒவ்வொருவரா கத் தண்ணீர் வார்த்தனர். இரவலாக வாங்கி வந்த நகை களைப் பூட்டினர். ஆனாலும் அவளின் சொந்தமான அழ குக்கு எந்தவொரு குந்தகமும் ஏற்படவில்லை.

பெண்களின் பட்டுச் சேலைகள் சரசரக்க, கொண்டை களில் வைத்த மல்லிகைப் பூக்களின் நறுமணம் புடைசூழ, நடுவே மெல்லென நடந்து வந்தாள் அகிலா. அவளைச் சூழ்ந்து நின்றோர் ஒளி மங்கினார்கள். செல்லம்மா, மகளின் சேலையை ஒருமுறை சரிசெய்துவிட்டு பின்னால் வந்துகொண் டிருந்தாள்.

சந்திரசேகரன் விறாந்தையோரமாக யன்னலருகே நின் றான். நடு அறையில் அகிலாவை நிறுத்தி ஆரத்தி எடுத் துக் கொண்டிருப்பதை, அவன் திரும்பிப் பார்த்தால்,இந்த யன்னலினூடாகத் தெரியும். அவளின் தோற்றத்தைப் பார்க்க விரும்பியவனாகவும், விரும்பாதவனாகவும் அலைக் கழிக்கப்பட்டுக் கொண்டிருந்தான். என்றாலும் அவனுடைய கண்கள் அவளை ஒரு கணப்பொழுது மிஞ்சிவிட்டன. திடீ ரென மறுபக்கம் திரும்பிக் கொண்டான். விறாந்தையில்

நிறைகுடத்தருகே வைக்கப்பட்டிருந்த இரண்டு 'எவர் சில்வர்' குத்துவிளக்குகளிலும் எண்ணெய் வற்றி புகை கிளம்புவதைக் கண்டவனாய் எண்ணெயை ஊற்றித் திரிகளைத் தூண்டி விட்டான்.

அவன் மனதிலும் நினைவலைகள் தூண்டப்படுகின்றன.

★

''எடி முழிச்சி! நீயேடி என்னுடைய புத்தகங்களைக் குழப்பினது?'' சந்திரசேகரன் சிறுவயதில் அகிலாவை அப்படித்தான் கோபம் வரும்போது கூப்பிடுவான்.

''போடா பீப்பா! நானேன் உன்னுடைய புத்தகங்களை எடுக்கிறன்?'' என்பாள் அகிலா.

அவளும் வாயாடிதான்.

சந்திரசேகரன் பக்கத்து வேலியில் நின்ற பூவரச மரத்தில் தடியொன்றைப் பிடுங்கிக்கொண்டு அவளைத் துரத்தினான்.

''அடிச்சியோ மாமியிட்டைச் சொல்லி உனக்குக் கண்ணுக்கு மிளகாய் போடுப்பன்.'' அவள் ஓடிக்கொண்டே போனாள். ஓடிய வேகத்தில் கம்பி வேலி ஒன்றில் தடக்கி விழுந்தாள். அவள் விழுந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க முயன்றாள். முடியவில்லை. சந்திரசேகரன் ஓங்கிய கையுடன் சமீபிப்பதைத் தவிர அவளுக்கு வேறொன்றும் தெரிந்திராது.

அவனின் கொடூரமான பார்வைக்காக பயந்து நடுங்கினாள்.

''உனக்கு எத்தனைதரம் சொல்லியிருக்கிறேன் பீப்பா எண்டு சொல்லாதை எண்டு...!''

''.........'' பதில் ஏதும் இல்லை.

அவளின் கண்கள் குளமாகி நின்றன. 'அடித்து விடாதே' என ஏங்கின. சந்திரசேகரனின் முகத்தில் வியாபித்திருந்த கொடூரம் ஓடி மறைந்தது. ஓங்கிய கை தானாகவே கீழே விழுந்தது. அவள் காலின் பெருவிரலுக்கு மேலே பொத்தியிருந்த கையை விலக்கினாள். இரத்தம் குபுகுபுவென ஓடியது. சந்திரசேகரன் மலைத்து நின்றான்.

நிலச்சூடு பிடித்திருந்த ஓட்டுத் துண்டொன்றை எடுத்து காயத்தில் அழுத்திப் பிடித்தான். அவள் தொங்கித்தொங்கிக் கத்தினுள். இரத்தம் கசிவது ஒருவாறு கட்டுப்பட்டது.

''அகிலா, நான் கலேச்சுத்தான் நீ விழுந்தது எண்டு ஐயாவிட்டைப் போய்ச் சொல்லுவியே?''

அவளின் கோபம் தணிந்துவிட்டாலும் அழுகை தணியாதவளாக கண்களில் நீர்முட்ட நின்ருள், ''இல்லே...'' என்ற பாவனையில் தலேயை மட்டும் ஆட்டிவிட்டு, சந்திரசேகரனின் கையைப் பிடித்தவாறு எழுந்து நின்ருள்.

''மெல்ல மெல்ல நடந்து வா! வீட்டை போய் ஏதேன் மருந்து போடுவம்.''

அவளின் கையைப் பிடித்தவாறு நொண்டி நொண்டிச் சென்றுகொண்டிருந்தாள் அகிலா.

வீட்டுப் படலேயைத் திறந்ததுமே செல்லம்மா ஓடிவந்தாள்.

''என்னடி அகிலா! காலெல்லாம் இரத்தமாகக் கிடக்கு?''

''அதம்மா முள்ளுக் கம்பியிலே தடக்கி விழுந்து போனன். சந்திரன்தான் என்னேக் கூட்டியந்தது.''

''உனக்குக் கண்கடை தெரியாமல் ஓடத்தான் தெரியும். இஞ்சாலே வா! கழுவிப்போட்டு மருந்துபோட வேணும்!''

சந்திரசேகரன் நன்றியோடு அகிலாவைப் பார்த்துவிட்டு, தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். 'அவள் பாவம்! இனிமேல் இவளுக்கு அடிக்கக்கூடாது. என்னே எப்பிடி வேணுமெண்டாலும் சொல்லிப்போட்டுப் போகட்டும்.'

அவன் தனது வீட்டை நோக்கி நடக்கிருன்.

★

சந்திரசேகரனின் நினேவுகள் விரிந்தன—

சோமசுந்தரத்தின் காலில் வாதம் வந்துவிட்டதால் படுத்த படுக்கையாகப் போய்விட்டார். அவர் வேலேசெய்து

பட்டறையில் தூசி படிந்து பல நாட்களாயின, கையை நம்பிச் சீவித்தவர், பாயோடு படுத்துவிட்டதால் வீட்டில் உள்ள பொருள் பண்டங்களை விற்றுத்தான் அவருடைய பிள்ளைகளுடைய வயிறுகள் நிரப்பப்படுகின்றன. 'அதுவும் எத்தனை நாளைக்கு?' என்ற பயத்தின் முன்பாக அவரின் வாழ்க்கை அசைகிறது. மாஸ்டர் சில சமயங்களில் மனைவியின் தூண்டுதலால் 'ஏதாவது உதவி செய்யலாம்' என்ற நோக்கத்தோடு முன்வரும்போதெல்லாம் சோமசுந்தரம் நறுக்காகப் பேசி மறுத்துவிடுவார். ''உள்வீட்டுக் கடனும் உள்ளங்கையிற் புண்ணும் ஒன்றுதான். சிவனே எண்டு அப்பு ஆச்சி தேடிவைச்ச தளபாடங்களும் பித்தளை, வெண்கலப் பாத்திரங்களெண்டு கிடக்கு. இதுகளை வித்துச் சுட்டுச் சாப்பாடு போடுவதை விரும்புவேனேயொழிய இன்னொருத் தரிட்டைக் கடமைப்பாடு படுறதை விரும்பமாட்டன்'' என்று சொல்லி மறுத்துவிடுவார். வாழ்க்கையில் எந்த நிலைக்குத் தள்ளப்பட்டாலும் சோமசுந்தரம் தனது கோட்பாடுகளை விட்டுக்கொடுக்கமாட்டாரென்பதையும் மாஸ்டர் அறிவார். என்றாலும் தன்னால் முடிந்த உதவியைச் செய்யலாமென்று வந்தால்கூட சோமசுந்தரம் முறித்துவிடுகிறாரே என்று மனதார வேதனைப்படுவதும் உண்டு.

அன்றும் சோமசுந்தரம் தனது வீட்டுச் சுவரில் மாட்டியிருந்த 'சுவர் மணிக்கூட்டை'க் கழற்றி அவரின் தளபாடங்கள் எல்லாவற்றையும் அரைவிலைக்கு ஏப்பம்விட்ட ஓவசியர் சுப்பிரமணியத்திடம் அடவு வைத்து ஒரு இருபத்தைந்து ரூபாவாவது பெறலாமென்ற யோசனையில் தனது மகளைக் கூப்பிட்டார். அந்த மணிக்கூட்டில் அவருக்கு ஒரு அபிமானம் பல வருடங்களாக இருந்தது. அவரின் மனதில் எழும் பிரச்சினைகளுக்கெல்லாம் 'டாண், டாண்' என்று மணியடித்து முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. இதனால் அவர் ஒரு தனிப் பற்று வைத்திருந்தார். அதுதான் அதை விற்க முன்வரவில்லை.

''அகிலா! இஞ்சை வா! உவன் சந்திரனையும் கூட்டிக் கொண்டு போய் இந்த மணிக்கூட்டை வைச்சுக்கொண்டு

ஒவசியரிட்டை ஒரு இருபத்தைஞ்சு ரூபா தரச்சொல்லு. கெதியாய் வட்டியோடை திருப்பி எடுக்கிறன் எண்டு சொல்லு.''

''படிக்கிற பொடியள் ஒரு அவசரத்துக்கு நேரம் பார்க்க வழியில்லாமல் உதையும் கொண்டுபோய் அந்தா ளிட்டைத்தான் அடக்கம் பண்ணுங்கோ.''

செல்லம்மாவின் வழக்கமான புராணங்கள்தான் இவை என்பதைச் சோமசுந்தரம் அறியாதவரா என்ன?

''போ! போ! நீ போய் உன்ரை அலுவலைப் பார். கடைசியிலை போகேக்கை நீ எல்லாத்தையும் கட்டிக் கொண்டுதான் போகப்போறாய். எல்லாம் வாறநேரம் வரும், போறநேரம் போய்த்தான் தீரும்'' என்று சமா ளித்துவிடுவார்.

சந்திரசேகரன் மணிக்கூட்டைத் தூக்கித் தலையில் வைத் தான். அகிலா பின்தொடர்ந்து சென்றாள். சிறிது நேரத்தின்பின் அகிலா மணிக்கூட்டைச் சுமந்துகொண்டு திரும்பி வருவதைக் கண்ட சோமசுந்தரம், ''நீ இருக்கிறாய் எல்லாத்துக்கும் தடைபோட. எப்பிடிப் போற காரியம் சரிவரும்.'' செல்லம்மாவுடன் எரிந்து விழுந்தார்.

''அவர்கள் நகைநட்டுத்தானும் அடைவு பிடிக்கிறது. இதை வேணுமெண்டால் விலைக்கு வாங்கினமாம். முப்பத் தைஞ்சு ரூபா தருகினமாம். கேட்டுக்கொண்டு வரச் சொன்னவர்'' என்றாள் அகிலா.

சோமசுந்தரம் சிறிதுநேரம் யோசனையில் ஆழ்ந்தார். நான்கு நாட்களாகத் தகரப் பேணியொன்றில் செல்லம்மா சேர்த்து வைத்திருந்த கோழிமுட்டைகளை அன்று காலை யில்தான் யாருக்கோ கொடுத்துவிட்டு வாங்கிய காசில் பாண் வாங்கி எல்லாருமாகச் சாப்பிட்ட ஞாபகம் வந்தது.

''கொண்டுபோய்க் குடுத்துத் தொலை'' என்றார்.

''என்னாலை அவயின்ரை வீட்டுக்குப் போக ஏலாது. அவை கனக்க நொட்டை விடுகினம். எனக்குச் சரியான கோபம்தான் வந்தது. வேணுமெண்டால் மாமா அகிலா

வைப் போகச் சொல்லுங்கோ'' என்று சந்திரசேகரன் போக மறுத்தான்.

''ஒருக்கால் அந்தப் படலைமட்டும் வாறியே சந்திரன். வழியிலை நிக்கிற நாய்கள் குலைச்சுக்கொண்டு வரும்'' என்று கெஞ்சினுள் அகிலா.

''வேணுமெண்டா அந்தச் சந்திமட்டும் வாறன். அங் காலை நீ தனியாப் போவாயெண்டால் வா.''

மீண்டும் மணிக்கூட்டுடன் இருவரும் புறப்பட்டனர். சந்திரசேகரன் அந்தச் சந்தியிலிருந்த புளியமரத்தடியில் நின்றுகொண்டான். அகிலா தனியாகப் போனுள். அவன் அங்கு நிற்கும்பொழுது ஓவசியர் வீட்டுக் கதவுவரை தெரிந் தது. அகிலா மணிக்கூட்டைக் கொடுத்துவிட்டுக் கைகளை வீசி நடந்து வந்தாள். சந்திரசேகரனிடம் முப்பத்தைந்து ரூபாவை எண்ணிக் காட்டினுள். அவன் புளிய மரத்துக் கொப்புகளில் பிடுங்கிய புளியம் பூக்களை அவளிடம் கொடுத்தான். இருவரும் வாயில் போட்டுச் சப்பியவாறு வந்துகொண்டிருந்தனர்.

''ஐயா! இந்தாருங்கோ காசு'' என்று அகிலா காசை நீட்டினுள் தகப்பனிடம்.

''கொண்டுபோய்க் கொம்மாவிட்டைக் குடு பிள்ளை. போய்க் கூப்பன் சாமான்களை வாங்கிக்கொண்டு வரட்டும். மிஞ்சிற காசிலை இண்டைக்கெண்டாலும் மீனைக் கீனை வாங்கிக் காய்ச்சச் சொல்லு.''

அகிலா தாயிடம் கொண்டுபோய்க் காசை நீட்டினுள். செல்லம்மா காசைக் கையில் விரித்தபடியே சோமசுந் தரத்திடம் வருகிருள். ''அந்த டாக்குத்தரெல்லே அண் டைக்கு இந்த வாதத்துக்கு நல்லதெண்டு ஏதோ மருந் தெழுதித் தந்தது. அந்தத் துண்டை எடுத்துக்கொண்டு போய் முதலிலை மருந்தை வாங்குவம். பிறகு மிஞ்சிற காசிலை மற்ற அலுவலைப் பாக்கிறது. அந்த மருந்தைக் குடிச்சா கெதியெண்டு சுகம் வருமெண்டெல்லே சொன் னது. வேலை வெட்டியில்லாமல் இருக்க இருக்கக் கடன்

தான் கூடிக்கொண்டு போகும். கடைசியிலே காணி பூமியையும் வித்துச் சுட்டுத் தின்னவேண்டி வரும்.''

செல்லம்மாவிடம் மருந்துச் சிட்டையை நீட்டுகிருர் சோமசுந்தரம்.

★

சந்திரசேகரனின் பார்வை அந்தக் குத்துவிளக்குகளின் மேல் நிலைத்து நின்றது.

பந்தியை ஒழுங்குபண்ணுவதில் மும்முரமானுர் கிட்டினர். ''டேய் தம்பி! இங்காலே வாவென். மிலாந்திக் கொண்டு நிக்கிருய். பாய்களை எடுத்து விரிச்சுப்போட்டு இலைகளை எடுத்துப் போடு'' என்று சந்திரசேகரனை அனுப்பி விட்டுச் சோமசுந்தரத்தைக் காணுததால் அங்குமிங்கும் பார்த்துக்கொண்டிருந்தார்.

கம்பளத்தின் நடுவில் பூப்போல அமர்ந்திருக்கிருள் அகிலா. பக்கத்திலிருந்த சொந்தக்காரப் பெண்ணொருத்தி அகிலாவின் கையில் ஒரு கடித உறையைக் கொடுத்துவிட்டு, ஏதாவது பேச்சுக்கு ஒரு வார்த்தையாவது பேசவேண்டுமென்ற சம்பிரதாயம் உள்ளதுபோல, பக்கத்தில் நின்ற சிவபாக்கியத்தைப் பார்த்து, ''என்ன பாக்கியம்! மருமோளை இப்பவே கடுமையாகப் பார்க்கிருய்? அவளை உன்ரை மோனுக்கு எடுக்கிறதெண்டால் நீதான் செல்லம்மாவுக்குச் சீதனம் கொடுக்க வேணும். அவளுக்கு எத்தனை பேர் போட்டி போட்டுக்கொண்டு வருவினம் பாரன் இருந்து.'' அவள் வெறும் நகைச்சுவைக்காகவோ அல்லது விழல் பேச்சாகவோ சொன்ன வார்த்தைகள் செல்லம்மாவையும், சிவபாக்கியத்தையும் மிகவும் ஆழமாக ஊடுருவின.

மாஸ்டர் அகிலாவின் பக்கத்திலிருந்து கொப்பியொன்றில் உடனுக்குடன் கடித உறைகளைப் பிரித்துக் காசை எண்ணிக் குறித்துக் கொண்டார். சிலர் கடித உறைகளில் நாகரிகமாக மறைத்துத் தமது அன்பளிப்புகளைக் கொடுத்தனர். சிலர் தமது மனம் போலவே வெளிப்படையாக எல்லார் முன்னிலையிலும் எண்ணி அகிலாவின் கையில்

கொடுத்துவிட்டுப் போயினர். சோமசுந்தரத்தின் கள்ளுக் கொட்டில் நண்பர்களும், அயலிலுள்ள உறவினரல்லாத வேண்டியவர்களும் பந்தி முடிந்த பின்பு வந்து சிறப்பித்துச் சென்றனர்.

மாலை மயங்கி இரவு வந்தது.

யாரும் இனி பிற கிராமங்களிலிருந்து வரமாட்டார்கள் என்பது சோமசுந்தரத்துக்குத் தெரியும். மாஸ்டர் மேலோட்டமாகக் கணக்கைப் பார்த்துவிட்டுச் செலவுகள் தள்ளி, தான் கொடுத்துதவிய நானூறு ரூபாவையும் சிரமத்துடன் தாண்டிவிட்டதை அறிவித்தார். இதுவரை செலவழிந்தது போக மாலை கட்டியவருக்கு, ஒலிபெருக்கிக்கு, பெற்றோமக்ஸ் வாடகை, வேறும், சில்லறைச் செலவுகள் என்று இன்னும் பாக்கி இருக்கிறது. கையில் கடிக்கப்போகிறது. 'வெளியே ஒருக்கால் போய்விட்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு சோமசுந்தரம் போய்விட்டார். ஒலிபெருக்கிக் குழாய்களின் அலறல் அவரை உருட்டிச் சென்றது.

''எத்தனை மடையன்களுக்கெல்லாம் வேலைவெட்டியெல்லாம் விட்டுட்டுப் போய் காசாய் இறைச்சிருப்பன். நன்றி கெட்டவங்களாக் கிடக்கே. என்னட்டை வேலை பழகின ஒரு பயலும் வரேல்லை... பாரன். நான் ஐவீசா இருக்கிற நாளிலை எல்லாருக்கும் நான் அண்ணையும், மச்சானும், குஞ்சி அப்புவும். நானும் ஒரு மடையன். அவள் செல்லம்மா சொல்லக்கூடக் கேக்காமல் உவங்களெல்லாரையும் இழுத்துப் பிடிச்சன். வேள்வியளுக்கு கிடாயெடுத்து அவிச்சு எத்தினை பேருக்குக் கொட்டியிருப்பன். வீடு வீடாய்ப்போய் நானும் மடைவேலை செய்துபோட்டன். இப்ப எனக்கு வந்த நட்டத்தை ஆர் இழுத்துக் கட்டப்போகினம். உவள் சிவபாக்கியந்தான் எல்லாத்துக்கும் காரணம். அவளுக்கென்ன? விழுந்த காசிலை நான் எண்ணிக் குடுப்பனெண்டு அவளுக்குத் தெரியும். எனக்கேன் உந்த வாத்தியின்ரை உழைப்பை?''—

தனது சிந்தனைகளைக் கள்ளுக் கொட்டிலில் கொட்டிவிட ஓடிக்கொண்டிருந்தார் சோமசுந்தரம்.

## 3.

இரவு பத்து மணியிருக்கும். சோமசுந்தரத்தின் பிள்ளைகளும், மாஸ்டரின் பிள்ளைகளும் நடு அறையில் விரித்திருந்த கம்பளத்தில் சுகமாக உறங்குகின்றனர். அவர்களின் மேலே 'பெட்ரூமாக்ஸ்' லாம்பு 'புஸ்' என்று இரைந்து கொண்டிருந்தது.

அகிலா உடலில் இதுவரை பாரமாக இருந்த வேஷத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் அரைப்பாவாடையுடனும், சட்டையுடனும், குடு குடுவென ஓடிக்கொண்டிருந்தாள். சந்திரசேகரன் அங்கு இல்லை? தனது வீட்டில் மேசை லாம்பைக் கொளுத்தி வைத்து ஏதோ படித்துக்கொண்டிருந்தான். வயது வந்தோரின் அமளி இன்னும் குறைந்தபாடில்லை.

சிவபாக்கியம், சோமசுந்தரத்தின் கிட்டவந்து மிகவும் மெல்லிய குரலில், ''அண்ணை! அவரிட்டை நான் வாங்கித் தந்த நானூறு ரூபாயிலை ஒரு முன்னூறை இப்ப தாவன்; மிச்சத்தை இரண்டொரு மாசம் கழிச்சுத் தாவன்'' என்றாள் தயங்கியபடி.

''சிவபாக்கியம்! என் கை கொஞ்சம் வறண்டு போனதாலை நீயும் பயப்படுகிறாய். நான் உன்னைப் பிழை சொல்லேல்லை. உலக நடப்பே இப்பிடித்தான். நீ மட்டும் விதிவிலக்காய் எப்பிடி இருக்க முடியும்? மற்றவங்கள்தான் என்னை நம்புகிறாங்களில்லை எண்டு நானும் மடையன் வீணாக யோசிச்சன். கூடப் பிறந்த சகோதரமே சமசியப் படுகிற நிலை வந்திட்டுது. எல்லாம் என்ரை காலந்தான்.''

''ஏன் அண்ணை இப்பிடி வீணாக அநியாயம் சொல்லுறாய்; உனக்குக் கஷ்டம் எண்டு நினைச்சுத்தானே நூறு ரூபாயைப் பிறகு தா எண்டனான். இதுக்காக ஏதோ கதையெல்லாம் கதைக்கிறாய்.''

''இஞ்சை பார்! நான் எல்லாரையும்பற்றி பழமும் திண்டு கொட்டையும் போட்டனுன். எனக்கு எல்லாரைப் பற்றியும் வடிவாகத் தெரியும். நீ போ! உன்ரை அலுவலைப் பார்'' என்று சோமசுந்தரம் சொல்லிக்கொண்டு புகையிலையை எடுத்துச் சுருட்டுச் சுத்துவதற்கு முனைந்தார்.

சிவபாக்கியம் உள்ளே போய்விட்டாள்.

கிட்டினர் தனது பழங்கால அனுபவம் ஒன்றுக்கு வாலும் தலையும் வைத்துச் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தார். நான்கைந்து பேர்கள் அவரைச் சுற்றிக் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

சோமசுந்தரம் பிசிறுகக் கிடந்த புகையிலைக் காம்பு களைப் பற்களால் கடித்துத் துப்பிவிட்டு பற்களுக்கிடையில் நெரித்துப் பிடித்த சுருட்டில் நெருப்பைப் பற்றவைத்தார். அவரின் இதயத்திலும் நெருப்புப் பற்றிக்கொண்டிருந்தது. அவர் யாழ்ப்பாணம் போய்விட்டுத் திரும்பிவருவதற்குச் சில நாட்களில் 'பட' பஸ்ஸைத்தான் பிடிக்கவேண்டியிருக் கும். அது வந்து சேர இரவு பதினெரு மணிக்கு மேலாகி விடும். சிவபாக்கியம் அரிக்கன் லாம்பைக் கொளுத்தித் திண்ணையில் வைத்துவிட்டு அதனருகில் சாப்பிடாமல் படலை யைப் பார்த்தவாறு இருப்பாளே — அந்த நாட்களை நினைத் துப் பார்க்கிறுர் சோமசுந்தரம். கண்களில் அவரையறியா மலே கண்ணீர் சுரப்பதை அறிந்த சோமசுந்தரம், சால்வை யால் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

கிட்டினர் தனது பழங்கால அனுபவங்களைப்பற்றிய ஆலாபனைகளை முடித்துக்கொண்டு வெற்றிலைத் தட்டத்தைத் தனக்கருகே இழுக்கிறுர். சோமசுந்தரமோ இன்னும் தனது பழங்கால நினைவிலிருந்து மீண்டவராகக் காணப்படவில்லை. சிவபாக்கியத்தின் வார்த்தைகள் அவரின் இதயத்தில் மிக வும் ஆழமாகப் பாய்ந்துவிட்டதல்லவா?

இரவு பதினெரு மணிக்கு மேலாகிவிட்டது. சோமசுந்த ரத்தின் வீட்டில் நின்றேர் எல்லாரும் விடை பெற்றுவிட்ட னர், மாஸ்டரும், சந்திரசேகரனும், சிவபாக்கியமும் அவர் களுடைய வீட்டுக்குப் போனுர்கள். சந்திரசேகரனின் சகோ

தரிகளான ஈஸ்வரியும், கமலாவும் அகிலாவின் சகோதரிகளு டன் உறங்கிக்கொண்டிருந்ததால் அங்கேயே விட்டுவிட்டுப் போனுர்கள். சோமசுந்தரம் வழமையாகத் தலைமாட்டில் வைத்திருக்கும் குப்பி விளக்குடனும், சுருட்டுடனும் விருந் தையில் பெருமூச்சோடு சரிந்தார்.

## 4.

ஆனி உத்தரத்தோடு கோவிலில் திருவிழாக்கள் ஆரம்பமாகிவிட்டன. ஏழாம் திருவிழா சோமசுந்தரம் குடி யிருக்கும் பகுதி மக்களுடையது. செலவுகளை வசதிக்கேற்ப பகிர்ந்துகொள்வார்கள். இந்த வருடம் ஏழாம் திருவிழா வுக்கு 'வள்ளி திருமணம்' கூத்து ஏற்பாடாகியிருந்தது.

கூத்தென்ருல் அவ்வூர் மக்கள், இரவு எட்டு மணிக்கே சாப்பாட்டை முடித்துக்கொண்டு பாய்களும், அரிக்கன் லாம்புகளுடனும் வந்து வீதியில் ஆங்காங்கே அமர்ந்துவிடு வார்கள். பிற்பாட்டுக்காரர் ஆர்மோனியத்துடன் சமர் செய்து இசையெழுப்ப, மேடையின் ஓரத்தில் கதாநாயகன் வேஷம் போடுபவர் சுரங்களுக்குத் தாளம் போட்டபடியே தனது வலது கரத்தைச் சனங்களுக்கு நீட்டிக் காட்ட இரண் டாஞ் சாமக் கோழி கூவிவிடும்.

இரத்தினமே திருவிழாவை முன்னின்று நடத்துகிருன். அவன் ஒரு வாடகைக் காருக்குச் சொந்தக்காரன். அவனிட முள்ள காரை அவனிடமிருந்து கழித்துவிட்டால் அவன் செல்லாக் காசுதான். அவனுடைய கைகள்தான் மிஞ்சும். அவனுக்கு வயதோ முப்பத்தைந்தைத் தாண்டி வெகு நாட்களாகிவிட்டன. அவனை யொத்த அவனின் நண்பர்க ளெல்லாம் குடியும் குடித்தனமுமாகிவிட்டார்கள். அவன் அப்படியான வாழ்க்கை யொன்றைப் பற்றிச் சிந்தித்துக்கூட இருக்கமாட்டான். அவனுடைய வாழ்க்கை முறை அப்

படித்தான் இருந்தது. குடும்பத்தில் மூத்தவனுகப் பிறந்து தனக்குப் பின்னுல் அடுக்கடுக்காகப் பிறந்துள்ள சகோதரங் களைச் சுமக்கிருன். உலகத்திலுள்ள நோய்களெல்லாவற்றை யும் தன்னுடலில் சுமந்துகொண்டு, இரத்தினத்துக்கு இன்னு மொரு பாரமாக வாழ்ந்துகொண்டிருக்கிருர் அவனின் தந்தை. அவனின் கார் 'ஹயர்' ஓடினுல்தான் அந்த வீட் டில் நெருப்புப் புகையும். என்ருலும் அவனின் நெஞ்சுரமும் இரும்புச் சட்டம் போன்ற உடற்கட்டும் வாழ்க்கையில் ஏற் படும் இன்னல்களை இலகுவாகத் தாங்கிக்கொள்ளும் பாங் குடையன. அவனுடைய பேச்சில் என்றும் வசீகரமும், உறுதியும் இருக்கும். இத்தகைய சிறப்பம்சங்கள்தான் அவன் பலரையும் ஒன்று சேர்த்துத் திருவிழாவை முன் னின்று நடத்த உதவுகின்றன. அன்றைய திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் இரத்தினத்தின் மேற்பார்வையில்தான் நடைபெறுகின்றன. பனங் குத்திகளை நிலத்தில் நட்டு மேடை அமைப்பு நடந்துகொண்டிருக்கிறது.

''எடே ரத்தினம்! இண்டைக்குக் கூத்து நடத்த ஏலா தாம். கோயில் முகாமையாக்கள் முடிவு பண்ணியிருக் காம். கதிரேசு வந்து என்னட்டைச் சொல்லிப் போட்டுப் போனுர்'' என்று சோமசுந்தரம் பேச்சை முடிக்கவில்லை, ஓவசியர் சுப்பிரமணியமும் வேறும் பல பிரமுகர்களும் அவர்களுடைய கையாட்கள் புடைசூழ மேடை கட்டிக் கொண்டிருக்கும் இடத்தை நோக்கி வந்தனர்.

ஓவசியர் சுப்பிரமணியத்தார்தான் கோவில் முகாமை யாளர். பிரச்சினைக்குரிய விஷயமொன்று தீர்க்கப்பட வேண்டியதால் அவரின் வருகை அவசியமாயிற்று.

''போன வருஷத்தோடை இந்தக் கோயிலிலை சின்ன மேளக் கச்சேரி, கூத்து எண்ட வேடிக்கையள் வைச்சுக் கொள்ளப்படாதெண்டு முடிவு பண்ணினது உங்களெல்லா ருக்கும் தெரிந்திருந்தும் ஏன் கூத்துக்கு ஆயத்தப்படுத்துறி யள்? உந்தக் கட்டைகள் எல்லாத்தையும் கழட்டிப் போட் டுக் குப்பை கைஞ்சலை வீதியிலை போடாமல் வேற எங்கை

யாகிலும் கொண்டுபோய்ப் போடுங்கோ'' — என்று ஓவசியர் நிதானமாக, மிடுக்காகச் சொல்லி முடித்ததும்—

இரத்தினம் எழுந்து வந்து கிடங்கு கிண்டிக்கொண்டிருந்த அலவாங்கை நிலத்தில் ஓங்கிப் புதைத்தான். அவன் பின்னல் அங்கு வேலைசெய்துகொண்டு நின்ற சில இளவட்டங்கள், சந்திரசேகரன் உட்பட வந்து நின்றூர்கள்.

''அப்ப எப்பிடி நாலாந் திருவிழாக்காரரைச் சின்ன மேளம் கொண்டுவர விட்டனிங்கள்?'' என்று கேட்டான் இரத்தினம்.

''அதைப்பற்றி நீ கேக்கத் தேவையில்லை. கூத்து நடத்தேலாதெண்டா் நடத்தேலாதுதான். மற்றக்கதை உனக்கென்னத்துக்கு?''—ஓவசியர்.

கூட்டத்தில் ஒருவர் ஆத்திரத்துடன் பேசினூர்:

''கண்ட சாதி ஆட்களெல்லாம் முருகன் வேஷம் போட்டுக்கொண்டு மேடையில நிக்க நாங்களெல்லாம கீழே நிலத்தில் அவரைப் பார்த்துக்கொண்டெல்லோ இருக்கவேணும்'' —இது இன்னெருவரின் குரல்.

''உங்களோடை ஞாயம் பேசிப் பிரயோசனமில்லை. உங்களுக்கு ஆளணி இருக்கு. நினேச்சதை நடத்துவியள். நாங்கள் இண்டைக்கு கூத்து நடத்த விடவேணும். இல்லாட்டி ஏழாம் திருவீழாவை இனிமேலைக்கு நீங்களே நடத்துங்கோ. அதுதான் எங்களுக்கு எவ்வளவோ நல்லது''— இரத்தினம் சொல்லவேண்டியதைச் சொன்னுன்.

''அப்ப திருவிழாவை விடப்போறியளோ? என்ன சோமசுந்தரம் பேசாமல் நிக்கிறுய்?''

''என்னத்தைச் சொல்லுறது? இ ர த் தி ன ந் தா னே சொல்லவேண்டியதெல்லாத்தையும் சொல்லிப்போட்டுது'' என்று சோமசுந்தரம் கூறவும், இரத்தினம் நிலத்தில் இறுகியிருந்த அலவாங்கைக் க ழ ற் றி க் கையிலெடுத்தான். ''வாருங்கோடா போவம்'' என்று கயிற்றுக் கட்டைத் தோளில் போட்டுக்கொண்டு புறப்படலானுன். சோமசுந்தரமும் அவனைப் பின் தொடர்ந்தார்.

இதன் பின்பும் கோவிலின் மேற்குப் பகுதி மக்கள் பல சந்தர்ப்பங்களில் ஓவசியரதும் அவருடைய சகாக்களினதும் கோபங்களுக்கு ஆளாகி, அவர்களிடையே பரந்திருந்த வறுமை, கல்வியறிவின்மை, பொருமை காரணமாக மேலும் மேலும் கஷ்டங்களுக்குள்ளானுர்கள்.

சந்திரசேகரனின் குருத்து மனதில் இவையெல்லாம் பதிந்துகொண்டேயிருந்தன.

## 5.

சந்திரசேகரன் ஒன்பதாம் வகுப்புச் சோதனையில் சிறப்பாகச் சித்தி பெற்றுப் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சை எடுப்பதற்காகப் பிரபல கல்லூரி ஒன்றில் சேர்ந்து கொண்டான். பரீட்சைகளும், படிப்பும் என்ற மட்டில் இருந்தவனுக்கு, பட்டப்படிப்பு முடிந்து இன்னும் தொழில் கிடைக்காததால், சில பையன்களுக்கு 'டியூஷன்' சொல்லிக் கொடுத்து வயிறு வளர்க்கும் மாணிக்கராஜாவின் தொடர்பேற்பட்டது. சந்திரசேகரனும் அவனையொத்த வேறு சில பையன்களும் மாணிக்கராஜாவையே வட்டமிட்டுக்கொண்டிருந்தனர். கோவில் மடத்தில் மாலை நேரங்களில் அவர்களின் அரசியல் சர்ச்சை நடைபெருத நாளே இல்லை. மாணிக்கராஜா இதமாக, இனிமையாக, விளக்கமாகப் பேசுவான். பொருளாதார, சமூக, அரசியல் முரண்பாடுகள் பற்றியும், அதனுல் ஏற்பட்ட நோய்க்கு மருந்து எதுவென்றும் கூறுவான். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களான அப்பையன்களும், தம்மிடையே வந்த ஓர் ஒளி விளக்காக மாணிக்கராஜாவைக் கருதினுர்கள். நாளடைவில் மாணிக்கராஜாவின் செல்வாக்கு வெகுவாகப் பரவிவிட்டது.

இரத்தினத்தின் வீட்டிலிருந்த கராச்சினருகே ஒரு கொட்டில் போட்டு, புதினப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்

சிலவற்றைத் தனது சிறிய ஊதியத்தில் வாங்கி மாணிக்க ராஜா, அதை ஒரு சிறிய வாசிகசாலை என்ற மட்டில் இயக்கி வந்தான்.

''பொடியன்ரை படிப்பைப் பாழாக்கிறான்; மாற்றம் வேணும், மண்ணுங்கட்டி வேணுமெண்டு இதுகளும் அவன் பேச்சைக் கேட்டு அநியாயமாக மண்ணகைப் போகுதுகள்''—

மாணிக்கராஜா ஒரு நாள் மாலை கோவில் மடத்தைத் தாண்டிக் கொண்டு போனபோது இவ்வாறு கேட்டது. மடத்தில் மாலை நேரங்களில் பொழுதைக் கழிக்க வரும் சில பெரிய மனிதர்கள் மத்தியிலிருந்துதான் இந்த வார்த்தைகள் வந்தன என்பதையும் மாணிக்கராஜா கவனிக்கத் தவறவில்லை.

அந்த வார்த்தைகளுக்குச் சவாலாக, அக்கோவிலின் வெளிப்புற வீதி மதிலில் ஒரு நாள் சிவப்பு மையினால், கொட்டை எழுத்துக்களில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது.

கோவில் கட்டிடமே சுக்கு நூருகச் சிதறிவிடுவது போலிருந்தது அதை வாசித்த சிலருக்கு. அந்த வாசகத்தின் பின்னணியில் மாணிக்கராஜாதான் நிற்கிறான் என்பதை ஊகிக்க அவ்வூர் மக்களுக்கு அதிக நேரம் பிடித்திராது.

அந்த மதிலில் எழுதப்பட்டிருந்த வாசகம் இத்தனை கலக்குக் கலக்குமென மாணிக்கராஜா எதிர்பார்த்திருக்க மாட்டான். அவனால் அந்த ஊரில் தொடர்ந்து நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதால் தனது சொந்த ஊரான உடுப்பிட்டிக்கு மூட்டை முடிச்சுகளுடன் பயணமானான். 'அவன் தன்னுடைய வயிற்றுப் பிழைப்புக்காக வந்தவன். வந்த வேலையைப் பார்க்காமல் ஏன் வீண் வம்பை விலைக்கு வாங்கவேணும்' என்ற அபிப்பிராயத்தை அவ்வூரில் பரப்புவதில் சிலர் மிகவும் அக்கறை கொண்டிருந்தார்கள். மாணிக்கராஜா பிரச்சினைகளைக் கண்டோடும் கோழையல்ல. என்றாலும், அவன் அவ்வூரில் இருப்பது விவேகமான செயலாகப் படாததால் இப்படி முடிவு செய்

தான். சீக்கிரம் திரும்பி வருவதாகக் கூறி நண்பர்களிடம் விடைபெற்றான். ஆனாலும், சந்திரசேகரனும் அவனுடைய நண்பர்களும் கோவில் மடத்திலிருந்து பேசிக்கொள்வதை நிறுத்திவிடவில்லை. மாணிக்கராஜா போய்விட்டாலும் அவன் காட்டிய பாதையின் தொலைவில்தான் ஒளியுண் டெனத் திடமாக நம்பினார்கள்.

''சந்திரன்! எங்கை இவ்வளவு நேரமும் போனனி? இருண்டுபோய் விளக்கு வைக்கத்தான் எப்போதும் வாறாய். வர வர ஒருமாதிரியாய் வாறாய்போல கிடக்கு. கொய்யாவுக்குக் கடதாசி போடாட்டிச் சரிவராதுபோல இருக்கு'' என்றாள் சிவபாக்கியம் ஒரு நாள். மகன் நேரங் கழித்து வீட்டுக்கு வருவதுபற்றி அவள் பலவாறு கற்பனை பண்ணி வேதனைக்குள்ளாவாள்.

''நான் கோயில் மடத்தடியிலைதான் நிண்டனான். சிநேகிதப் பொடியன் வந்தாப்போலை கதைச்சுக்கொண்டு நிண்டாப்போலை நேரம் போட்டுது. அதுக்கேன் சத்தம் போடுறியள்?'' என்று பதிலளித்துவிட்டு சந்திரசேகரன் தாயின் மறு வார்த்தைக்கு எதிர்கொள்ளாமல் உள்ளே போய்விட்டான்.

தோளுக்கு மேல் வளர்ந்துவிட்ட பிள்ளைகளை அளவுக்கு மிஞ்சித் தடை போட்டால் என்ன ஏதும் நடந்துவிடுமோ என்ற பயத்தால் கணவனுக்கோ, அல்லது அண்ணன் சோமசுந்தரத்துக்கோ பிரச்சினையாக்கிப் பெரிதுபடுத்தச் சிவபாக்கியம் விரும்பவில்லை. என்னதான் இருந்தாலும் மகன்பால் வளர்ந்து விருட்சமாகி விட்டிருந்த அவளின் நம்பிக்கை ஈடாட்டம் கொடுக்கவில்லை.

சந்திரசேகரன் இப்போது அகிலாவை நேருக்கு நேராகச் சந்திக்கும்போது எதுவும் பேசிக்கொள்வதில்லை.

அவன் குசினியில் வந்து உட்காருவான்.

சிவபாக்கியம் அவனுக்கு உணவு பரிமாறும் தடபுடச் சத்தம் கேட்கும்.

அகிலா, விசேஷமாகத் தங்கள் வீட்டில் சமைத்த கறியை சுண்டுக் கோப்பையொன்றில் எடுத்து, இரண்டு குசினிகளுக்குமிடையே உள்ள கிறுதிக்குள்ளால் நீட்டுவாள்.

''இந்தாருங்கோ மாமி!''

அவளுடைய கை, றப்பர் காப்புப் போட்டிருக்கும் இடம் வரைக்கும் முயல் குட்டிபோல எட்டிப் பார்த்துவிட்டு ஓடிவிடும்.

இந்தப் பழக்கம் அகிலாவாக உண்டாக்கிக்கொண்டதல்ல. அவள் சிறியவளாக இருந்த நாள் தொடக்கம் தாயிடமிருந்து அறிந்துகொண்ட பழக்கமாகும்.

செல்லம்மாவும் தனது 'மருமகன்' என்ற நீண்ட நாள் திட்டமெதையும் மனதில் கொள்ளாமல், ஒரு பாசம், பழக்கம் என்பதற்காகவே அன்பு காட்டினுள். சிவபாக்கியமும் தனது அண்ணனுக்கோ, செல்லம்மாவுக்கோ கடமைப்பாடு எதுவும் ஏற்படாத வண்ணம் தானும் விசேஷமாகச் செய்யும் சமையலில் ஒரு பகுதியைக் கிருதியினூடாக அனுப்பி வைப்பாள். சந்திரசேகரன் ஏதாவது தேவையேற்படின் 'மாமி' என்ருே, அல்லது அகிலாவின் இளைய சகோதரியின் பெயரைக் கூப்பிட்டேதான் கேட்பான். ஆனுல் அகிலாவும் சில சமயங்களில் அவன் கேட்கும் பொருளைக் கிருதிக்குள்ளால் தள்ளிவிட்டுப் போவாள். தனக்கு விளங்காத 'வீட்டுக் கணக்கு'களையோ, வேறு பாடங்களையோ தனது சகோதரி மூலம் சந்திரசேகரனுக்கு அனுப்பி விடைகளையும், விளக்கங்களையும் பெறுவாள். சந்திரசேகரன் கிணற்றடிக்குத் தனது சேட்டுக்கள், களிசான்களுடன் சோப்பைக் கையிலேந்திக்கொண்டு போகும் சமயங்களில் அகிலா சில வேளை குளித்துக்கொண்டு நிற்பாள். அவன் அவளைக் கண்டதும் திடீரெனத் திரும்பி அடி வைப்பான். அவள் அள்ளிக் கட்டிக்கொண்டு மிரண்டோடுவாள். அவள் மிரண்டோடுவதும் அவன் வெகு நிதானமாக, ஒருவித உரிமை தொனிக்கக் கிணற்றடியில் உடுப்புக்களைத் துவைப்பதும் இருவருக்குமிடையே நூல் போன்ற ஒன்ருல் பிணைக்கப்பட்டிருக்கிருேம் என்பதை உணர்ந்திருந்தார்கள். ஆனுலும் அதன் வெளிப்பாடாக எந்தவொரு நிகழ்ச்சியும் இருவ

ருக்கும் ஏற்படவுமில்லை. அவர்களாக உண்டாக்கிக் கொள்ளவுமில்லை. ஊமை நெஞ்சங்களாகத்தான் அவர்கள் பிறந்த மண் அவர்களைப் படைத்திருந்தது.

## 6.

"என்ன சோமண்ணை! உன்ரை மருமகனும் கொஞ்சப் பெடியளுமாக கண்ட நிண்ட புத்தகங்களைப் படிச்சுப் போட்டு, ஏதோ பெரிய மாற்றம் வேணுமாம்; போராட வேணுமாம் எண்டு விழலெல்லாம் கதைச்சுக்கொண்டு அநியாயமாகப் படிப்பைக் கெடுக்கப் போருங்கள். உன்ரை மச்சானும் ஊரிலை இல்லை. நீ எண்டாலும் அவனை உருப்படியாக வாறதுக்கு ஏதேன் புத்திமதி சொல்லக் கூடாதோ?"— என்ற அறிவுரைகள் சோமசுந்தரத்தின் காதுகளை நாள்தோறும் குடைந்துகொண்டேயிருந்தன.

"அவன் புத்திசாலிப் பொடியன். பசி, பட்டினி எண்டால் அவனுக்கு என்னெண்டு தெரியும். அது தெரிஞ்சவன் பிழையாகப் போகமாட்டான்" என்று சமாதானம் சொல்வார் சோமசுந்தரம். என்றாலும் அவரின் மனதின் அடித்தளத்தை உலுக்கியதன் பிரதிபலிப்பாகச் சகோதரியை ஒரு நாள் கூப்பிட்டு தன் மனதை அரிக்கும் விஷயத்தைக் கூறினார்.

"சிவபாக்கியம்! உன்ரை மோனைப்பற்றிக் கண்டபடி ஊரார்கள் கதைக்கினம். கண்டபடி திரிய வேண்டாமெண்டு சொல்லு. அடுத்த மாதமெல்லே அவனுக்குச் சோதினை வருகுது. கவனமாகப் படிச்சால் தானே உன்ரை குடும்ப விஷயங்களை அவன் தலை நிமிர்ந்து பார்க்கலாம். வாசிகசாலை - கூட்டமெண்டு அலைய விடாதை."

"அவன் அண்ணை வர வரப் பிடிவாதம் பிடிச்சவனாக மாறிக்கொண்டு வாருன். ஒருக்கால் பாத்தால் பாவமா

கக் கிடக்கு. இன்னொருக்கால் பாத்தால் காலை அடிச்சி முறிக்கிற கோபம் வரும். அவனுக்கு வாற மாதம் யூனிவே சிட்டிக்கு எடுபடுற சோதனை வருகுது. இப்பிடிப் பொடிய ளோடை கதைச்சுக்கொண்டு திரிஞ்சு எப்பிடி இவன் பாஸ் பண்ணப் போருன்? தகப்பன்மார் கிட்ட இல்லாட்டிப் பிள்ளையளின்ரை படிப்பு இப்படித்தான் சீரழிஞ்சு போறது. அது போகட்டுமண்ணை! என்னெண்டு ஊரிலை கதைக்கினம்?''

''என்ன புதிசாக் கதைக்கிறது. உந்தப் பொடிய ளோடை சேர்ந்து திரியிறதைப் பற்றித்தான். ஆனல் ஒண்டு சிவபாக்கியம்! பொடியங்கள் கதைக்கிறதிலையும் நியாயம் இருக்கு. அதோடை அவங்கள் மற்றப் பொடியள் மாதிரி ரேட்டாலை போற பொட்டையளுக்கு நொட்டைவிட்டுக் கதைக்கேல்லை. எனக்குப் பயம் என்னெண்டால் இந்த வயசிலை இதுகளிலை ஈடுபட்டால் படிப்பு நாசமாகப் போகு மெண்டுதான் யோசிக்கிறன்.''

நாட்கள் சென்றன. யூனிவர்சிட்டி படிப்பும் முடிந்து, சோதனையும் எழுதி இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன.

சந்திரசேகரன் ஒரு நாள் சற்று முன்பாகவே வீட்டுக்கு வந்துகொண்டிருந்தான். உடுப்பை மாற்றிக்கொண்டு கிணற்றடியில் முகத்தை கழுவிக்கொண்டிருப்பதைக் கண்ட சிவபாக்கியம், ''என்ன சந்திரன்! பள்ளிக்கூடம் கெதியாய் விட்டுவிட்டதோ?'' என்று கேட்டாள்.

''இல்லையெண்ண நான் சொல்லிப்போட்டு வெள்ளண வந்தனான்'' என்று மகன் பதிலளித்தான்.

''ஏன்?''

''நானெண்ண யூனிவேசிட்டிக்குப் போறதுக்கு எடுபட்டி ருக்கிறன்'' என்ருன் அமைதியாக.

அவனின் ஆர்ப்பாட்டமில்லாத அந்த வார்த்தைகளில் தான் எத்தனை பொருள் பொதிந்து கிடக்கிறதென்பதைத் தன்னையேயறியாமல் மலர்ந்துகொண்டிருக்கும் சிவபாக்கி யத்தின் முகம் காட்டுகிறது. கோவிலின் பக்கமாக முகம் திரும்புகிறது. கரங்கள் தலைக்கு மேலாகக் குவிந்தன.

''கடவுளே! எல்லாம் உன்னுடைய கருணைதான்''—

சிவபாக்கியம் கோவிலில் அர்ச்சனை செய்வித்தாள். சோமசுந்தரம் கள்ளுக் கொட்டிலில் தனது நண்பர்களுக்குப் புளுகினார். சந்திரசேகரன், மாஸ்டருக்கு விபரத்தை எழுதி அன்று கட்டப்பட்ட கடிதங்களுடன் சேர்த்துவிட்டான்.

★

மார்க்கண்டு மாஸ்டர் பிரித்த கடிதத்தின் முதல் வாக்கியத்தையே மீண்டும் மீண்டும் படித்தார். அவரின் மனக்கண் முன்னால் சந்திரசேகரன், 'இதோ உங்கள் உழைப்பின் அறுவடையாக நான் உதயமாகிறேன்' என்பது போலிருந்தது. அவரின் மகிழ்ச்சியில் பங்குகொள்ள அங்கு யாரும் அவருக்கருகில் இருக்கவில்லை. கடிதத்தைப் பக்குவமாக மடித்து பக்கட்டில் வைத்துக்கொண்டு தலைமையாசிரியரின் அறையை நோக்கி நடக்கலானார். அவருக்கு நான்கு நாட்கள் லீவு வேண்டியிருந்தது.

''என்ன மாஸ்டர்?''

''எனக்குப் பாருங்கோ நான்கு நாட்கள் லீவு தேவைப்படுகிறது. எனது மகன் யூனிவர்சிட்டிக்கு எடுபட்டிருக்கிறான். அவனை அனுப்புறதுக்கு சில ஒழுங்குகள் முன்னுக்குச் செய்யவேணும். அதுதான்......''

''ஓ...... வெரி குட். போய் வாருங்கோ.''

★

நாவலப்பிட்டி ஸ்டேசனில் ரயில் வருவதற்கு ஓரு மணித்தியாலம் முன்பாகவே மாஸ்டர் வந்து காத்துக் கிடந்தார். ரயில் பிளாட்பாரத்திற்கு வரும் வரையில் அங்கு மிங்குமாக நடந்து தனது சிந்தனைக்கு இதமளித்துக் கொண்டிருந்தார்.

'பல்கலைக்கழகப் படிப்பெண்டால் சும்மாவா? பணத்துக்கு ஆரிட்டைப் போறது? அவள் சிவபாக்கியத்துக்கு என்ன தெரியும், விசரி. கடைசி நான் கேட்ட இடமாற்றமெண்டாலும் வந்திருந்தா அங்கினை ஐஞ்சைப் பத்தைச்

சேமிச்சு வைச்சிருக்கலாம். எழுதி எழுதி அலுத்ததுதான் மிச்சம்.' —அவரின் சிந்தனையைக் குழப்பிக்கொண்டு வந்து நின்றது ரயில்.

மாஸ்டர் ஏறி ஒரு மூலையில் அமர்ந்துகொண்டார். குளிரையும் இருளையும் குடைந்து சென்றது ரயில்.

★

மாஸ்டர், வீட்டுக்கு வந்ததும் முகத்தைக் கழுவிக் கொண்டு சோமசுந்தரத்தின் வீட்டுப் பக்கமாகப் போனார். சோமசுந்தரம் அப்பொழுதுதான் வடலிப் பக்கம் போய் விட்டு வாயில் ஈச்சந்தடியுடன் வந்துகொண்டிருந்தார்.

''எப்ப வந்தனிங்கள்?''

''இப்பதான் வாறன். சந்திரசேகரனைப் பேராதனைக்கு அனுப்புற ஒழுங்குகளைப் பண்ணிப்போட்டுப் போகலா மெண்டு நாலு நாள் லீவு போட்டிட்டு வந்தனான்.''

''அவன் இங்கை நிக்காமல் பிற ஊருக்குப் போவது தான் நல்லது. இங்கினை பொடியளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத்த உடுப்பிட்டிப் பொடியனோடை சேர்ந்துகொண்டு சந்திரசேகரனும் வேற கொஞ்சப் பொடியளுமாக எந்த நேரம் பார்த்தாலும் அரசியல் பேசிக்கொண்டு திரிஞ்சாங் கள். கண்ட சாதிப் பெடியள் எல்லாருமாகக் கூடித்திரியி றது, சாப்பிடுறது எண்டு ஊரிலை இருக்கிற எல்லாரும் வந்து சொல்லிச்சினம். ஆனால் நான் அவனைப்பற்றிப் போட்டு வைச்சிருந்த கணக்குப் பிழைக்கேல்லை. சோதினை பாஸ் பண்ணிப் போட்டான். படிப்பிலை கவனமா இருக்கிறான். வீட்டு வேலையெல்லாம் மாடு மாதிரிச் செய்யிறான். அவன் பிழையாகப் போக நியாயம் இல்லையெண்டு நினைச்சுப் போட்டு இந்த விஷயத்தை அவ்வளவு பெரிசா எடுக்கேல்லை. அதுதான் கண்டியளோ உங்களுக்கும் காயிதம் போடேல்லை. என்னெண்டாலும் கூடுற கூட்டம் சரியில்லாமல் போனால் பொடியள் உதவாமைப் போயிடும். கடவுளாப் பாத்து அவன் நல்ல நேரத்திலை எடுபட்டிருக்கிறான்'' — என்றார் சோமசுந்தரம்.

மாஸ்டருக்கு மகன் மேல் அளவிலா அன்பும் மதிப்பும் இருந்தாலும், தான் பிற ஊரில் இருந்ததால்தான் இப்படியெல்லாம் அவன் திசையறியாது போக நேர்ந்தது என்று நினைத்தபோது வெள்ளம் தலைக்கு மேல் போகவில்லை என்ற மட்டில் திருப்தி கொண்டார்.

★

மாஸ்டரின் இருபத்தைந்துவருட சேவையில் சேமித்து வைத்திருந்ததைக் கொண்டு ரோட்டடியில், கூப்பன் கடைக்கருகில் நாலு பரப்புக் காணியொன்றை முன்னர் வாங்கிவிட்டிருந்தார். அந்தக் காணியை யாருக்காவது ஈடுவைத்துச் செலவுகளைச் சமாளிக்கலாம் என்றுதான் மாஸ்டர் முதலில் திட்டம் போட்டிருந்தார். ஆனால் 'இந்த நாட்களில் எவன் ஈட்டுக்குப் பணம் கொடுக்கப் போகிறான்' என்று அவர் திரும்பிய திக்கெல்லாம் கேட்டது.

அந்தக் காணியை விற்றுவது மகனைப் படிக்க வைக்க வேண்டும் என்ற வைராக்கியம், அவர் மாஸ்டராக இருந்ததாலோ என்னவோ அவர் மனதை ஆட்கொண்டுவிட்டது.

மாஸ்டர், சோமசுந்தரத்தை ஒரு சம்பிரதாயத்துக்காக மட்டுமே அபிப்பிராயம் கேட்பதற்காக வந்திருக்கிறார். சோமசுந்தரம் எதையும் விற்கிற விஷயத்தை ஒரு நாளும் எதிர்ப்பவரல்லவே! அப்படித்தானென்றாலும், சோமசுந்தரம் ஏதோ ஞானோதயத்தோடு வேண்டாமென்று சொன்னாலும் மாஸ்டர் விற்காமல் விடப்போவதுமில்லை. மச்சானின் சொல்லையும் மேவி நடந்தார் என்ற சம்பிரதாயமான -ஆளை ஆள் ஏமாற்றும் வேலை அது. மாஸ்டர், சோமசுந்தரத்திடம் விடைபெற்று வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள் அவரின் மனைவி.

அவர் திரும்பி வந்ததும், அவள் பொரிந்து தள்ளினாள்:

''அந்த ரோட்டுக் காணி எத்தினை பேருடைய கண்ணிலை குத்திக்கொண்டிருந்தது. நான் நினைச்சனான் இப்பிடி ஏதாவதொரு இடி வந்து விழுமெண்டு. ரெண்டு பெட்டையளும், நானும் கடைசியிலை நடு ரோட்டிலைதான் நிக்கப்போறம்.''

மாஸ்டருக்கு ஆத்திரமாக வந்தது. ''அப்ப சந்திரனைப் படிக்க அனுப்ப வேண்டாமென்று சொல்லு. விட்டுவிடுகிறன். சும்மா பேய்க்கதை கதையாதை. அவன் படிச்சு ஒரு நல்ல உத்தியோகம் பாத்தா சகோதரிகளையும் கவனிப்பானெல்லே. இல்லாட்டி எங்கையாலும் கடவுளாப் பாத்து நல்ல இடத்திலை கலியாணத்தைக் கலியாணத்தைச் செய்தா அங்கினை சீதனமாகுதல் கேட்டு வாங்கிப் பொடிச்சியளை ஒரு வழியிலை விடலாமெல்லே. இல்லாட்டி உனக்குக் கொண்ணர் தந்த சீதனத்தின்ரை லட்சணத்திலை நான் பாங்கிலை கிடக்கிற காசை எடுத்துச் சிலவழிக்கச் சொல்லுறூய் போலக் கிடக்கு.'' — மிகவும் காரசாரமாகச் சிவபாக்கியத்தை அணுகினுல் தான் காரியம் சித்தியாகுமென்பதை மாஸ்டர் அறியாதவரா, என்ன?

காணி விலைப்பட்டது!

சந்திரசேகரன் பல்கலைக்கழகத்திற்கும் போய்விட்டான்.

## 7.

கோவில் மடத்தில் சோமசுந்தரம் சுருட்டொன்றைப் பற்றவைத்துக்கொண்டு கப்போடு சரிகிருர். அவர் கண்ணுக்கு நேராகத் தெரிகின்ற ஆலமரத்தில் பழுத்த இலைகளெல்லாம் கழன்றுவிட்டன. புதிய தளிர்கள் இளங் காலை வெயிலை ஆடி அசைத்துத் துளாவுகின்றன - பொன்னிறம் கண் சிமிட்டுகின்றது. இப்படித் தளிர்கள் ஆடுவதும் கிசுகிசுவென வளர்ந்து பழுத்து நிலத்தில் விழ, பையன்கள் குழை குத்தும் கம்பியால் பழுத்தல் இலைகளைக் குத்திச் செல்வதுமான எத்தனையோ காலங்களைச் சோமசுந்தரம் அந்த மடத்திலிருந்து கண்டுவிட்டார். என்றுலும் இன்றைக்கு

ஏதோ புதுமையை அனுபவிப்பவர்போல பார்த்துக்கொண் டிருக்கிறார்.

அகிலாவைத் தொடர்ந்து அவளின் சகோதரி வாணி யும் பருவம் அடைந்துவிட்டாள். வீட்டில் இரண்டு குமர் கள்!

தலைக்குமேல் வெள்ளம் போய்விட்டதை உணர்ந்து கொண்டாலும், ஏதோ நடக்கிறதைப் பார்த்துக்கொள் வோம் என்பதுபோல அவர் தனது வாழ்க்கையென்ற கட்டை வண்டியில் ஏறிக் குந்திவிட்டார். பாதை தெரி யாத பயணமொன்றில் ஆடியசைந்து போய்க்கொண்டிருக் கிறார். அதைத்தவிர அவரால் வேறு எதைத்தான் செய்ய முடியும்?

அகிலாவுக்கு பள்ளிக்கூட நேரங்களைத் தவிர குசினிக் குள்தான் சிறைவாசம். அந்த நெருப்போடும் புகையோடும் சேர்ந்து உருண்டு திரண்டுவிட்டாள். இதழ்களில் நீர்த் திவலைகள் தேங்கிநிற்க, பொன்னிற வெயில் மொட் டவிழும் புதுமலரைப்போன்ற அவளின் புதுமையை அந்த நெருப்பும் புகையும் மழுங்கிடச் செய்யவில்லை. பார்ப்போரை பள்ளத்தில் பொறித்துவிடும் பயங்கர அழகல்ல அவளுடை யது. கன்னத்தில் வகிடெடுத்து ஒற்றைப் பின்னலாகப் பின் னிக்கொள்வாள். நறுக்கான உடை. ஏழ்மையைக் காட்டிக் கொள்ளாத எளிமையான உடை. ஒரு இனிமையான கீதம் போல அந்தஒழுங்கையால் அவள் போய்வருவாள்.

★

சந்திரசேகரன் பல்கலைக்கழக விடுமுறைக்காக வந்திருந் தான். வெயிலில் காய்ந்து கறுத்திருந்த அவனது உடல் பருத்துவிட்டது. பாதங்களின் விரல்கள் தாறுமாறாக இல் லாது சப்பாத்தின் அமைப்புக்கேற்ப வெகுவாக ஒடுங்கி, ஒழுங்குடன் நின்றன. பிறருடன் பேசும்போது அவ னுடைய குரல் முன்போல் இல்லாது மிகவும் தாழ்ந்திருந் தது. தோளில் ஒரு துவாய்த் துண்டைப் போட்டுக்கொண்டு முகச்சவரம் செய்வதற்கான உபகரணங்களுடன் கிணற்

றடிக்குப் போய் வேலியில் கண்ணாடியைக் கொழுவினான். சவர்க்கார நுரைகள் அப்பியிருந்த முகத்துடன் கண்ணாடி முன் நின்றபோது, 'க்ளுக்' என்ற சிரிப்பொலி கேட்டுத் திரும்பினான்.

அப்பொழுதுதான் கிணற்றடிக்குக் குடத்துடன் வந்த அகிலா, நாக்கைக் கடித்துக்கொண்டு ஓடி மறைந்தாள்.

சந்திரசேகரன் அன்றுதான் வீட்டில் முதன்முதலாக முகச்சவரம் செய்துகொண்டான். அதைக் கண்டதும், அகிலா தன்னை மறந்து, வரம்புகளை மீறிச் சிரித்துவிட்டாள். அவளுக்கு ஏற்பட்ட நகைச்சுவையின் காரணம் அவனுக்கும் தெரியும். அவள் போய் மறைந்த திக்கில் அவனின் பார்வை ஒருகணம் நிலைத்தது. உதட்டில் புன்னகை தோன்றி மறைந்தது. மீண்டும் சவரம் செய்வதில் மூழ்கினான். முகத்தைக் கழுவிக்கொண்டு குசினியில் போடப்பட்டிருந்த பாய்த் தடுக்கில் அமர்ந்துகொண்டான்.

சிவபாக்கியம் இடியப்பம் அவித்து, சொதியும் சம்பலும் போட்டிருந்தாள். செல்லம்மா வீட்டில் இராசவள்ளிக் கிழங்கு பாலும் சீனியும் இட்டு அவிக்கப்பட்டிருந்தது. சந்திரசேகரன் இராசவள்ளிக் கிழங்கென்றால் சுழன்று கொண்டு நிற்பான் என்பதை அகிலா எப்போதோ அறிந்தவளாவாள். ''இந்தாங்க மாமி!'' என்று இராசவள்ளிக் கிழங்கு போட்டிருந்த கோப்பையொன்றை நீட்டினாள் அகிலா. கோப்பையைப் பக்குவமாகப் பிடித்தவாறு நீட்டியிருந்த அவளின் கரங்களைப் பார்த்தான் சந்திரசேகரன். இடியப்பத்தைப் பிசைந்துகொண்டிருந்த அவனது விரல்கள் செயலிழந்து நின்றன. அவனுக்கே விளங்காத ஒன்று அவனின் இதயத்தில் குமைந்து கொண்டிருந்தது. எத்தனையோ நாட்கள் அவள் இப்படிக் கிருதிக்குள்ளாக அவனுக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்களை நீட்டிக் கொடுத்திருக்கிறாள். கடந்த மூன்று நான்கு மாதங்களாக பிற ஊரிலிருந்து வந்ததும் ஏதோ புது அனுபவத்தை எதிர்கொள்பவன்போலத் தடுமாறுகிறான். அவளின் உப

சரிப்பு அவனுக்குத் தேவைப்பட்டதென்பதை அவன் யாருக்குச் சொல்லமுடியும்?

சிவபாக்கியம் அகிலா நீட்டிய கோப்பையைப் பெற மறுத்து, அந்தக் கிருதியினூடாகத் திருப்பிக் கொடுத்தாள்.

''வேண்டாம் பிள்ளை! அவனுக்கு இப்ப இதுகளிலைஅவ்வளவு விருப்பமில்லையாம். இனிப்புப் பண்டமென்ருல் வாயிலும் வைப்பதில்லை'' என்று சிவபாக்கியம் சொல்லிச் சமாளித்துவிட்டாள்.

அகிலாவின் கரங்கள் அக் கோப்பையை மீண்டும் பெறுவதற்காக நீள்கின்றன. அந்தக் கைகளுக்குப் பேசும் திறன் இருக்கவில்லை. ஆனுல்—

அவளின் ஒவ்வொரு விரல்களும் உள்ளத்தின் கொந்தளிப்பைப் பேசின. அவள் அந்தக் கோப்பையை எடுத்து மேசையில் வைத்துவிட்டுச் சிலையாக நின்ருள். 'ஏ!சந்திரன் உனக்கா இராசவள்ளிக் கிழங்கு விருப்பமில்லை' என்று கேட்டுவிட அவளின் இதயம் துடிதுடித்தது.

'இராசவள்ளிக் கிழங்கு விருப்பமில்லை' என்பதில் வெறும் இராசவள்ளிக் கிழங்கை மட்டுமா குறிக்கிறது? அவளையும் சேர்த்துத்தான்.

சிவபாக்கியம் கூறியதை உணர்ந்துகொண்ட அகிலாவின் இதயம், 'உனக்கா இராசவள்ளிக்கிழங்கு விருப்பமில்லை' என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டது.

சந்திரசேகரனுடைய தட்டில் சிவபாக்கியம் ஒவ்வொரு இடியப்பமாக அடுக்கிக்கொண்டிருந்தாள்.

''என்னணை பேய்க்குப் படைச்சமாதிரி அடுக்கிருய்.எப்பிடிச் சாப்பிடுறது.''

''ஏன் சாப்பிடுகிருயில்லை? முந்தியென்ருல் நல்லாகச் சாப்பிடுவாய்.''

சந்திரசேகரனின் அடிமனதில் குழப்பமேற்படக்காரணமாயிருந்த தனது செயலை அறிந்து வைத்திருந்த சிவபாக்கியம், மகன் முன்பாக மிகவும் அமைதி தொனிக்கப் பேசினுள். அவன் முன்னுல் விரிந்துகிடக்கும் வாழ்க்கையின்

பாதை இச் சிறு பையனுக்கு எப்படி விளங்கப் போகிறது என்று சிவபாக்கியம் நினைத்தாள்.

சந்திரசேகரன் சாப்பாட்டை முடித்துக்கொண்டுசாய்வு நாற்காலியில் மெல்லச் சரிந்துகொண்டான். பிரயாணக் களைப்பைப் போக்கிக் கொள்கிறுனென்று நினைத்து சிவபாக்கியம் அவனைத் தொந்தரவு செய்யவில்லை. அவன் அப்படி வீட்டில் நிற்பதைக் காணச் சிவபாக்கியத்துக்கு மிகுந்த மகிழ்ச்சி. முன்பெல்லாம் பம்பரம்போலச் சுழன்றபடியே நிற்பான். அவனுடைய பழைய நண்பர்கள் சிலர் வீட்டு வாசலில் வந்து 'பெல்' அடித்தார்கள். ஏதோ பேசிவிட்டுப் போனுர்கள். அவர்களுக்குப் பின்னுல் முன்புபோல அவனும் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓடவில்லை. அவனுடைய விடுமுறைக்காலம் மிகவும் அமைதியாகவே கழிந்தது. மீண்டும் அவன் பயணமாவதற்கு இன்னும் இரண்டு நாட்கள் மட்டுமே இருந்தன.

''டேய் தம்பி! பயணம் போறதற்கு முந்தி அண்ணை வீட்டையும்போய் பயணம் சொல்லிப்போட்டுப் போ! நீ முதன் முதல் பயணம் போனபொழுது சொல்லிப்போட்டுப் போகேல்லையெண்டு செல்லம்மா கதையோட கதையாகச் சொன்னவ. ஏன் ஒரு கதைக்கு இடம்வைப்பான். சொல்லிப் போட்டுப் போனுல் ஒரு பிரச்சினையும் பிறகு வராது'' என்று சிவபாக்கியம் மகனுக்குச் சுருக்கமாக அவன் நடக்கவேண்டிய பாதைகளைக் கோடுகீறிக் காட்டினுள்.

சந்திரசேகரன் புறப்பட ஆயத்தமானுன். வீட்டின் பின்புறமாக உள்ள படலையால் சோமசுந்தரத்தின் வீட்டுப் பக்கம் போனுன்.

செல்லம்மாதான் வெளியே வந்தாள். ''தம்பி இரு. அவரும் வெளியாலை இப்பதான் போனுர்.''

யன்னல் கம்பிகளை விரல்களால் இறுக்கிப் பிடித்தவாறு வெளியே பார்த்துநின்ற அகிலாவையும் சந்திரசேகரன் காண்கிறுன். அன்று சிவபாக்கியம் அவளின் மனதை எவ்வாறு புண்படுத்திவிட்டாளென்பதை அவன் முன்பாகச் சபித்து நியாயம் கேட்கத்துடிக்கின்றன அவளின் கண்கள்.

யன்னலினூடாகக் கலங்கும் கண்களுடன் சந்திரசேகரனை பார்த்துக் கொள்வதைத் தவிர அவளால் வேறு என்னதான் செய்யமுடியும்?

அந்த ஊமை நெஞ்சத்தின் நுண்ணிய உணர்வுகளைச் சந்திரசேகரனும் நிர்மூலமாக்க விரும்பாவிட்டாலும் அவன் முன்னுல் சிருஷ்டிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் செயலிழந்தவனுகவே ஆக்கப்பட்டுவிட்டான்.

மௌனந்தான் இரு பக்கமும் பேசிக்கொண்டது. அகிலா அவனின் பார்வைக்கு எதிர்கொள்ள முடியாதவளாக உள்ளே போனுள். அவளின் நடைக்கேற்ப அசைந்துகொடுக்கும் நீண்ட கூந்தலும் அவனுக்கு ஏதேதோ சேதி சொல்லத் துடித்தது.

''பிள்ளை! தம்பிக்குக் கோப்பி போட்டுக்கொண்டுவா கெதியாக.''

''நான் மாமி இண்டைக்குப் பயணம் போகப்போறன். ரெண்டுமணிக்கு ஸ்டேசனிலை நிற்கவேணும். இப்ப ஒரு மணியாகிறது. அப்ப வரட்டே மாமி!'' என்முன் சந்திரசேகரன்.

''நில்... கோப்பியைக் குடிச்சுப்போட்டுப் போவன்... ஏ... பிள்ளை அகிலா, கெதியாக் கொண்டுவா.''

மத்தியானச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வந்திருந்த சந்திரசேகரனுக்கு அந்த வேளையில் கோப்பியை உட்கொள்ளுவது சிரமமான காரியந்தான். என்றுலும் இன்னுமொருதடவை அகிலாவை ஏமாற்ற விரும்பாதவனுக எதுவும் பேசாமல் நின்றுகொண்டிருந்தான். அகிலா கோப்பியைக் கொண்டுவந்து செல்லம்மாவிடம் நீட்டினுள்.

''இந்தா தம்பி... குடிச்சிட்டுப் போட்டு வா தம்பி. ரயிலுக்குப் பிந்திப் போனுல் கரைச்சல்.''

சந்திரசேகரன் செல்லம்மாவிடம் விடைபெற்முன். அகிலா அவன் படலையைச் சாத்திவிட்டுப் போகும்வரை கண்வெட்டாது பார்த்து நின்முள்.

# 8.

ஓவசியர் சுப்பிரமணியம் அந்தக் கிராமத்தின் பத்தாம் வட்டாரத்துக்கு இதுவரை காலமும் ஆயுள் அங்கத்தவராகக் கிராமசபையில் இருந்து வந்திருக்கிறார். அவருக்குப் போட்டியாக யாருமே இதுவரை கிளம்பியது கிடையாது. அவர் உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய அடுத்த வருடமே இந்தப் பாதையில் இறங்கிவிட்டார். ஒருமுறை சபைத் தலைவராகப் பதவி வகிக்கும் வாய்ப்பும் அவருக்குக் கிட்டியது. இந்தமுறைத் தேர்தலைப்பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் ஓவசியர்.

'ஊரைவிட்டு ஓடிப்போன மாணிக்கராஜா திரும்பவும் அவன்ரை தாயையும் கூட்டிக்கொண்டு இங்கைவந்து குடியேறிவிட்டானே. அவனுக்கு இந்த இலக்ஷனிலை நம்பிக்கையில்லையெண்டு சொன்னாங்கள். இப்ப அவன் எனக்கெதிராகக் கேட்கப்போறானெண்டு கதையடிபடுகிறது. அட! இந்தப் பொறுக்கிப் பயல் என்னோடை எலக்ஷன் கேட்கிறதுக்குத் துணிஞ்சிட்டானே. எல்லாத்துக்கும் றைவர் ரெத்தினமும் ஆட்களும்தான் கால்.'

ஓவசியருக்கு எதிராக மாணிக்கராஜா பத்தாம் வட்டார வேட்பாளராக வருகிறானென்பது ஓவசியருக்குப் பெருத்த அவமானத்தையும் ஆத்திரத்தையும் கொடுத்தன. கோவிலின் கிழக்குப் பகுதியில் வாழும் சிறுபான்மை மக்களில் ஒரு பகுதி இந்த வட்டாரத்தில் அடங்குவதால் அவருக்குப் பிரச்சினையாகிவிட்டது. அவர்களின் வாக்குகளை நம்பியே தனக்கெதிராகக் கிளம்பியிருக்கிறானென்பது ஓவசியருக்கு நன்றாக விளங்கியது. ஓவசியரின் வலது கையாக இருக்கும் பண்டிதர் சுப்பையா நிலைமையை அவருக்கு எடுத்து விளக்கி, கிழக்குப் பகுதி மக்களுடன் சமாதானத் தூது ஒன்றை ஏற்பாடு செய்தார்.

அதைவிட வேறு வழியில்லையென்பதை அறிந்த ஓவசியரும் அதற்கிணங்கினார். அவர் தனது துரைத்தனத்தைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு ஒவ்வொரு படலையாகத் திறந்தார்.

''நாங்களெல்லாம் இந்த ஊரவங்கள். ஒற்றுமையாக இருக்கவேணும். வந்தான் வரத்தான்களெல்லாம் எங்கடை ஒற்றுமையைப் பிரிக்கப் பார்க்கிறாங்கள். நாங்கள் எல்லாரும் ஒருத்தருக்கொருத்தர் உதவியாக ஒற்றுமையாய் இருக்காட்டி எப்பிடிச் சீவிக்கிறது? உந்தப் பொடியள் சும்மா கதைப்பன்கள். அவங்களுக்கு இங்கிலீசில ஒரு காயிதம் எழுதத் தெரியாது. அதுதான் அவையின்ரை படிப்பு...''

ஓவசியரின் முயற்சி தோல்வி பெறவில்லை. இளவட்டங்கள் ஓவசியருக்கு எதிராக மும்முரமாக வேலைசெய்தாலும் வாக்குப்பலம் அவருக்கே கிடைத்து இம்முறையும் தெரிவு செய்யப்பட்டார். இதன்பிறகு ஓவசியர், மாணிக்கராஜாவை எங்காவது ஒழுங்கையில் சந்திக்க நேர்ந்தால் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. அவருக்கு அவன் மிகவும் பயங்கரமாகத்தான் காட்சியளித்தான். மாணிக்கராஜா, ஓவசியரைக் கலக்கிக்கொண்டிருப்பதற்கு முற்றுப்புள்ளி வைப்பதுபோல, கொழும்பில் ஏதோ தொழில் கிடைத்ததால் தாயையும் கூட்டிச் சென்றுவிட்டான். அவன் ஊரைவிட்டுப் போன அன்று இரவுதான் ஓவசியர் நிம்மதியாக உறங்க முடிந்தது. அவர் கிராமசபைக்குத் தெரிவாகி மூன்று மாதங்கள்கூடப் போயிராது. அந்தப் பெரிய மனுஷனைச் சுமந்துகொண்டு மேளங்கள் முழங்க, சுடலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

சோமசுந்தரம் மடத்திலிருந்தவாறே பிரேத ஊர்வலத்தைப் பார்த்தார். கிழக்குப்பகுதி மக்கள் ஒருவரும் சனக்கூட்டத்திலில்லை. இரத்தினத்தின் தாயின் செத்தவீட்டில் மேளம் அடித்துக்கொண்டு ஓவசியர் வீட்டு ஒழுங்கையால் போகவிடாது தடுத்து நிறுத்தியதுமல்லாமல் பிணத்தைக் கூட இறக்கிவைத்து, மௌனமாகப் போகச் சம்மதித்த பின்பே ஊர்வலத்தை அசையவிட்டார். இதற்காக ஓவசியர்

தனது கைப் பொம்மைகளாக வைத்திருந்த மேற்குப்பகுதி மக்கள் சிலரையே ஏவிக் காரியத்தைச் சாதித்தார்.

இரத்தினம் தனது தாய்க்கு இப்படியொரு நிலை ஏற்பட்டதேயெனக் கலங்கியது எல்லோருக்கும் தெரிந்த விஷயமாகும். அந்தப் பெரிய மனுஷன் வெள்ளிப் பூண்போட்ட கைத்தடியின் பிடியைவிட்டுச் சரிந்துவிட்டது சோமசுந்தரத்துக்கு ஆச்சரியந்தான். ஆனால், அவரோடு பிணக்கப்பட்டிருந்த சம்பவங்களை எளிதில் மறந்துவிடமுடியாத மனது அவருக்கு. நினைவுகளை அசைபோட்டபடி சுருட்டைப் புகைத்துக்கொண்டிருந்தார் சோமசுந்தரம்.

—ஒரு ஒவசியரோடு முடிகிற காரியமா இது—

★

பிள்ளையார் கோவிலில் நான்குமுறை கொடிக்கம்பத்தில் கொடிச்சேலை ஏறி இறங்கிவிட்டது.

இந்த இடைவெளியில்தான் எத்தனை மாற்றங்கள்?

கோவிலின் தெற்கு வீதிப்புறமாக இருந்த கலட்டிக் காணியில் இப்பொழுது 'அமெரிக்கன் பற்றன்' வீடொன்று தலைகாட்டுகிறது, அதைச் சுற்றி இளந் தென்னங்கன்றுகள், மாங்கன்றுகள் செழிப்பாக நிற்கின்றன.

கோவிலில் திருவிழாக்களெதுவும் இப்பொழுது விமரிசையாக நடப்பதில்லை. பிள்ளையார் பிச்சைக்காரராகிவிட்டார். திருவிழாக் காலங்களில் சுவாமிதூக்க ஆள் சேர்க்க வேண்டிய நிலை வந்துவிட்டது.

சோமசுந்தரத்துக்கும் பிள்ளையாரின் கதைதான். நுட்பமான நகாசு வேலை செய்த காலம் போய், கண்கள்- கைகள் பிசகத் தொடங்கியதால், ஏதாவது பெருவெட்டு வேலைகள் செய்து வயிறு வளர்க்கும் நிலை. முதுமை வயதுக்கு முன்பே உடலுக்குள் பாய முற்படுகிறது.

மார்க்கண்டு மாஸ்டருக்கு அவர் இதுவரைகாலமும் கேட்டுக்கொண்டிருந்த இடமாற்றம் கொடுத்துவிட்டார்கள். கிழமைக்கு ஒருமுறை அவர் வவுனியாவிலிருந்து

ஊருக்கு வருவார். வீட்டுக் கருமங்களைக் களைப்பில்லாது பார்த்துவிட்டுப்போவார்.

அவரின் மகன் சந்திரசேகரன் நன்ருக வளர்ந்துவிட்டான். இளமையின் துடுக்குத்தனம் அகன்றவனுகி நிதானமாகப் பேசுகிருன். பட்டப்படிப்பு முடித்துக்கொண்டதும் அவனுக்கு வங்கியொன்றில் மேற்பார்வையாளராக வேலையும் கிடைத்துவிட்டது. இவ்வளவு சீக்கிரம் அவன் ஒரு தொழிலில் சேர்ந்துவிடுவான் என்பது மார்க்கண்டு மாஸ்டரே எதிர்பாராததுதான்.

சந்திரசேகரனுடைய வீட்டில் வெறுமனே இருந்த யன்னல்களுக்கெல்லாம் திரைச்சேலைகள் போட்டுஅலங்கரிக்கப்பட்டிருக்கின்றன. மாஸ்டர் வீட்டின் முன்புறமாக ஒரு 'போட்டிக்கோ'வும், புறம்பான அறையொன்றும் கட்டி வீட்டை விசாலமாக்கியிருந்தார். மாஸ்டர் வவுனியாவுக்கு இடமாற்றமாகி வந்தபின்பு ஏற்பட்ட மாறுதல்கள்தான் இத்தனையும். மாஸ்டர் இதுவரை காலமும் கவனியாது விட்டிருந்த சிறுசிறு விஷயங்களெல்லாவற்றையும் சந்திரசேகரன் கவனம் செலுத்தி வீட்டை ஓரளவு அலங்கரித்தான். அவன் பார்க்கும் தொழிலுக்கு இவை வேண்டியவையாக இருந்தன.

அகிலா பள்ளிக்கூடப் படிப்பு முடிந்ததும், அவளின் ஆசிரியர்களின் தூண்டுதலால் கூட்டுறவுப் பயிற்சி வகுப்பில் சேர்ந்துகொண்டாள். இதற்காக அவள் ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணம் பஸ்ஸில் போய்வரவேண்டி இருந்தது. வெளியுலக அனுபவம் இல்லாதவள் அகிலா. அவளுக்கு பஸ்ஸில் யாழ்ப்பாணம் போய்வருவது மிகவும் சிரமமான செயலாகவே ஆரம்பத்தில் இருந்தது. சிறுபிராயம் தொட்டே அவள் தனது வீட்டில் அன்ருடம் கண்டுகொண்டிருந்த வறுமையென்ற நெருப்பு, புற உலக மயக்கங்கள் அவளின் இதயத்தில் புகாதவாறு சுட்டெரித்தது. என்னதானிருந்தாலும் அவளைச் சோதனைக்குள்ளாக்கிவிடக்கூடிய பல நிகழ்ச்சிகளைச் சந்திக்க வேண்டித்தான் இருந்தது.

ஒருநாள் அகிலாவும் அவளுடன் படிக்கும் புவனுவும் யாழ்ப்பாணம் பஸ்டாண்டில் நின்றூர்கள். 769 பாதை இலக்க பஸ்வண்டி எப்பொழுது வருமென எதிர்பார்த்த வாறு நின்றுள் அகிலா. அவர்கள் நின்ற வரிசையில் பின் புறமாக இரு வாலிபர்கள் நறுக்கான உடையோடு வந்து நிற்கிருர்கள். ஒருவன் புவனுவுடன் மிகவும் இயல்பாக வெகுநாட் பழக்கத்தைக் காட்டிக்கொள்ளும் வாக்கில் ஏதேதோ சிரித்துச் சிரித்துப் பேசுகிருன். அவர்கள் பேசுவது அகிலாவுக்கும் கேட்கிறது. ஆனுல், அவள் தனது பார் வையை அவர்கள் பக்கம் திருப்பவில்லை. புவனுவின் இந் தப் போக்கு அகிலாவுக்கு அச்சத்தைக் கொடுத்தது. அகிலா வின் சிந்தனைக் குழப்பத்தை, தேவையற்றுப் பிசைந்து கொண்டிருக்கும் விரல்கள் காட்டுகின்றன. டீசல் புகையை வெளியே கக்கிக்கொண்டு பேரிரைச்சலோடு பஸ்வண்டி ஒன்று போகிறது. அதுகூட அவளுக்கு அச்சத்தைத்தான் ஊட்டியது. மற்ற வாலிபனின் பார்வை அகிலாவின்மேல் நிலைத்திருந்தது. புவனுவிடம் விடைபெற்றுக்கொண்டு இரு வாலிபர்களும் போய்விட்டனர். புவனு அகிலாவின் கையைப் பிடித்திழுக்கிருள்.

''என்ன அகிலா! நீர் சரியான பட்டிக்காடாக இருக் கிறீர். இந்தப் பக்கமே பார்க்காமல் முகத்தை 'உம்'மென்று ஏன் வைத்திருந்தனீர்?''

''இல்லை புவனு! எனக்கு இதெல்லாம் தெரியாது. எனக்கு இப்பிடியாகப் பழகமுடியாது புவனு. எனக்குப் பிடிக்கிறது மில்லை. நான் பட்டிக்காடாக இருக்கத்தான் விரும்புகிறன்.''

''இல்லைப் பாரும். என்னை உமக்குப் பிடிக்கேல்லை நான் கூடாத ஆளெண்டு. நீர் நினைக்கிறீர் ஆம்பிளைய ளோடை கதைச்சால் கலியாணம் முடிக்கிறதெண்டு. நாங் கள் கொஞ்சம் சோஷலாகப் பழகினு அதிலை என்ன பிழை யிருக்கு. உம்மைப்போல ஒண்டுந்தெரியாத ஆக்கள்தான் அநேகமாக ஏமாந்து போறது. இங்கை இப்ப வந்து என் னேடை கதைச்சுப்போட்டுப் போன 'போய்' எங்கடை ஊராள். வாசிட்டியிலை படிக்கிருர். மற்றவரும் அவரோடை

படிக்கிறவராம். அவர் உம்மை 'இன்ரடியூஸ்' பண்ணிவிடக் சொல்லிக் கேட்டவராம். நான் சொன்னன், நீர் ஒரு 'டைப்' இதையெல்லாம் விரும்பமாட்டீர் எண்டு. அந்த 'போய்' உம்மையே பார்த்துக்கொண்டுநின்றூர் நீர் ஏதாவது கதைப் பீர் எண்டு.''

''புவனு! நீர், நாங்கள் இரண்டுபேரும் இனிமேலும் சிநேகிதமாக இருக்கிறதைத்தானே விரும்புகிறீர்? அப்படியெண்டால் தயவுசெய்து என்னேடு வருகிற நேரங்களிலே இப்பிடிச் சங்கடமான நிலைக்கு என்னை விடாதையும். என்னுடைய போக்கு உமக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனுல், அதை மாற்றி உம்முடைய பாதைக்கு இழுக்கலாமெண்டு மட்டும் நினையாதையும். அதுதான் புவனு நீர் எனக்குச் செய்யக்கூடிய உதவி.''

அகிலாவின் பதில் புவனுவை மௌனமாக்கியது. அதைத் தொடர்ந்து அகிலாவும் மௌனமானுள்.

இருவரின் சிந்தனைகளும் தங்கள் தங்கள் பாதையில் பிறிட்டு ஓடின.

—ஒரு பருவப்பெண் அழகுடையவளாகவும் இருந்தால் வீதிவழியே போவது எவ்வளவு சிரமமாக இருக்கிறது. அவளைக் கூர்ந்து நோக்கும் ஒவ்வொரு ஆடவனும் மனத்தால் அவளை என்னென்ன பாடு படுத்துகிறுனே?—

இருவர்களினதும் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு வந்தது பஸ். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்தவாறு பஸ்ஸில் ஏறினர்.

★

அகிலாவுக்குத் தன்னை எதிர்த்துவரும் புயல்களையும், வெள்ளப் பெருக்குகளையும் கற்சிலையாக நின்று போராடும் மனப்பக்குவம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டது. அவளுக்கு வெளியுலக அனுபவம்கூட வாழ்க்கைக்குத் தேவையான பாடங்களாகவே அமைந்தன. அவளின் மனத்தில் எழும் சிறு சலனங்களைக்கூட சந்திரசேகரனின் உருவம் தோன்றிக் களைந்துவிடும். அவன் கனவுலகில் வாழப் பழ

காதவன். அவனைப் பின்தொடர்ந்தே தனது பழக்கங்களை உண்டாக்கிக் கொண்டவள் அகிலா. அவன் எப்பொழுதும் வழிகாட்டியாக அவள் முன்னால் போய்க்கொண்டிருப்பதை உணரும்போது அவளுக்குத் தன்னையறியாத பலம் உண்டாகும்.

## 9.

ஒருநாள் மாலைநேரம்—

சோமசுந்தரம் வழமைபோல் விறுந்தையில் குப்பி விளக்குடனும் சுருட்டுடனும் அமர்ந்துவிட்டார். விறுந்தையின் மறுகோடியில் செல்லம்மா வெற்றிலைத்தட்டுடன் இருந்துகொண்டு வழமையான பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தாள். மார்க்கண்டு மாஸ்டர் திடீரென உள்ளே வந்ததும் செல்லம்மா நீட்டியிருந்த கால்களை மடக்கிக் கொண்டாள். மாஸ்டர் விறுந்தையில் சோமசுந்தரத்திற்கு அருகில் போய் உட்கார்ந்துகொண்டார். சோமசுந்தரம் நிலத்திலிருக்கும் சமயத்தில் மாஸ்டர் கதிரையில் உட்காருவதில்லை. ஆனால், அவர்கள் இருவரும் இவ்வளவு நெருக்கமாக இருந்து இதுவரை பேசியதுமில்லை. செல்லம்மா வெற்றிலைத் தட்டத்தை எடுத்து மாஸ்டரின் முன்பாக வைத்தாள். சோமசுந்தரம் சுருட்டை எடுத்து குப்பி விளக்கால் பற்றவைக்க முயன்ற போது, அவரின் உறிஞ்சலுக்கு ஈடுகொடுக்க முடியாது அந்த விளக்கு அணைந்தது. இருள் படர்ந்தது. அவரின் அபிலாஷைகளிலும் இருள் படரப்போவதின் ஒத்திகையாக அது இருந்தது.

''எடி பெரியபிள்ளை! உந்த நெருப்புப்பெட்டியைக் கொண்டா'' என்று சோமசுந்தரம் உள்ளே நோக்கிக் கத்தினர்.

அகிலா வந்து விளக்கை ஏற்றினாள்.

அவள் விளக்கை ஏற்றிவிட்டு குசினிப்பக்கமாகப் போய் விட்டாள். அங்கே அரிசிமா வறுத்தகுறையில்தான் விட்டு விட்டு வந்தாள். மீண்டும் அகப்பை கற, கறவெனச் சத்தம் போட்டது. மாஸ்டர் வந்த விஷயம் மிகவும் கனமானது என்பதைச் சோமசுந்தரம் ஊகித்ததாலோ என்னவோ அவராக இன்னும் பேச்சை எடுக்கவில்லை. மாஸ்டர் சால்வையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு தொடங்கினர். ''நீங்கள் கேள்விப்பட்டிருப்பியளோ தெரியாது'' என்று ஆரம்பித்த மாஸ்டரின் வார்த்தைகளைத் தொடர்ந்து குசினியில் கேட்டுக்கொண்டிருந்த கறகறச் சத்தம் நின்றது. அகிலாவின் காதுகள் கூர்மையாகின்றன என்பதைக் காட்டுகின்றன.

''மகனுக்குக் கலியாணம் பேசிக்கொண்டு யாழ்ப்பாணத்திலை கடை வைச்சிருக்கிற செல்வரத்தினம் போன கிழமை வந்திட்டுப் போனது. நான் வீட்டிலை இருக்கேல்லை. சிவபாக்கியம் எங்கடை நிலைபரத்தை எடுத்துச் சொன்னதாம். எங்களுக்கும் ரெண்டு பெண்பிளைப்பிள்ளைகள் இருக்கெண்டும், மகன் முடிச்சுப்போட்டுப் போனு எங்களைக் கவனிக்கஅவனுலை பிறகுஏலாதெண்டும் சொன்னதாம்.அதனுலை எங்கடை குமருகளையும் கரைசேர்க்க ஏதாவது உதவிசெய்ய ஓம்பட்டால்தான் கலியாணத்தைப்பற்றி யோசிக்கலாமெண்டு. அதோடை அவனைக் காணி பூமியெல்லாம் வித்துச் சுட்டுப் படிப்பிச்சதும் முக்கியமாய் இதுக்காகவெண்டும் சொன்னதாம். இல்லாட்டி எங்கையாவது மாத்துச் சடங்கு வசதியாக வந்தால் பாப்பம் எண்டு சொல்லிப் போட்டுதாம்.''

குசினியில் மீண்டும் கறகறச் சத்தம் தொடங்கியது.

மாஸ்டரே மீண்டும் தொடங்கினர்.

அவர் பேசத் தொடங்கியதும் குசினியில் மீண்டும் அமைதி நிலவுகிறது.

''உங்களுக்குத் தெரியுமெண்டு நினைக்கிறன். யாழ்ப்பாணத்திலை கடை வைச்சிருக்கிற மகாலிங்கம் எண்ட வண்ணார்பண்ணை ஆளாம். ரெண்டே ரெண்டு பெண்பிளைப்

பிள்ளைகள் மட்டும்தானும் அவருக்கு. மூத்த மகளை ஆரோ டாக்குத்தராம்... முடிச்சிருக்கு. இது ரெண்டாவது மகள். சீதனமாக வீடு புறம்பாக, நகை, காசு போக, எங்கடை பெண்பிள்ளைப் பிள்ளைகளுக்கெண்டு இனமாக இருபதினாயிரம் தரலாம் எண்டு சொன்னதாம். பேச்சிலை அந்த ஆள் பிசகா தெண்டு செல்வரத்தினம் சொன்னது. நாங்களும் சம்மதிச்சு கோயில் ஐயரைக் கொண்டு பொருத்தத்தைப் பார்த்தம். நல்ல பொருத்தமாகக் கிடக்கு. பெண்பிள்ளையும் எல்லாத் தாலும் விசேஷமெண்டு செல்வரத்தினம் புழுகிறார்.''

குப்பி விளக்கு காற்றில் நடுங்குகிறது.

அடுப்பின் கரையில் அகிலா நெற்றியால் வியர்வை வழிந்தோட வெந்துகொண்டிருந்தாள். அவளின் இதயமும் சாம்பலாகிக்கொண்டிருந்தது.

சோமசுந்தரம் வாயிலிருந்த சுருட்டையெடுத்துத் திருப் பிப் பார்த்தவாறு, வார்த்தைகள் உருவம் பெற முடியா மல் நாத் தழுதழுக்கத் தடுமாறினார். உள்ளத்தின் ஏக் கங்களைப் புதைகுழியில் போட்டுவிட்டுத் தன்னைச் சமாளித் துக்கொள்ள அந்த மனுஷன் எவ்வளவு கஷ்டப்படுகிறா ரென்பதை மாஸ்டர் அந்த இரவு நேரத்தில் கண்டிருக்க முடியாது.

சந்திரசேகரன் சிறு குழந்தையாக இருந்தசமயம் ஒரு நாள் நெருப்புக் காய்ச்சலால் திடீரெனப் படுத்த படுக்கை யாகிவிட்டான். மாஸ்டரோ ஊரிலில்லை. பட்டறையை மூடிவிட்டு சோமசுந்தரம் சிவபாக்கியத்தையும் இழுத்துக் கொண்டு மூளாய் ஆஸ்பத்திரிக்குப் போனார். அங்கு அவன் குணமடைந்துவர இரண்டு கிழமைகளாயிற்று. அந்த ஆஸ் பத்திரி அறையொன்றில் நோய் தணியும்வரையும் கண் மூடாது அவனைத் தோளில் போட்டுக்கொண்டு மேலும் கீழும் நடந்த இரவுகள் ஞாபகம் வந்தன, சோமசுந்தரத் துக்கு. இந்தக் குடும்பமென்ற கூட்டை விட்டு வெளியே அவன் எங்கேயோ போகப்போகிறானென்பதைச் சோமசுந் தரத்தால் எளிதில் ஜீரணிக்க முடியவில்லை,

சோமசுந்தரம் அங்கு நிலவிய அமைதியைக் குலைத்துக் கொண்டு பேசினர்: ''உங்களுக்கு விருப்பமெண்டால் செய்யிறது நல்லதுதான். இப்பிடி எல்லாம் வசதியாக உங்களுக்கு இனிவராமலும் போகலாம். எல்லா விஷயங்களையும் நறுக்காகப் பேசிக் குற்றங் குறைபில்லாமல் செய்யுங்கோ.'' சோமசுந்தரம் மனத்தால் ஈடுபடாமல் நிதானமாக அந்த வார்த்தைகளை ஒருவாறு பேசி முடித்துவிட்டார்.

அகிலா அடுப்பிலிருந்து தாய்ச்சிச் சட்டியை இறக்கி வைத்தாள். அவளின் கை, கால்கள் இயங்குகின்றனவே ஒழிய அவளின் மனம் அல்லற்பட்டுக்கொண்டிருந்தது.

'அட கடவுளே! நான் எதற்காக ஏங்கவேணும்? சந்திரனை நான் என்னையறியாமலே விரும்புகிறேனு? இல்லாவிட்டால் எதையோ எனக்குச் சொந்தமான ஒண்டைப் பறிகொடுத்ததுபோல என்ர மனம் தவிக்கிறதே... சீ...சீ... அப்படியில்லை. அப்படி நினைக்கிறது எவ்வளவு முட்டாள் தனம். சந்திரன்! நீ வாழ்க்கையிலை எல்லோரையும்போல பணத்துக்கும் பொருளுக்கும் மதிப்புக்கொடுத்து வாழமாட்டாயே. எதையும் சமாளித்துப் போராடுகிற தன்மை உனக்கிருந்ததாலை நான் உன்னை அடையலாம் என்று ஏமாந்துவிட்டேனு?' அவளின் மனக் குழப்பத்துக்கு விடையே கிடையாது. வெளியே தகப்பன் கூப்பிடுவது கேட்டு, சட்டைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''பிள்ளை மாமாவுக்குத் தேத்தண்ணி கொண்டுவா மோனை.''

மாஸ்டருக்கு தேநீர் போட்டுக் கொண்டுவந்து நீட்டினுள் அகிலா.

மாஸ்டர் அகிலாவை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தார். உண்மையை எதிர்கொண்ட குற்றவாளியாக மீண்டும் குனிந்து அவள் போய் மறையும் வரைக்கும் பேச்சை நிறுத்தினுர். ஆனுல், அவளின் காதிலும் அவர் இதுவரை பேசியது விழுந்ததை அவர் அறிவாரா?

செல்லம்மாவின் பேதைமனம் வளர்த்து வைத்திருந்த நம்பிக்கை பொறிந்து தரைமட்டமாகிவிட்டதால் அந்தத் தாக்கத்திலிருந்து மீளமுடியாது அவள் மௌனமாகவே இருந்தாள்.

'என்ன பாக்கியம்! மருமோளை இப்பவே கடுமையாய்ப் பார்க்கிறாய். அவளை உன்ரை மோனுக்கு எடுக்கிறதெண்டால் நீதான் செல்லம்மாவுக்குச் சீதனம் கொடுக்க வேணும். அவளுக்கு எத்தினைபேர் போட்டி போட்டுக் கொண்டு வருவினமெண்டு பாரன் இருந்து.' இந்த வார்த்தைகள் செல்லம்மாவின் மனக்கூட்டை விட்டுச் சிறகடித்துச் சென்றன—

பறந்து போயிற்று!

மாஸ்டர் விடைபெற்றுச் சென்றார்.

செல்லம்மாவைச் சோமசுந்தரம் கூப்பிட்டார்.

''செல்லம்! நீ என்ன கடுமையாய் யோசிக்கிறாய்? ஏன் சந்திரனை அகிலாவுக்குச் செய்யலாமெண்டு நினைச்சிருந்தனியாக்கும்?''

''நான் அப்படி நினைச்சிருக்கேல்லை. ஏதோ விதிப் பலன் எங்கே இருக்கோ அங்குதான் நடக்கும். நாங்கள் நினைக்கிறதுபோலை எல்லாம் நடக்குதே'' என்ற பெருமூச்சு அவளின் ஏக்கங்களை அளவிட்டுக் காட்டின.

''அவன் சந்திரன் எங்கடை பிள்ளையைக் கட்டினால் அவனும் எங்களைப்போலத்தான் கஷ்டப்படுவான். ஏதோ அவனுக்கும் அவன்ரை சகோதரியளுக்கெண்டாலும் ஏதோ நல்லவழியிலை போகட்டுமென். ஆனால், எண்டைக்கும் நான் உன்னைப்போலை முடிச்சுப்போட்டு யோசிக்கேல்லை'' செல்லம்மாவை நடுநிலைக்கு இழுத்துவந்தார் சோமசுந்தரம்.

# 10.

சந்திரசேகரனுக்கு தாயிடமிருந்து வந்த கடிதத்தில் எதுவும் விபரமாக இல்லை. நேரில் பேச அவனை வரும்படி எழுதப்பட்டிருந்தது. அவனுக்கும் தாய்க்குமிடையே சமீப காலமாக நடந்துள்ள கடிதப் போக்குவரத்துக்களிலிருந்து என்ன விஷயமாக இருக்குமென்று அவனால் ஊகித்திருக்க முடியும். என்றாலும் இயற்கையாக எழும் சபலத்துக்குள்ளானான். நான்கு நாட்கள் லீவு போட்டுவிட்டு ஊருக்குத் திரும்பினான்.

பனை வடலிகளை ஊடறுத்துச் செல்லும் ஒற்றையடிப் பாதையால் அவன் வந்துகொண்டிருப்பதை மடத்தில் சாய்ந்தவாறு காண்கிறார் சோமசுந்தரம். சந்திரசேகரன் மடத்தினருகே வந்து சூட்கேசை வைத்துவிட்டு நிமிர்ந்தான்.

''ஏன் தம்பி! யாழ்தேவி இப்பதான் வந்ததோ?'' என்றார் புன்சிரிப்புடன் சோமசுந்தரம்.

''ஏன் மாமா! வீட்டிலை ஏதாகிலும் விசேஷமோ?''

அவன் 'விசேஷம்' என்று கேட்டதும், சோமசுந்தரம் எதையோ சொல்ல நினைத்தவர் திடீரென நிறுத்தி, ''அப்படியொன்றுமில்லை'' என்றார்.

''அப்ப வாறன் மாமா'' என்று விடைபெற்று சந்திரசேகரன் நடக்கலானான்.

★

''வா தம்பி! ஏன் இண்டைக்கு ரயில் இவ்வளவு நேரம் சென்டது? நான் சாப்பாடு எடுத்துவைச்சு எவ்வளவு நேரமாப்போச்சு. கறியள் எல்லாம் ஆறியிருக்கும். உனக்கு ஆறின பிடிக்காதெல்லே. கெதியாக முகத்தைக் கழுவிக் கொண்டு வா- சாப்பிடு'' என்று சிவபாக்கியம் உத்தரவு போட்டாள்.

மாஸ்டர் இன்னும் வவுனியாவிலிருந்து வரவில்லை. அவர் பின்னேரம்மட்டில்தான் வந்து சேருவார்.

சந்திரசேகரன் சூட்கேசைத் திறந்து சாரத்தையும் துவாயையும் எடுத்துக்கொண்டு குனிந்த தலைகூட நிமிராமல், ''ஏனம்மா அவசரமெண்டு வரச்சொல்லி எழுதினனீங்கள்?'' என்று சூட்கேசை சற்று வேகமாகவே பூட்டினுன்.

மாஸ்டர் வந்துசேரக் கடைசி ஐந்து மணியாவது ஆகிவிடும். அதற்கிடையில் சிவபாக்கியம் மகனைத் தனியாக வாதிட்டு வெல்லவேண்டிய பெரும் பொறுப்புடன் செயல்பட்டு, அதன் முதற்படியாக அவனிடம் எதுவிஷயமும் பேசாது, ''வா! சாப்பிடு. பிறகு கதைக்கலாம்'' என்ருள்.

அவன் முகத்தைக் கழுவிக்கொண்டு வந்து மேசையின் முன் அமர்ந்தான். அவனுடைய கோப்பையில் கறிகளைப் பரிமாறிக்கொண்டிருந்த சிவபாக்கியம், சந்திரசேகரனின் தங்கைகளை உள்ளே போகும்படி கூறவே, அவர்கள் உள்ளே போயினர்.

சந்திரசேகரன் சாப்பிட்டுவிட்டு பக்கத்திலிருந்த பேசனில் கைகளைக் கழுவிக்கொண்டு கதிரையை விலக்கி எழுந்து நின்ருன்.

''தம்பி! உன்ர சகோதரிகள் ரெண்டு பேரும் இப்படிச் சீவியகாலம் முழுக்க குசினியிக்கிள்ளை கிடந்து கரையேற வசதியில்லாமல் அவதிப் படுகிறது உனக்கு நல்லாப்படுகுதோ?'' என்று சிவபாக்கியம் கேட்டாள்.

''அதுக்கு நான் என்ன செய்ய?''

''உன்னைப் படிப்பிக்கிறதுக்காக அவளவைக் கெண்டு வாங்கி வைத்திருந்த ரூேட்டுக் காணியையும் வித்துச்சுட்டுக் கொய்யா ஒற்றைக் காலிலை நிண்டு படிப்பிச்சு ஒரு சுகமும் இல்லை எண்டு அவர் பெருமூச்சு விட்டா நீ நல்லா இருப்பியோ?''

சந்திரசேகரன் விருந்தையின் மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தான்.

குசினிக்குள் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்த அவனுடைய சகோதரிகள் இருவரும் ஆயுள்கைதிகளாக, எதிரே தெரியும் யன்னலினூடாகத் தெரிகின்றனர்.

சந்திரசேகரனின் பார்வை எதிலுமே நிலைக்கவில்லை. அவனின் கண்களின் முன்னே இருந்த பொருட்கள் அத்தனையும் அவனுடைய நடைக்கேற்ப ஊஞ்சலாடிக்கொண்டிருந்தன. சிவபாக்கியம் தனது எண்ணத்துக் கெதிராக அவன்மனதில் ஏதாவது எழுந்து விடுமோ என்ற அச்சத்தில், மீண்டும் தொடர்ந்தாள்:

''அதுதான் தம்பி உனக்கொரு கல்யாணத்தை எங்கடை மூத்தவள் தேவகியோடு மாத்துச் சடங்காய் எங்கையெண்டாலும் வசதியாக வந்தால் செய்வமெண்டு நினைச்சிருந்தம். எனக்கெண்டா மாத்துச் சடங்கு துண்டாக விருப்பமில்லை. ஒரு குடும்பம் வாழும்? ஒரு குடும்பம் தாழும். இதுதான் உலகத்திலை நடக்குது. ஏதோ கடவுளின்ரை கிருபை யாழ்ப்பாணத்திலை இருந்து கடைக்காரச் செல்வரத்தினம் வந்தது. செல்வரத்தினத்தின்ரை கடைக்குப்பக்கத்துக் கடைக்கார ஆளாம். மகாலிங்கமெண்டால் வண்ணார் பண்ணையிலை எல்லோருக்குந் தெரியுமாம். சீதனம் நாங்கள் கேக்கிறபடியால் உன்ரை சகோதரிகளுக் கெண்டு இனமாக இருபதினாயிரம் தருகினம். இதைவிட மகளுக்கு பெரிய வீடொன்றும் காசும் நகையும் இருக்கு. மூத்தமகளை டாக்குத்தர் முடிச்சிருக்காம். இது ரெண்டாவது பிள்ளை.

வேறை பிள்ளையளும் இல்லை. ஒரு கரைச்சல் இல்லாத இடம். எங்கடை சாதியிக்கை நல்ல இடமாகப் பாத்துத் திரிஞ்சு உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டாப் போலை விடாப்பிடியாக நிக்கினம். எங்களுக்கு இப்பிடி எல்லாத்தாலும் வசதியாக இனிமேல் வராது எண்டு நினைக்கிறேன்.''

சிவபாக்கியம் பதிலை எதிர்பார்த்து நின்றாலும், அவனோ விருந்தையில் இப்பொழுதும் மேலும் கீழும் நடந்துகொண்டுதானிருந்தான். அவன் பாடசாலையை விட்டு விலகிய நாளில் அவனுடைய ஆசிரியர் ஒருவர் அவனுக்கெழுதிக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரமும் கோவில் மடத்தில் மாணிக்கராஜா

வுடன் அவனும் நண்பர்களும் பேசிய வார்த்தைகளும் அவனுடைய வாழ்க்கையில் அர்த்தம்பெருமல் போகவேண்டியதுதான். தனது குடும்பம் சகோதரங்களின் எதிர்காலம் என்பன அவன் முன்னுல் விரிந்து இதற்கு ஒரு தீர்க்கமான முடிவு கட்ட வேண்டுமென நெருக்கின.

''தம்பி! எங்கடை அண்ணருடைய பிள்ளை அகிலாவும் பாவந்தான். அவளை உனக்குக் கல்யாணம் செய்யலாமெண்டு மச்சாளுக்குச் சில நேரம் யோசினைகள் இருந்திருக்கும். அவளை நீ கட்டினுல் என்னத்தைக் காணப் போருய் உன்னுடைய சகோதரிமார் காலகாலத்திலை கரையேருமல் கண்ணீரும் கம்பலையுமாக அலையவிட்டுவிட்டு உன்னுலை நிம்மதியாகச் சீவிக்க ஏலாதெண்டுதான் நாங்கள் இந்த முடிவுக்கு வந்தது உன்ரை உழைப்பில் மிச்சம் பிடிச்சு அவளவையைக் கரை சேர்க்கிறதுக் கிடையிலை அவளவைக்கு வயது போயிடும். பிறகு ஆர் வந்து கட்டுவினம். நீ உன்ரை நிலைபரத்தை நல்லாக யோசிக்க வேணும்.

சந்திரசேகரன் ஒரு முடிவுக்கு வந்தான். அதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்று விசாரணைக்குக்கூட அவன் இடம் வைக்கவில்லை. அகிலா என்ற பெண் அவனின் இதயத்தைக் குத்திக்கிளறினுல் அவன் தனது முடிவில் ஈடாட்டம் கண்டுவிடுவோமோ என்ற அச்சத்தினுல் அந்தப் பக்கத்தில் சிந்தனையை வளர்க்கவில்லை. இல்லாவிட்டால் அவன் ஒரு முடிவுக்கு வரமுடியாது உணர்ச்சிகளின் மத்தியில் தடுமாறியிருப்பான்.

''அம்மா! நீங்கள் சொல்லுறபடி என்ரை சகோதரிகளினுடைய வாழ்க்கை என்னுலை அநியாயமாகப் போக வேண்டாம். நீங்கள் சொல்லுறபடி செய்கிறன் கதையைப் பாத்தால் பெரிய இடத்துக் கல்யாணம் போல கிடக்கு. அது போக பொம்பிளை எப்பிடி குணம், எப்பிடி எண்டு ஒண்டும் விசாரியாமல் காசு பணம் எண்ட உடனை முற்றுச் சொல்லிப் போட்டியள்.''

''ஆர் முற்றுச் சொன்னது. உன்னை வந்து பார்க்கட்டாம். உனக்குப் பிடிக்காட்டிச் சொல்லு. ஏன் பிடிக்காத

பெம்பிளையை எங்களுக்காகச் செய்யிருய். நாளைக்கு அல்லது வெள்ளிக்கிழமை போய்ப் பார்த்துக் கொண்டு வருவம்: எல்லாவற்றையும் விபரமாகக் கொய்யா, செல்வரத்தினத் தோடை கதைக்கட்டும்.''

மகன் பேசாது போனதன் அர்த்தம் விளங்கியவளாகச் சிவபாக்கியம் மிகவும் சந்தோஷமடைந்தாள். மாஸ்டரும் அதில் பங்கு கொள்ள வந்தவர்போல சரியான நேரத்தில் படலையைத் தட்டினர்.

## 11.

இரத்தினம் காரைக் கொண்டு வந்து மாஸ்டரின் வீட்டுப்படலையில் நிறுத்திவிட்டு 'ஹோன்' அடித்தான்.

''என்ன மாஸ்டர் எல்லாரும் ஆயத்தமோ?'' என்று கேட்டான்.

''சரி, சரி! எல்லாரும் வந்தேறுங்கோ கெதிப்பண்ணி'' என்று மாஸ்டர் அவசரப்படுத்தினர். முன்சீட்டில் கிட்டினரும் சந்திரசேகரனும் ஏறிக்கொள்ள, பின்சீட்டில் மாஸ்டரும் சிவபாக்கியமும் ஏறினர்கள்.

கார் புறப்படுவதற்கு 'ஸ்டாட்' செய்ததும் கிட்டினர் 'பிள்ளையாரே' என்று கோவில் பக்கம் திரும்பினர். வண்ணார்பண்ணையை நோக்கிக் கார் புறப்பட்டது. இரத்தினம் மாஸ்டரிடம் பேச்சுக் கொடுக்குமுன் ஒழுங்கைகளைத் தாண்டி ரேட்டில் கார் ஏறிவிட்டது. இனி நேர் ரேட்டுத் தான்.

''என்ன மாஸ்டர்? வலு இரகசியமாகத் திடுமுட்டென்று செய்யிறியள்?'' இரத்தினம் சகுனக் கேடாக ஏதாவது பேசிவிடக் கூடாதென்று அளந்து பேசினன்.

''கால பலன் சரியாக வந்தால் எல்லாம் தானகச் சரி வரும்'' என்று கிட்டினர் காற்றிலே மிதக்கும் கனமில்லாத வார்த்தைகளை உதிர்த்திவிட்டுக் காரின் எதிரே காணும்

மக்களுக்கெல்லாம் அவர்கள் பார்த்தாலும் சரி, பார்க்கா விட்டாலும் சரி தலையாட்டிக்கொண்டிருந்தார்.

இரத்தினம் மீண்டும் பேச்சைத் தொடங்கினுல் அவனுடைய கேள்விகளுக்குப் பதில்கள் அளிப்பதிலும் பார்க்கத் தானே கேள்விகளைக் கேட்டு பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைப்பது சுலபமென்பதை அறிந்த சிவபாக்கியம், "இரத்தினம்! அண்ணற்றை பொடிச்சியைக் கட்டினுல் ஒண்டுக்கை ஒண்டு; அவரும் பாவம் எண்டு நீ சொல்லப்போருய். இல்லையோ? நீ எங்கடை நிலைபரத்தையும் ஒருக்கால் யோசிச்சுப் பார்க்கவேணும். நாங்கள் என்ன செய்யலாம்? சந்திரனைக் காணி பூமியை வித்துச் சுட்டுப் படிப்பிச்சது எங்களுக்கும் ஏதாவது உதவி செய்வன் எண்டுதானே? அண்ணரிட்டைப் பொடிச்சிக்குக் குடுக்க என்ன கிடக்கு? அப்பிடி அகிலாவைச் செய்யிற யோசனை இருந்தா சந்திரனைச் செலவழித்துப் படிப்பிக்காமல் ஏதாவது கிளாக்கர் வேலைக்கு அனுப்பியிருக்கலாம்." — சிவபாக்கியம் இந்த வார்த்தைகளால் இரத்தினத்தை மட்டுமல்லாது காரில் மௌனமாக இருக்கும் தனது மகனையும் சேர்த்து மடக்கினுள்.

காரின் முன்பாக அசுர வேகத்தில் லொறியொன்று எதிர்த்து வர, இரத்தினம் பிறேக்கைப் போட்டு நிறுத்தி விட்டு மீண்டும் 'அக்ஸிலரேட்டரில்' மிதிக்கிருன்.

கார் மீண்டும் வேகம் பெறுகிறது.

"என்னவெண்டாலும் மாஸ்டர் நீங்களெல்லாரும் அந்த மனுஷனைப் புறக்கணிச்சுப் போட்டுத் தான் தப்புற புத்தியைப் பாக்கிறியள். நான் இப்படிச் சொல்லுறன் எண்டு கோவியாதையுங்கோ. என்னவோ என்ரை மன சில பட்டதைச் சொன்னனுன். அவ்வளவுதான்" என்ருன் இரத்தினம்.

"சும்மாயிரு இரத்தினம். இந்த நாளையில ஒருத்தர் இன்னெருவரைக் கை தூக்கி விடுகிற நிலையிலா இருக்கிறம்? தான் போக வழியில்லையாம், மூஞ்சூறு விளக்குமாறையும் கொண்டு போச்சுதாம். அதைப்போல கிடக்கு உன்ரை கதை. அதை விட்டுட்டு இப்ப எங்களைக் கொண்டுபோய்

விட்டுட்டுப் பிறகு வ்ந்து கூட்டிக்கொண்டு போகப் போறியோ அல்லது அலுவல்கள் முடியும் வரையும் நிற்கப் போறியோ?'' என்று பிரச்சினையைத் திசை திருப்பினுள் சிவபாக்கியம்.

''அவ்வளவு சுணங்காதுதானே. நிண்டு போவம்...... என்ன கிட்டினரண்ணை வீடு உங்களுக்கு எதுவெண்டு தெரியுந்தானே?''

''ஓ! ஓ! இன்னும் அந்த மதகு தாண்டிப் போக வேணும். அந்தா தெரியுது ஒரு வெள்ளிப் பெயின்ட் அடிச்ச கேற். அதுக்கு முன்னுலே நிற்பாட்டு.''

கார் நின்றது. காரின் கதவுகளைத் திறந்து மூடும் சத்தத்தைத் தவிர ஓரே அமைதி. அந்தப் பாரிய 'கேற்'றைப் போய் கிட்டினர் திறந்ததும், கராச்சை நிரப்பி நிற்கும் 'பேஜோ' காரும், அழகான பல வர்ண குரூேட்டன்களும் பட்டெனத் தெரிந்தன.

செல்வரத்தினமும், மகாலிங்கமும் ஓடிவந்து வரவேற்ருர்கள்.

''வாருங்கோ! வாருங்கோ!''

கைகள் கதிரைகளைக் காட்டியபடி நின்றன. எல்லாரும் உள்ளே சென்ருர்கள். சந்திரசேகரன் வீட்டின் உட்புறம் தெரியக் கூடிய திசையில் அமர்ந்துகொண்டான். வீட்டின் அலங்காரம் அங்குள்ளோரின் மிடுக்கைக் காட்டியது. கிட்டினர் வழமை போல் அமைதியைக் குலைத்துப் பேச்சை ஆரம்பித்தார். மகாலிங்கத்தின் மூத்த மகளின் கணவனுன டாக்டர் பரமேஸ்வரனும் பட்டு வேட்டி சரசரக்க உள்ளேயும் வெளியேயும் போய் வந்தபடி இருந்தார்.

அறையின் ஜன்னல் திறக்கப்பட்டிருந்தது. அதன் பின்னல் பெண்கள் கூட்டத்தின் விழிகள் மொய்த்திருந்தன. அந்த விழிகளெல்லாம் சந்திரசேகரனைத் துளாவின. சந்தன நிறத்தில் சேட்டும், வெள்ளை நிறத்தில் லோங்ஸூம் போட்டிருந்தான். காலுக்கு மேல் கால் போட்டு அவனிருந்த எடுப்பான தோற்றமும், எவரையும் கவர்ந்திழுக்கும் பார்வையும் அவனைப் புறம்பாக எடுத்துக் காட்டின.

''பிள்ளை! இங்காலை வாவன்'' என்று மகாலிங்கம் அழைத்தார். வீட்டிலிருந்த 'டேப் றெக்கோடரில்' சிட்டி பாபுவின் வீணை இசை மெல்ல ஓடிக்கொண்டிருந்தது. அவரின் மகளான ஜெயராணி கைகளில் 'எவர் சில்வர்' குவளைகள் அடுக்கியிருந்த தட்டத்துடன் முன்னுல் வந்தாள்.

பட்டுச் சேலையும், நகையும், பூவும் நிறைத்து வந்தாள். மிடுக்கான அவளின் அழகு சவால் விட்டது. சந்திரசேகரன் விழிகளைத் திருப்பிப் பார்த்துக்கொண்டான். அதே நேரம் அவளும் ஒரு முறை பார்த்துவிட்டுக் கனவுப் பொருளாக அவள் அங்கிருந்தோர் முன்பு தட்டத்தைக் குனிந்து நீட்டினுள். சந்திரசேகரனிடம் நீட்டியபோது அவளின் பின்னிவிட்ட கூந்தல் முதுகைவிட்டுச் சறுக்கி முன்னுல் விழுந்தது' தட்டத்தை டீபோயில் வைத்துவிட்டுப் பின்னலைத் தூக்கிப் பின்புறமாக எறிந்துவிட்டு, மீண்டும் தட்டத்தை எடுத்துச் சென்றுள். இந்த நேர இடைவெளியில் சந்திரசேகரனும், ஜெயராணியும் ஒருவரையொருவர் நன்ருகப் பார்த்துவிட முடியும்.

டாக்டர் பரமேஸ்வரன் சந்திரசேகரனுக்கு அருகில் அமர்ந்து, பொது விஷயங்களான அரசியல், இருவரும் கடமையாற்றும் பிற ஊர்களைப்பற்றி விமர்சித்துக்கொண்டிருந்தார். இருவரும் சற்று நேரம் நாகரிகமாகப் பேசினுர்கள். டாக்டர் எழுந்து செல்ல முன்பு, புன்முறுவலுடன் சந்திரசேகரனைப் பார்த்து, ''ஆர் யூ ஸற்றிஸ்பை.'.ட்'' என்று புன்சிரிப்போடு கேட்டார். சந்திரசேகரனுல் பதிலுக்கு ஒரு புன்சிரிப்பையே உதிர்க்க முடிந்தது.

சிவபாக்கியம் பெண்கள் இருந்த பக்கத்தைவிட்டு முன்பாக வந்து மகனைத் தனியாக அழைத்து மிகவும் இரகசியமாக அவனின் அபிப்பிராயத்தைக் கேட்டாள். அவன் கடைசி நேரத்தில் சறுக்கினுல் தொந்தரவு என்று அவளின் நெஞ்சம் அடித்துக்கொண்டது.

''ஏதோ நீங்கள் பார்த்துப் பிடிச்சால் சரி'' — வார்த்தைகளால் தன்னைப் போர்த்து மூடப் பார்த்தான் சந்திரசேகரன்.

விருந்தையில் ஆண்களெல்லாரும் கல்யாண ஒழுங்குகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாருக்கும் மத்தியில் கிட்டினர் வெற்றிலை பாக்குத் தட்டத்தின் முன்பாக இருந்து, வாயைக் குதப்பிக் குதப்பி வெளுத்து வாங்கினார்.

''இந்த மாதக் கடைசியிலை ஒரு நல்ல நாள் இருக்கு. எழுத்தையும் தாலி கட்டுறதையும் ஒரே நாளிலை முடிச்சுப் போட்டாச் செலவும் சுருக்கம், எல்லாத்துக்கும் வசதி. இனி எழுதிப்போட்டு விடுறதும் சரியில்லை. ஊரிலை பல மாதிரிக் கதை வரும்.''

மாஸ்டரின் ஏற்பாட்டை மகாலிங்கம் ஏற்றுக்கொண்டவர் போல தலையசைத்தார். கிட்டினர், 'ஒரு சின்ன விஷயம்' என்று மகாலிங்கத்தைத் தனியாகக் கூட்டிப்போய் காதோடு ஏதோ பேசினார். மகாலிங்கம் அறைக்குள் போய் விட்டுத் திரும்பி வந்து-

''சீ...... சீ...... அதிலை பிரச்சினை இல்லை. பின்னுக்குப் போடத் தேவையில்லை. மாதம் முடிய நாளை வைப்பம். நாங்கள் எல்லா ஆயத்தமும் சரி! நீங்கள் சரியெண்டால் நாங்கள் ஓம்தான்.''

''அப்ப பின்னைப் பஞ்சாங்கத்தை எடுத்து வாருங்கோ எத்தினை மணிக்கு ராகு காலம் கழியுதெண்டு பாப்பம்.''

ஒரு பையன் வந்து மாஸ்டரிடம் பஞ்சாங்கத்தை நீட்டினான்.

''சரியாகப் பகல் பன்னிரண்டு மணிக்கு முதல் எல்லா அலுவலும் முடியவேணும்.''

''ஓ... ஓ...... சரி... சரி......''

''அப்ப வாருங்கோ போவம்.''

''சரி வாறம்.''

எல்லாரும் விடைபெற்றுச் சென்றனர்.

கார் உறுமிக்கொண்டு சென்றது.

## 12.

சந்திரசேகரன் மறு நாள் பின்னேர மெயில் வண்டியில் கொழும்புக்குப் புறப்பட்டான். மழை இலேசாகத் தூறிக்கொண்டிருந்தது. மெயில் வண்டி மல்லாகம் ஸ்டேஷனுக்கு வருமுன்னே மழை பலமாகப் பெய்யத் தொடங்கி விட்டது.

ஆறு மணிக்கே நிலம் இருண்டுவிட்டது.

மெயில் வண்டி புகையிரத நிலைய மேடையருகில் வந்து இறீச்சிட்டு நிற்க ஆறரை மணியாகிவிட்டது. சந்திரசேகரன் வசதியாக ஒரு மூலையில் அமர்ந்துகொண்டான். சனக் கூட்டம் அதிகமில்லை. சுன்னுகமும், யாழ்ப்பாணமும் தாண்டினுல்தான் உண்மை நிலையை அறிய முடியும்.

மழைத் தூறல் ஜன்னலினூடாக அடித்துக்கொண்டிருக்கவே, ஜன்னல் கண்ணுடியை இறக்கிவிட்டான். வெளியே தெரிந்த கும்மிருட்டு மறைந்து, அந்தப் பெட்டியில் இருப்பவர்களின் உருவங்களைக் காட்டுகிறது அக்கண்ணுடி. சந்திரசேகரன் கண்ணுடியின் அருகே அமர்ந்திருந்ததால் அவனது உருவம் தெளிவாக அவனுக்குத் தெரிந்தது. அவனுடைய உருவத்தை ஒரு வினடி கூட ஒழுங்காகக் காட்டியிராது. அந்தக் கண்ணுடியில் விழுந்து சிதறும் மழைத் துளிகள் பொட்டுப் பொட்டாக ஒன்று சேர்ந்து கன்னங்களில் வழியும் கண்ணீர் போல ஓடிக்கொண்டிருந்தன. சந்திரசேகரனின் உருவம் அந்தக் கண்ணீரில் கரைந்து ததும்பிக்கொண்டிருந்தது.

ஓவென்ற ரயிலின் பேரிரைச்சல்—

சந்திரசேகரன் அந்தக் கண்ணுடியில் வழிந்தோடும் நீரையும், அதில் கரைந்துபோகும் தன்னுருவத்தையும் இமை கொட்டாது பார்த்தவண்ணம் இருந்தான்.

அவனுக்கு ஏதோ ஞாபகம் வந்திருக்கவேணும்!

ஓ! அகிலா! நீ சொரியும் கண்ணீரா இது? அதில் நான் கரைந்துகொண்டிருக்கிறேனு?

யாழ்ப்பாணம் ஸ்டேஷன் வந்தது.

சூட்கேஸ்களை ஜன்னல்களினூடாகப் பார்த்தும் பாராமலும் எறிபவர்களும், தொம் தொம்மென்று ஓடி வருபவர்களுமாகப் பெட்டிகள் கட கடவென நிறைந்தன. சந்திரசேகரனுக்கும் அவனுடைய நண்பர்களுக்கும் அரசியல் போதனை செய்த மாணிக்கராஜா வந்து சந்திரசேகரனை அடையாளங் கண்டு கொள்கிறுன். அவன் முன்பாக இருந்த சீட்டில் அமருகிறுன்.

''என்ன தம்பி சந்திரன்! சரியாக மாறிவிட்டீர்'' என்று கூறியபோது, சந்திரசேகரனின் மனதில் ஏதோ குற்றவுணர்வு வியாபித்து, மாணிக்கராஜா எதுவித ஆழ்ந்த அர்த்தமுமில்லாமல் பேசிய வார்த்தைகளைத் துருவித் துருவி ஆராய்ந்தது. 'நான் மாறிவிட்டேனு?' என்று தன்னைத் தானே இதயம் கேட்டுக்கொள்ள, வாயால், ''எதைச் சொல்லுறியள்'' என்று மட்டும் கேட்டு வைத்தான்.

''என்ன ஆளையே அடையாளம் தெரியவில்லை.''

''ஏன் நீங்களும் மாறிப் போனீர்கள்தானே?''

''என்ரை தலைமட்டும் நரைச்சிருக்கு. ஆள் அப்பிடித் தானே இருக்கிறன்.''

''ஓ...... ஓ......''—சந்திரசேகரன் சிரிக்கிறுன். மீண்டும் சந்திரசேகரனே பேச்சை எடுத்தான்.

''உங்களுடைய குடும்பமெல்லாம் எங்கே?''

''குடும்பமெண்டால் நான் இப்போதும் தனிக்கட்டைச் சீவியம்தான். அம்மா மட்டும் என்னோடு இருக்கிறு.'' மாணிக்கராஜா பட்டதாரியாக வெளியே வந்த நாட்களில் எத்தனையோ வசதியான தொழில்களில் சேர்ந்திருக்கலாம். அவற்றையெல்லாம் அவன் உதறித் தள்ளிவிட்டு தனது வாழ்க்கையில் கடைப்பிடித்திருந்த சில இலட்சியங்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து, அதற்காக உழைத்து உருக்குலைந்தவன். அவன் சென்ற பாதையில் குடியும் குடித்தனமும்

பற்றிச் சிந்திக்க முடியாமலே போய்விட்டது. அப்படியொரு பந்தம் அவனுக்கு இனிமேல் வந்தால்தான் உண்டு.

சந்திரசேகரன் தன்னை அவனோடு ஒன்றுசேர்த்து ஒப்பிட்டுப் பார்க்கிறான்.

'மாணிக்கராஜா! நீ எவ்வளவு உயர்ந்த மனிதன். உன்னுடைய வாழ்க்கையில் அர்த்தம் இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையிலோ......? எதுவுமே இல்லாது உலகத்தின் சுழற்சியோடு நானும் சுழல்கிறேன்.'

சந்திரசேகரனின் மௌனத்தை விலக்கினான் மாணிக்கராஜா.

"தம்பி எங்கை போறீர்?"

"கொழும்புக்கு."

"வேலைதானே?"

"ஓ! பாங்கிலை வேலை செய்கிறேன்..."

"நீங்கள் இப்ப...?"

"நான் இப்ப தொழிற் சங்கமொன்றிலை வேலை பாக்கிறன். இதுக்கு முந்தி நான் ஊரோடைதான் இருந்தன்."

"பை த வே, ஐ ஆம் கெட்டிங் மறீட் நெக்ஸ்ட் மந்த்" என்று நாசூக்காகச் சந்திரசேகரன் விஷயத்தைச் சொன்னான்.

"ஓ... ஐ... சீ... ரொம்ப சந்தோஷம். கல்யாண வீட்டுக்குக் கட்டாயம் அறிவியும். எங்கை சொந்தத்துக்குள்ளேயா அல்லது பிறத்தியிலையா?"

"சொந்தத்துக்கை வசதியாய் இல்லை. இது பிறத்தியிலை தான்."

இந்த வார்த்தைகள் சந்திரசேகரனின் இதயத்தை நெருடிக்கொண்டுதான் வந்தன.

"நான் நினைச்சன் உம்முடைய மாமனுருடைய மகளைத் தானுக்கும் எண்டு..."

"............"

மெயில் வண்டியின் சிற்றுண்டிச் சாலையிலிருந்து முட்டைப் பொரியலின் வாசனை காற்றோடு வந்து மூக்கைத்

துளைத்தது. என்னதான் இருந்தாலும் ரயில் வண்டியில் முட்டை பொரியும் வாசனையே அலாதியானதுதான். சந்திரசேகரன் தான் வைத்திருந்த பார்சலை எடுத்து, ''ஹௌ எபவுட் யுவர் டின்னர்'' என்றான்.

''டோன் வொறி எபவுட் மீ. யூ கரி ஒன்'' என்று பதிலளித்தான் மாணிக்கராஜா.

சந்திரசேகரன், மாணிக்கராஜாவுடன் தான் கொண்டு வந்த பார்சலைப் பகிர்ந்து உண்டான். அவன் தனது இதயச் சுமையையும் அவனோடு பகிர்ந்துகொண்டு சற்று ஆறுதல் பெறலாமென்று எண்ணிய சமயம், மாணிக்கராஜாவுக்கு அறிமுகமான ஒருவர் அவர்களருகில் வந்து நின்றார். மாணிக்ராஜா அவருடன் பேச்சைத் தொடங்கியபோது, சந்திரசேகரனின் எண்ணத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்கப் படுகிறது. பேச்சுத் திசை மாறியது. வந்த மனிதர் மாணிக்கராஜாவையும், சந்திரசேகரனையும் அழைத்து, ''வாருங்கோ... தேத்தண்ணி குடிச்சிட்டு வருவம்... கன்டீனிலை இருந்து கதைப்பம்'' என்றார்.

மாணிக்கராஜாவும், சந்திரசேகரனும் எழுந்து அவரைப் பின் தொடர்கிறார்கள். மெயில் வண்டி மூச்செறிந்து கொண்டு தாளலயத்தோடு ஓடிக்கொண்டிருக்கிறது.

## 13.

மாஸ்டரின் வீடு மிகவும் கலகலப்படைந்தது. நாளைக்கொரு பொழுது போனால் சந்திரசேகரனின் திருமணம். செல்லம்மா, அகிலா, அவளின் சகோதரிகள், பக்கத்து வீட்டுப் புவனம், சந்திரசேகரனின் சகோதரிகள் எல்லாருமாகப் பலகாரம் சுடுவதில் மும்முரமாக இருந்தனர். அகிலா சூட்டடுப்பொன்றை பின்புற முற்றத்தில்

வைத்துப் பால் ரொட்டி சுடுவதற்கு ஆயத்தமானாள். எண்ணெய் தாய்ச்சிச் சட்டியில் சூடேறிக் கலகலத்தது.

வாழையிலையில் மாவைத் தட்டி எண்ணெயில் போட்டாள்.

''என்ன புவனமக்கா! பால் ரொட்டி பொங்காதாம்.'' அகிலா சற்று உரக்கவே கேட்டாள்.

புவனம், அகிலாவின் அருகில் வந்து, ''மெல்லமாகச் சொல்லு... பால்ரொட்டி பொங்காட்டி...?''- என்று கேட்க,

''ஏன் அக்கா; ஏதேன் கூடாதோ?''

''சீ... சீ... அதெல்லாம் ஒண்டுமில்லை. அந்த நாளையிலே ஆக்கள் சும்மா சகுனம் கூடாதெண்டு சொல்லுறவை. அதெல்லாம் ஒண்டுமில்லை. நீ கொஞ்சம் குறுணலைக் கூட்டிப் போட்டுக் குழைச்சுப்போடு. சரிவரும்.''

அதன் பிறகு பால்ரொட்டி பூரித்துப் பொங்கியது.

அகிலா தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

விருந்தையில் பொன்னுருக்குவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. சாணத்தில் பிள்ளையார் பிடித்து, நடுவே அறுகம் புல் செருகி, நிறைகுடம் வைத்து, குத்துவிளக்கேற்றி, உமிச்சட்டியில் பொன் உருகிக் கட்டியாகியது.

கிட்டினர் தேங்காயை உடைத்தார்.

★

பெண் வீட்டார்கள் விடைபெற்றுச் சென்றுவிட்டனர். இரத்தினத்தின் கார் இரவிரவாக ஓடிக்கொண்டிருந்தது. விடிந்தால் திருமணமென்றால் சும்மாவா? பெண் வீட்டார்கள் வெகு விமரிசையாகக் கொண்டாட்டம் வைப்பதால் மணமகள் வீட்டிலிருந்து வருபவர்களை உபசரிக்கக்கூடிய அளவுக்காவது ஒழுங்குகள் செய்தாக வேண்டுமே. மாஸ்டரும், கிட்டினரும் களைத்துப்போனார்கள். செல்லம்மா, அகிலாவுக்குப் போடுவதற்காக இரவல் நகைக்கு ஓடித் திரிந்தாள். முடுக்கிவிட்ட யந்திரம்போல அங்குள்ள அனைவரும் செயற்பட்டுக்கொண்டிருந்தனர்.

கல்யாண தினம் வந்தது.
ஓமகுண்டத்தில் நெருப்பு சுவாலேவிட்டது.
ஐயரின் மந்திரங்கள் கணீரென ஒலித்தன.
மேளங்கள் முழங்கின-
பூக்கள் சொரிந்திட-
சந்திரசேகரனும், ஜெயராணியும் தம்பதிகளாயினர்.

☆

கல்யாணவீட்டு ஆரவாரங்கள் குறைந்து நான்கு நாட்களாகிவிட்டன. வீட்டின் சுவர்களேயும், தூண்களேயும் அலங்கரித்த வண்ணத் தாள்கள் மட்டும் அப்படியே இருந்தன. மற்றவையெல்லாம் பழைய தோற்றத்துக்கு வந்து வீட்டன.

மகாலிங்கம் மகளேயும், மருமகனேயும் காரில் ஏற்றி யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரசித்திபெற்ற கோவில்களுக்கெல்லாம் கூட்டிக்கொண்டு திரிந்தார் சந்திரசேகரனுக்கு இந்த ஏற்பாடுகள்பற்றி எவ்வித முன்னறிவித்தலும் கிடைப்பதில்லே. ஜெயராணி உடுப்பை மாற்றிப் புறப்பட ஆயத்தமாகும் போது சந்திரசேகரனேயும் அழைப்பாள். அவன் பட்டு வேட்டியொன்றை எடுத்துக் கொண்டு காரில் தொற்றுவான். ஒரு நாள் சந்திரசேகரனேத் தேங்காய் ஒன்றைக் கொடுத்து கோவிலொன்றின் முன்னே போய் அடித்து விட்டு வரும்படி ஜெயராணி கூறவே, அவன் கையில் தேங்காயை வாங்கிக்கொண்டு பட்டு வேட்டியின் படபடப்புடன் கோவில் வாசலே நோக்கிப் புறப்படலாஞன். அன்று வெள்ளிக்கிழமையானபடியால் சனக்கூட்டம் அதிகமாக இருந்தது. சந்திரசேகரனே, அவனுடைய பழங்கால நண்பனெருவன் கண்டான்.

''என்னடாப்பா கையிலே தேங்காயோடை மெத்த விலாசமாக வாருய். என்ன... எங்களேயெல்லாம் நினேப்பிருக்கோ அல்லது மறந்து போச்சோ? காறடியிலே நிக்கிறதுதான் உன்ரை சம்சாரமோ?''

''ஓமடாப்பா! எங்கை இந்தப் பக்கம்?''

அவன் கையில் இருந்த 'சுவிச்' சாவியைச் சுழற்றிக் காட்டுகிறான். ''இப்ப நான் இரும்புக்கடை ராசரத்தினத் தின்ரை கார் ஓடுறன். இண்டைக்கு ஒரு பகுதியாக்களைக் கூட்டியந்தனான். அது சரி இப்ப எங்கை உத்தியோகம்?''

''கொழும்போடை.''

''ஏண்டாப்பா எங்களை மறந்திட்டாய் போல கிடக்கு. அக்கம் பக்கத்து ஊரிலை இருக்கிறம். கடைசி உன்ரை கலியாண வீட்டுக்கென்றாலும் அறிவிக்கேல்லை?''

''இல்லைத் துரைசிங்கம்! நான் எங்கடை சொந்தக்கார ஆட்களுக்கு மட்டுந்தான் அறிவிச்சது. எல்லாருக்கும் சொல்ல வசதியில்லாமல் போய்விட்டது. எல்லாரும் இப்படித்தான் குறை நினைக்கினம். கலியாணமெண்டால் இப்பிடிக் குறை கட்டாயம் வருமெண்டு சொல்லுறது சரியாகக் கிடக்கு. அது போக, நீ கலியாணம் முடிச்சிட்டியோடாப்பா?''

''இல்லை... எங்களை நம்பி ஆர் பொம்பிளை தருவினம்? இண்டைக்கொரு வேலை, நாளைக்கொரு வேலை. எங்கடை பாடு போக்காட்டுறதே சில்லெடுப்பாக இருக்கு. அது சரி, சந்திரன், அந்த நாளையிலை நீ பெரிய வீம்பாக எங்களெல்லாருக்கும் லெக்சர் அடிப்பாய், கோயில் குளமெல்லாம் வெறும் பேக்காட்டென்று. இப்ப கையிலை தேங்காயோடை சைவப் பழமாக நிக்கிறாய். கலியாணத்தோடை எல்லாரும் உப்பிடித்தானடாப்பா'' என்று துரைசிங்கம், சந்திரசேகரனைப் பார்த்துச் சிரித்தான்.

துரைசிங்கம் மீண்டும் தொடர்ந்தான்: ''இந்தக் கோயில்லை ஏதாவது மனசிலை நினைச்சுக்கொண்டு தேங்காய் உடைச்சா அது கைகூடுமெண்டு சொல்லுறவை. நீ என்ன நினைச்சுக்கொண்டு உடைச்சனியடாப்பா?'' துரைசிங்கத்தின் மனோபாவத்தைச் சந்திரசேகரன் அறியாதவனல்ல. அவனுடைய முரட்டுத்தனமான திறந்த மனதினைப் பல ஆண்டுகளுக்கு முன்பே விரும்பியிருக்கிறான்.

''துரைசிங்கம்! நான் தேங்காயை உடைக்கேக்கை உண்மையைச் சொல்லப்போனால் ஒண்டுமே நினைக்கேல்லை. ஆனா ஒண்டு மட்டும் என்ர மனதிலை இருந்துது. என்ன தெரியுமா? அந்தத் தேங்காய் ஓரே அடியிலை உடைஞ்சுபோக வேணுமெண்டு. இல்லாட்டி அந்தச் சனத்துக்கிள்ளை... புது மாப்பிளை மாதிரிப் போய்... மரியாதை போயிடும்.''

பூசைக்காக மணி கிலுக்கும் சத்தம் கேட்கிறது.

ஜெயராணி, மகாலிங்கம், அவரது மனைவி, ஜெயராணியின் சகோதரி எல்லோரும் உள்ளே போனார்கள். சந்திரசேகரனும், துரைசிங்கமும் நடந்துகொண்டே பேசினார்கள். அப்பொழுது சந்திரசேகரனைத் தட்டி ஒரு பையன், ''உங்களைக் கோயிலுக்குள்ளை வரட்டாம். அருச்சனை பண்ண வேணுமாம்'' என்றான்.

சந்திரசேகரன் நண்பனைக் கையசைத்து அனுப்பி விட்டுக் கோயிலுக்குள் போனான்.

பூசை முடிந்துவிட்டது. ஐயர் விபூதி, சந்தனம் கொடுத்தார். ஜெயராணி விபூதி, சந்தனத்தைச் சந்திரசேகரனிடம் நீட்டினாள். அவன் தனது நடுவிரல் நுவயால் அவளின் கையிலிருந்த சந்தனத்தைத் தொட்டுக்கொண்டான்.

சில்லென்று குளிர்ந்தது.

நெற்றியில் இட்டுக்கொண்டான்.

அவள் சிரித்தாள்.

## 14.

சந்திரசேகரன், மனைவியுடன் தனது தாய் வீட்டுக்கு வந்திருந்தான். ஜெயராணி கால்களில் சிலிப்பர்களுடன் விறாந்தையிலுள்ள கதிரையொன்றில் ஏதோ சஞ்சிகை ஒன்றைப் படித்துக்கொண்டிருந்தாள். மாஸ்டர் பயணம் போய் விட்டார். சிவபாக்கியமும், சந்திரசேகரனின் சகோதரி

களும் குசினியில் ஏதோ வேலையில் மும்முரமாக ஈடுபட்டி ருந்தனர்.

அங்கு சோமசுந்தரம் வந்து நின்றது ஜெயராணிக்குத் தெரியவில்லை. ''பிள்ளை!'' என்று அவர் கூப்பிடவே, புத்த கத்தின் இடையில் விரல்களால் படித்துக்கொண்டிருந்த பக்கத்தைப் பாதுகாத்துக்கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''எங்க பிள்ளை தம்பி?''

சந்திரசேகரன் உள்ளேயிருந்து ஓடிவந்தான். ''வாருங்கோ மாமா...... ஏன் இருக்காமல் நிக்கிறியள்'' என்றுவிட்டு மனைவியைப் பார்த்தான்.

அவள் அப்பொழுதும் எழுந்திருக்கவில்லை. புத்தகத்தி லேயே லயித்திருந்தாள். சோமசுந்தரத்தின் தோற்றம் மரி யாதை செய்யக்கூடிய அளவுக்குச் சக்தி வாய்ந்ததாக இருக்கவில்லைத்தான். பட்டறையிலிருந்து உடனே எழுந்து வந்த அழுக்குப் படிந்த வேட்டியும், பல நாட்கள் சவரம் செய்யாத முகமுமாக நின்றுகொண்டிருந்தார்.

''தம்பி நான் இருக்க நேரமில்லை. நாளைக்கு ரெண்டு பேருமாக வாருங்கோ சாப்பிட. சிவபாக்கியத்திட்டையும் சொல்லு தம்பி. நான் வாறன்...''

வஞ்சகம் கலவாத சிரிப்பொன்றை உதிர்த்துவிட்டுச் சோமசுந்தரம் போய்விட்டார். சந்திரசேகரன் 'ஏன் மாமா வீண் செலவு உங்களுக்கு — பிறகொரு நாளைக்குப் பார்க்க லாம்' என்றெல்லாம் சொல்ல நினைத்தானே தவிர மறுத் துக் கூற முடியாது நின்றான்.

விருந்து போடுவதற்காகச் சோமசுந்தரம் அதிகாலை யிலேயே போய் ஆட்டிறைச்சி வாங்கி வந்துவிட்டார்.

கொழுப்பிலேயே வதக்கி மிளகாய்த் தூளும் பாலும் இட்டுப் பிரட்டலாகவும், புறம்பான குழம்புக் கறியாக வும் சமைத்திருந்தாள் அகிலா. விருந்துக்குச் சமையல் அகிலாவின் பொறுப்பில்தான். செல்லம்மா குசினியை விட்டு ஒதுங்கியது, மகளென்றால் நறுக்காகச் செய்வாள் என்பதற்காகவே. இரவலாக வாங்கி வந்த மேசையில் இறைச்சிக் கறிகளும், கத்தரிக்காயில் சமைத்த பால் கறி

யும், தக்காளிப்பழச் சம்பலும் அவர்களின் மனம்போல நிறைந்திருந்தன.

சந்திரசேகரனும், ஜெயராணியும் வருவதைக் கண்ட சோமசுந்தரம் புற்பாயை எடுத்து விரித்தார். வெற்றிலைத் தட்டத்தைச் செல்லம்மா அவர்களினருகே வைத்துவிட்டு நின்றாள்.

மனைவி இருப்பதற்கு அசெளகரியப்படுகிறாள் என்பதை அறிந்தோ என்னவோ சந்திரசேகரன் ''உள்ளுக்கை போமன்'' என்றான்.

அவள் இருப்பிடத்திலிருந்து எந்தப் பக்கம் போவது என்ற திகைப்பில் திரும்பி நின்றாள்.

நெற்றியில் சுருளாகக் கூந்தல் கலைந்து நிற்க அகிலா ஜெயராணியைக் கண்டதும் சிரித்து நின்றாள். ''வாங்கோ'' என்றாள் அகிலா. ஜெயராணி வீட்டைச் சுற்றி நோட்டம் விட்டவாறு உள்ளே போனாள். அகிலா விருந்திற்கான ஒழுங்குகளை முடித்துவிட்டு விலகி நின்றாள். அவளின் சகோதரிகளும் அவளின் பின்னால் நின்றார்கள். செல்லம்மா முன்னுக்கு வந்து பரிமாறினாள்.

''என்ன தம்பி! எப்பிடிக் கிடக்குக் கறியள்? இண்டைக்கு அகிலாதான் சமைச்சது. நான் மறதி பிடிச்சனான். நான் மறதியிலை உப்பை கிப்பை ரெண்டு தரமும் சிலநேரம் போட்டுடுவனெண்டு பெரிய பிள்ளையிட்டை விட்டிட்டன். தகப்பனுக்கு அகிலா சமைக்கிறதுதான் நல்லாகப் பிடிக்கும்'' என்றாள் செல்லம்மா.

சந்திரசேகரன் குனிந்த தலை நிமிராமல் தலையை ஆட்டித் திருப்தியைத் தெரிவித்துக்கொண்டான். ஜெயராணியின் முன்பாக அகிலாவின் சமையலை விமர்சிப்பது பொருத்தமாக அவனுக்குப் படவில்லைப்போலும். அவன் மனைவியைத் திரும்பிப் பார்த்தான்.

''தேவையானதை எடுத்துப் போடு பிள்ளை.'' செல்லம்மாவின் வேண்டுகோளைக் கேட்டதும் அவள் உதடுகளைப் பிதுக்கியவாறு, ''எல்லாம் போதும்'' என்று தண்ணீர் கிளாஸுடன் எழுந்து நின்றாள். சந்திரசேகரனும் அவ

ளைத் தொடர்ந்து எழுந்துவிட்டான். அவன் திருப்தியாகச் சாப்பிடவில்லையென்பதும் செல்லம்மாவுக்குப் புரிந்துவிட்டது. அகிலாவும் மேசையைப் பார்த்தவாறு நின்ருள். ஒரு திருப்தியின்மை அவளின் முகத்தைச் சூழ்ந்து மறைந்தது.

''மாமி! மாமாவும், நீங்களெல்லாரும் சாப்பிட்டுவிட்டு வாருங்கோ கையோடை. நாங்கள் விருந்தையிலை இருக்கிறம்'' என்று இருவரும் வெளியே போனார்கள். அவர்களை விருந்தையில் தனியாகக் காவல் காக்க வைப்பது அழகில்லை என்பதற்காக அகிலா முன்னுக்கு வந்து ஜெயராணியின் அருகில் அமர்ந்தாள்.

''ஏன் நீர் சாப்பிடேல்லையா?'' ஜெயராணி பேச்சுக் கொடுத்தாள்.

சந்திரசேகரன் இருவரையும் விட்டுவிட்டுத் தனது வீட்டுப் பக்கமாகப் போனான்.

''ஓ...... சாப்பிடுவம்...... என்ன அவசரம்?''

''ஏன் பசிக்கேல்லையா?''

''சீ... சீ... என்ன பசி இப்ப?''

''பசி கிடப்பீர்போல இருக்கு...... என்னுலை ஏலாது. சரியாகப் பன்னிரண்டு ஒண்டுக்கிடையில் சாப்பிடாட்டி வீட்டிலை பெரிய சண்டைதான்.''

அகிலா சிரித்தவாறே, ''எங்களுக்குப் பழகிப்போச்சு'' என்ருள்.

புது மணப் பெண்ணின் பொலிவோடு, ஜெயராணி கால்களை மடித்து, ஒரு கையைத் தரையில் ஊன்றி இருப்பது அழகாகத்தானிருந்தது. அவளினருகே அகிலா அந்தக் காட்சியைச் சமன் படுத்துவதுபோல எளிமையாக எல்லாம் நிறைந்தவளாக அமர்ந்திருந்தாள். ஜெயராணியின் கண்கள் சுவரில் மாட்டியிருந்த 'குரூப்' போட்டோவை நோட்டம் விட்டன. அகிலா எழுந்து சென்று அவள் பார்த்துக்கொண்டிருந்த படத்தைக் கழற்றி ஜெயராணியிடம் நீட்டினுள்.

''இதில் இருக்கிற ஆட்களை அடையாளம் தெரிகிறதா?''

''ஓ...... இந்தா...... நீர் இருக்கிறீர்... ம்... உமக்குப் பக்கத்தில் இருக்கும் பையன் ஆரெண்டு தெரியவில்லை.''

''வடிவாப் பாருங்கோ தெரியும்.''

ஜெயராணி சிரித்தாள்.

அகிலாவும் சிரித்தாள்.

அந்த இரண்டு சிரிப்புகளுக்கும்தான் எத்தனை அர்த்தங்கள்......?

படத்தை மீண்டும் அகிலாவிடம் கொடுத்துவிட்டு ஜெயராணி அமைதியானாள். சந்திரசேகரன் மீண்டும் வந்து ஜெயராணியின் அருகில் அமர்ந்துகொண்டு வெற்றிலைத் தட்டத்திலிருந்த பாக்குச் சீவல்களைக் கொறித்தபடி இருந்தான். சோமசுந்தரமும், செல்லம்மாவும், அகிலாவின் சகோதரிகளும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு முன்னுக்கு வந்தார்கள். அகிலா சாப்பிடுவதற்காக உள்ளே போனாள். செல்லம்மாவும், சோமசுந்தரமும் ஏதோ சம்பந்தமில்லாத விஷயங்கள் பற்றிப் பேசினார்கள். நேரம் வீணாகக் கரைந்தது.

அகிலா சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெளியே வந்தாள். சந்திரசேகரனும், ஜெயராணியும் புறப்பட ஆயத்தமாக எழுந்து நிற்பது அவளுக்குத் தெரிந்தது.

ஜோடியாக இருவரும் போன திக்கையே பார்த்து நின்றாள் அகிலா. அவளின் கண்கள் கலங்கவில்லை.

★

ஜெயராணி உடுப்புக்களை மாற்றிக்கொள்ளாமலேயே தனியாக அறையில் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். சந்திரசேகரன் அறைக்குள் நுழையும் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் தனது பழைய பார்வையைத் தொடர்ந்தாள்.

''என்ன ஒரு மாதிரியாக இருக்கிறீர்?'' என்று சந்திரசேகரன் அவளின் கவனத்தைத் தன்பால் ஈர்த்தான்.

ஆழத்தைக் காட்டாத தெளிந்த நீரோடை போன்று சலனமெதுவுமின்றி, ''ஒண்டுமில்லை'' என்றாள் ஜெயராணி.

''எனக்கு மறையாதையும். நானும் பெண்களோட கூடிப் பிறந்தனான்தான்'' என்றான்.

''நீங்கள் வீணாகக் கற்பனை பண்ணுகிறீர்கள்.''

''நான் கற்பனை பண்ணேல்லை. உள்ளதைத்தான் சொல்லுறன். உமக்கு எங்கடை வீட்டுக்கு வந்த நேரத்திலிருந்து மனசு சரியில்லை எண்ட உண்மையையும் இல்லையெண்டு சொல்ல முடியுமா? நான் எவ்வளவோ விட்டுக் கொடுத்து உங்களுடைய ஆட்களுக்கு நான் விலைப்பட்ட மாதிரி எனக்கெண்டு எதுவுமே இல்லாமல் போயும்... நான் எவ்வளவு பொறுமைசாலி எண்டதை இப்பதான் உணருறன். எனக்குத் தெரியும் மாமா வீட்டிலை சாப்பிட்டது உமக்குப் பிடிக்கேல்லை எண்டு.''

''ஏன் இப்படி அநியாயம் சொல்றீங்க. உங்களுக்காக நான் உங்கட சொந்தக்கார ஆக்கள் எண்ட கொட்டில் வீடுகளுக்கெல்லாம் போய்த் தண்ணீர் வாங்கிக் குடிச்சு ஏறி இறங்கவில்லையா?''

''வீடுகளுக்கு வந்ததை நான் இல்லையெண்டு சொல்லேல்லை. ஆனால் நீர் அவர்களுக்கெல்லாம் என்ன மரியாதை கொடுத்தனீர் எண்டுமட்டும் எனக்குத் தெரியும். நீர் படித்தனீர். வயது வந்தனீர். எல்லாவற்றையும் சிறு பிள்ளைத்தனமாக அறியாமல் தவறுகள் விடுகிறீர் எண்டு எப்படி என்னாலை எடுக்க முடியும்?''

''ஏன் உங்கட ஆக்களின்ரை லட்சணத்திலை நான் கொடுத்த மரியாதை போதாதோ?''

ஜெயராணி வரம்புக்கும் அப்பால் காலை வைக்கிறாள் என்பதை அறிந்த சந்திரசேகரன், எதுவுமே பேசாது வெளியே போய்விட்டான்.

ஜெயராணி தனது நிலைமையைச் சற்று நிதானமாகச் சிந்தனை செய்து விக்கி, விக்கி அழவில்லை. அப்படி அவள் அழுதிருந்தால் சந்திரசேகரன் கண்களில் சிவப்பேற

வெளியே போனதற்கு எந்தவிதப் பெறுமதியும் இல்லாமல் போயிருக்கும். கோபதாபங்கள், கருத்து வேறுபாடுகள், பிணக்குகள் இல்லாதததா குடும்ப வாழ்க்கை?

சந்திரசேகரன் கோவில் மடப்பக்கமாகப் போய்க் கொண்டிருந்தான்.

காற்றுச் சுழற்றியடித்துக்கொண்டிருந்தது.

பனைகள் சலசலத்து ஆடின.

அந்த ஒழுங்கையில் மண்ணையும் புழுதியையும் வாரி இறைத்துக்கொண்டிருந்தது அந்தச் சுழற் காற்று. சந்திர சேகரனது நடையின் வேகமும், கைகளை விசுக் விசுக்கென வீசிக்கொண்டு நடக்கும் பாங்கும், சோளகம் சுழற்றியடிக் கும் அந்தப் பின்னணியில் மிகவும் பொருத்தமாக அமைந் திருந்தன.

★

சந்திரசேகரன் சற்று நேரத்தின் பின் திரும்பிவந்து அறையினுள் போனான். ஜெயராணி அவன் முன்னால் கண் கள் குளமாக நின்று எதுவுமே பேசாது அவன் மார்பில் சரிந்து அழுதாள். அவனுடைய கைகளின் அரவணைப் பில் அவளுடைய உடல் குலுங்கிக்கொண்டிருந்தது. அவளுடைய கண்ணீர் சந்திரசேகரனை உலுப்பிவிட்டது.

''ஏன் அழுகிறீர்...? என்ன நினைப்பார்கள் யாராவது கேட்டால்?'' அவள் அழுது வீங்கிய கண்களுடன் தலையை நிமிர்த்தினாள். அவளுடைய புருவங்கள் பேசத் துடித்தன.

''நாங்கள் எங்கடை வீட்டை போவம்.''

''இவ்வளவு நாளும் உங்கட வீட்டிலைதானே நிண் டது. நேற்றுத்தானே இங்கை வந்தது. இரண்டு மூண்டு நாட்களுக்கெண்டாலும் நிக்காட்டி ஊராக்கள் என்ன நினைப்பினம் என்னைப்பற்றி. ஏன் நிக்கப் பிடிக்கேல் லையோ?''

''பிடிச்சுதோ பிடிக்கேல்லையோ நான் வீட்டை போக வேணும்.''

"உங்கடை வீட்டிலே இருக்கிற வசதியள் இஞ்சை இல்லேத்தான். இஞ்சை என்ரை சொந்தக்கார ஆட்களெல்லாம் ஊத்தைக் குடியாக மாத்திக் கட்ட வேட்டி சீலே இல்லாமல்தான் இருக்கினம்'எண்டு எனக்குத் தெரியும். ஆனு, நான் உம்மை முடிச்சதுக்காக அவையளே ஒதுக்கிப் போட்டு உங்கட வீட்டிலேயே வந்து தஞ்சம் புகுவேன் எண்டு நீர் நினேச்சால் அது சரிவராது."

"நான் உங்களுக்காக எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த நரக வேதனேயெல்லாம் சகிச்சுக்கொள்ளுறன் எண்டு உங்களுக்குத் தெரியப் போகுதே. என்னே அப்பா வளர்த்த மாதிரிக்குக் கடவுள் இப்பிடி ஒரு தண்டனே கொடுக்கிருர்!"

"உம்முடைய போக்கு அவ்வளவு நல்லாக இல்லே; அதை மட்டுந்தான் என்னுலே இப்ப சொல்லமுடியும். சரி, போறதுக்கு ஆயத்தத்தைப் பண்ணும். நான் பயணம் போக இன்னும் மூண்டு நாள்தான் கிடக்கு. அதுக்கிடையில் ஏன் வீண் மனஸ்தாபப்படவேணுமெண்டு நினேச்சுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறன். நாலு பேர் பாத்துச் சிரிக்கக் கூடாதெண்டு நான் வளைஞ்சு கொடுத்தால் நீர் பிழையாக நினேக்கிறீர்."

அழுதுகொண்டிருந்தவளே மீண்டும் அழவைக்க விரும்பாதவனுய் அவன் வெளியே போனுன்.

சிவபாக்கியத்துக்குச் சந்திரசேகரன் உடனே வண்ணூர் பண்ணேக்குப் பயணமாகிருன் என்பதை எந்த அளவு கோலாலும் அளவிட முடியாது. அதன் விளக்கத்துக்காக மாஸ்டரின் வருகைக்காகக் காத்திருந்தாள். சந்திரசேகரனும், ஜெயராணியும் விடைபெற்றுக் காரில் ஏறிக்கொள்ள, சுற்றிச் சுழலும் அந்த ஒழுங்கைகளில் நெளியத் தொடங்கியது கார்.

# 15.

அகிலா சோமசுந்தரத்திடம் வந்து தலை குனிந்து எதுவும் பேசாது நின்றாள். அவள் அப்படி நின்றால் ஏதாவது விஷயம் உண்டென்பதைச் சோமசுந்தரம் அறிவார்.

''பிள்ளை! என்ன விஷயம்?''

''ஐயா நான் ஏதாவது வேலை பாக்கப் போறன். என்னோடை கூட்டுறவுப் பயிற்சி வகுப்பில் படித்த ஜெகதீஸ்வரி போன மாதம் வேலையாகப் போட்டுதாம். எனக்கும் எங்கையாகிலும் ஆரையெண்டாலும் பிடிச்சு ஓரிடம் பாக்கிறியளே?''

''பிள்ளை! நீ வெளிக்கிட்டு வேலை பாக்கப்போனா எங்கடையாக்கள் என்னென்ன கதையெல்லாம் கதைப்பங்களெண்டு எனக்கெல்லோ தெரியும். நீ ஒவ்வொரு நாளும் வேலைக்குப்போட்டுத் திரும்பி வாற மட்டும் நாங்கள் மடியிக்கிள்ளை நெருப்பைக் கட்டிக்கொண்டுதான் இருக்க வேணும். அதோடை இந்த நாளிலை உத்தியோகமெண்டால் சும்மாவோ? நான் உயிரோடை இருக்கிற மட்டும் ஏதோ சாப்பாட்டுக்கு வழி பண்ணுவேன். தற்செயலாக நான் கண்ணை மூடிவிட்டால் எல்லாரும் அலையப் போறீங்க எண்டுதான் யோசிக்கிறனான். அதுக்காகவெண்டாலும் உன்னை ஏதாவது வேலைக்குப் போகவிட்டால் என்ன எண்டு கூட நினைக்கிறன்.''

அகிலா, தகப்பன் தன்னுடைய எண்ணத்தை அங்கீகரித்துவிட்டார் என்பதையிட்டு மிகவும் மகிழ்ந்தாள்.

''அப்ப நான் எங்கையாவது வேலைக்கு எழுதிப் போடுறன்'' என்று மகள் ஒரு அறிவிப்பைப் பொதுப்படையாக விடுத்தாள்.

மகளின் தொழில் விஷயமாகச் சோமசுந்தரம் தனக்கு அறிமுகமான பெரிய புள்ளிகளை விசாரித்ததிலிருந்து குறைந்தது இரண்டாயிரமோ மூவாயிரமோ 'அவனைப்

பிடிக்க இவனைப் பிடிக்க' வென்று செலவுகள் போகும் என்பதை அறிந்ததும் மகளின் உத்தியோக எண்ணத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டார்.

அகிலாவோ நம்பிக்கை இழக்கவில்லை. தனது சிநேகிதிகள் மூலமாக அவ்வப்போது விண்ணப்பங்களை அனுப்பி வைத்தாள். இரண்டொரு முறைகள் நேர்முகப் பரீட்சைக்கும் போய்த் திரும்பி வந்தாள். அவளுக்கு, தான் ஒரு தொழில் பார்க்கவேண்டுமென்ற தீர்மானம் அவளின் மனதில் முறையாக வேரூன்றிவிட்டது.

★

மகாலிங்கம் ஏதோ வியாபாரம் சம்பந்தமாக அவரின் நண்பர்கள் சிலருடன் பேசிக்கொண்டிருந்தார். சந்திரசேகரனும், ஜெயராணியும் காரிலிருந்து இறங்கி வருவதைக் கண்டதும் நண்பர்களுக்கு அறிமுகம் செய்துவிட்டு மீண்டும் பேச்சில் ஈடுபட்டார். ஜெயராணி சூட்கேசை அறையில் வைத்துவிட்டு, உடுப்பை மாற்றிக்கொண்டு குசினிப் பக்கம் போய் தாயுடன் பேசத் தொடங்கினாள். சந்திரசேகரன் தனியாக நடு ஹோலில் போடப்பட்டிருந்த கதிரையிலிருந்து அன்றைய தினசரியைப் புரட்டியவாறிருந்தான். ஜெயராணி, தாயிடம் மெதுவாகப் பேசியதால் சந்திரசேகரன் தனது காதுகளைக் கூர்மையாகத் தீட்டியிருந்தாலும் அவள் பேசியது அவனுக்குக் கேட்கவில்லை. அவள் என்னவெல்லாம் பேசுவாள் என்பதை முன்கூட்டியே அவன் அறிந்தவன் போல எதுவித சலனமுமின்றிப் பத்திரிகையைப் புரட்டியவாறிருந்தான். மகாலிங்கத்தின் மனைவி அன்னபூரணம் குசினியிலிருந்து வெளியே வந்தாள். மருமகனைக் கண்டதும் புன்சிரிப்பொன்றை அவசியத்திற்காக உதிர்த்துவிட்டு, அவனோடு பேசவேண்டுமென்ற வேகத்தோடு அவன் முன்னாலிருந்த கதிரையில் அமர்ந்தாள். ஜெயராணியும் தாயின் பின்னால் வந்து நின்று, பின்னலை அவிழ்ப்பதும் பின்னுவதுமாக நின்றாள்.

''எப்ப நீங்கள் பயணம்? நல்ல நாளாப் பாத்து வெளிக்கிடவேணும்'' என்று அன்னபூரணம் பேச்சை மெதுவாக எடுத்தாள்.

''நான் நாளை மறு நாள் போகவேணும். லீவு முடியுது. அதோடை கூட்டிக்கொண்டு போக முந்தி கொழும்பில் வீடு ஒழுங்கு பண்ணவேணும். வீடு எடுக்கிறதெண்டால் எப்பிடியெண்டு கேள்விப்பட்டிருப்பியள் தானே?''

''ஏன் நிண்டதோடை இன்னும் மூண்டு நாளைக்கு லீவு எடுத்தால் எங்கடை அம்மாவின்ரை துவசம் வருகுது. அதையும் முடித்துக்கொண்டு போகலாமே... ஏன் பிள்ளை! நிக்கச் சொல்லன்.''

''நான் ரெண்டு கிழமை லீவுதான் போட்டனான். இனி யும் நிக்கிறது சரியில்லை. வீடும் ஒழுங்கு பண்ண வேணும். நான் கட்டாயம் போகத்தான் வேணும். ஏதேன் முக்கிய மான அலுவலென்றால் போனால் போகுதெண்டு லீவெடுக்கலாம். நீங்கள் மாடு கன்று போட்டாலும் லீவு போட்டுட்டு வரச் சொல்லுவியள் போல கிடக்கு.''

''உங்களிடை வீட்டாக்கள் துவசம் கொடுத்துப் பழக்க மில்லையாக்கும். அதுதான் உங்களுக்கு அது முக்கியமானதாகத் தெரியேல்லை'' என்று ஜெயராணி, சந்திரசேகரனின் குடும்பத்தையும் சேர்த்துக் குத்தி இழுத்ததால் அவன் வைராக்கியம் பெற்றான். அவன் இந்த விஷயத்திலாவது தனது நிறத்தைக் காட்ட விரும்பியவனாகத் தனது பிடிவாத குணத்தை அவர்கள் அறியச் செய்தான். மகாலிங்கத்துக்கும் இந்த விஷயம் எட்டியது. அவரும் தன்னுடைய அந்தஸ்து, மாமன் என்ற உறவு முறை எல்லாவற்றையும் முன்வைத்துக் கேட்டுப் பார்த்தார். சந்திரசேகரனோ முடிவை மாற்றவில்லை. மகாலிங்கத்துக்கும் பெரிய ஏமாற்றமாகிவிட்டது. இதுவரை காலத்தில் அவர் தனது எண்ணங்களைச் செயலாக்க முற்பட்டு இப்படி ஏமாற்றம் அடைந்தது கிடையாது.

சந்திரசேகரனைப் பொறுத்தமட்டில் இரண்டு நாட்களும் மிகவும் கனமாகவே கழிந்தன. வேளா வேளைக்குச் சாப்பாடு - பேச்சுவார்த்தைகள் அதிகமில்லை.

சந்திரசேகரன் மெயில் வண்டியில் பயணமாவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டான். ஜெயராணியும் அறைக்குள் வந்து அவனுடன் சேர்ந்து சூட்கேசில் உடுப்புக்களை அடுக்கினாள். இருவரும் வார்த்தைகளை அதிகம் வளர்க்காமல் இரண்டொரு வார்த்தைகளிலேயே பேசினார்கள். இரவுச் சாப்பாட்டுக்காக இடியப்பமும், மீன் குழம்பு, முட்டைப் பொரியலுடன் பார்சலாக அவனிடம் கொண்டுவந்து நீட்டினாள். சந்திரசேகரன் பார்சலை வாங்கிச் சூட்கேசில் வைத்தான்.

''இடியப்பத்துக்கு மீன் குழம்பும் முட்டைப் பொரியலும் வைச்சிருக்கிறன் பிடிக்கும்தானே?'' என்று கேட்டாள் ஜெயராணி.

''ஓ...பிடிக்காமல்...!'' என்று பாராமுகமாகப் பதிலளித்தான் சந்திரசேகரன்.

''சில நேரம் கறி பிடிக்கேல்லையெண்டு சாப்பிடாமல் விட்டுவிடுவீங்கள்.''

''நான் கறி பிடிக்கேல்லை எண்டு ஒருநாளும் சாப்பிடாமல் விடுகிறேல்லை.''

''பின்னை எது பிடிக்காவிட்டால் சாப்பிடுகிறதில்லை...?''

''......'' மௌனம் சாதித்தான் சந்திரசேகரன்.

''அகிலா சமைச்ச சாப்பாடென்றால்தான் பிடிக்குமோ?'' என்று குத்தலாகக் கேட்டாள் ஜெயராணி.

''அனாவசியமாக அவர்களை இழுத்துப் பேசாதையும். நீர் தயவுசெய்து வெளியாலை போய் உம்முடைய அலுவலைப் பாரும். இனியும் கதைச்சுக்கொண்டு நிண்டீரானால்......''

''நான் உங்கடை ஆட்களை இழுக்கேல்லை.... சும்மா ஒரு கதைக்குச் சொன்னன். அவ்வளவுதான்'' என்று கூறியபடியே வெளியே போனாள் ஜெயராணி. வெளியே போனவள் சில நிமிடங்களில் மீண்டும் அறைக்குள் வந்து—

''ஐயா, ஹைவரிடம் காரைக் கொண்டுபோய் உங்களை விடச் சொன்னவர். காரை வெளியாலை எடுக்கச் சொல்லட்டா? நீங்க றெடிதானே?''

''இதிலை இருந்து றோட்டைக் கடந்தால் பஸ் டான்ட். இருபது சதம் கொடுக்கச் சரி. ஆக ஒரு சின்ன சூட்கேஸ். அதுக்கு ஒரு கார் தேவையில்லையென்று போய்ச் சொல்லும்.''

சந்திரசேகரன் சமீப நாட்களாக ஜெயராணி எந்தக் காரியத்தை எடுத்தாலும் அதற்கெதிராகவே செயல்படுகிறுன் என்பதை அறிந்ததால் அவள், அவன் கூறியதற்கு மறுப்புக் கூறவில்லை. அவனுக்கும் கேட்கக் கூடியதாக ஒரு பெருமூச்சை விட்டவாறு போனுள் ஜெயராணி. சந்திரசேகரன் சூட்கேசுடன் வெளியே வந்து விடை பெறுவதற்காக ஜெயராணியைப் பார்த்தான். அவளின் கண்கள் கலங்கிப்போயிருந்தன.

'கேட்' வரைக்கும் வந்து விடைகொடுத்தனுப்பினுள்.

பயங்கரமான கூரிய ஈட்டிகள் போன்றமைந்த அந்த 'கேட்'டின் கிருதிகளூடாக, கூந்தல் காற்றில் பறக்க, அவன் போன திக்கிலே பார்வையைப் பதித்து நின்ருள் ஜெயராணி-ஒரு சிறைக் கைதி போல.

★

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம், மெயில் வண்டி வருமுன்னே நிரம்பி வழிந்தது. புகையிரதம் வந்ததும் சந்திரசேகரன் விழுந்தடித்துக்கொண்டு ஓடவில்லை. அவன் நின்ற இடத்திற்கருகே வந்து நின்ற கதவினூடாக ஏறி அமர்ந்துகொண்டான். புகையிரத நிலையத்திலிருந்த ஒளி வெள்ளத்தைவிட்டு இருள் மண்டலத்தினுள் மெல்லப் புகுந்தது ரயில். அவன் மனதின் அடித் தளத்தை அடைந்து அமைதிகொண்ட எத்தனையோ எண்ணங்களெல்லாம் மெயில் வண்டியின் குலுக்கலில் மிதந்து மிதந்து அவனை அசைத்துக்கொண்டிருந்தன.

# 16.

சந்திரசேகரன் கொழும்புக்கு வந்து ஒரு கிழமை யாகிவிட்டது. 'சுகமாக வந்து சேர்ந்தேன்' என வார்த்தைச் சுருக்கத்தோடு அவன் எழுதிய கடிதத்திற்கு இதுவரை ஜெயராணியிடமிருந்து ஒருவித பதிலுமில்லை. மாஸ்டர் மட்டும் இரண்டு கடிதங்கள் போட்டுவிட்டார். மகனின் சுகத்தை விசாரித்தும், கலியாண வீட்டுச் செலவால் தனக்கு உண்டாகிய கடன் பளுவைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். மகனிடம் பணம் அனுப்பும்படி கேட்கா விட்டாலும், தகப்பனிடம் இருந்து வந்த கடிதங்களின் அடி நாதமான பொருளைச் சந்திரசேகரனல் எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. மனைவியிடமிருந்து ஒரு கடிதம்தானும் வராததையிட்டு சந்திரசேகரன் மிகவும் மனம் உடைந்து போயிருந்தான். என்ருலும் 'இன்னுமொரு கடிதம் போட்டுப் பார்ப்போம்' என்று எண்ணுதவனுய் அந்தப் பிரச்சினையை அதன் திக்கிலேயே விட்டுவிட்டான். அவன் தனது மன உளைச்சல்களை வேறு யாரிடமும் பகிர்ந்துகொள்ளவுமில்லை. ஆனல் அவனுடன் கடமையாற்றும் நண்பர்கள் அவன் முகத்தில் ஏற்பட்டிருந்த மாறுதல்களைக் கவனிக்காமலில்லை. நாட்கள் ஒவ்வொன்ருகக் கழிய அதன் பாரம் அவனை வெகுவாக அழுத்தியது.

அன்று அவனுக்குச் சம்பள நாள். சந்திரசேகரன் எழுபத்தைந்து ரூபாவுக்கு ஒரு தபாற் கட்டளை எடுத்து மனைவிக்கு ஒரு கடிதமும் எழுதி உறைக்குள் வைத்தான்.

''அன்பு ஜெயாவுக்கு,

உமது கடிதம் வருமென எதிர்பார்த்தேன். இதுவரை வரவில்லை. உமது மௌனத்திற்கு என்ன அர்த்தமென்பதை என்னுல் ஊகிக்க முடிகிறது. இதனல் விளையும் முடிவுக்கு நான் காரணமாகக் கூடாதென்பதற்காகவே மீண்டும் உமக்குக் கடிதம் எழுதுவதற்கு எண்ணினேன். நீர் மனம்

வைத்தால் எங்கள் இருவருடைய எதிர்காலமும் நன்றாக அமையும் வாய்ப்பு இன்னும் இருக்கிறது. நாங்கள் விரும்பியோ விரும்பாமலோ தம்பதிகளாகிவிட்டோம். அதற்காக இனிக் கவலைப்படுதல் விவேகமாகாது. உமது பதிலை எதிர்பார்க்கிறேன். அது நிற்க, இத்துடன் ரூபா 75-க்கு மணி ஓடர் அனுப்புகிறேன். எனது சம்பளத்தில் கலியாண வீட்டால் ஏற்பட்ட கடன்களுக்காகத் தகப்பனாருக்கு ரூபா நூற்றியைம்பது அனுப்புகிறேன். செலவுகளை அவரின் தலையில் கட்டிவிட விருப்பமில்லை. அதனால் பணம் கூடுதலாக அனுப்ப முடியவில்லை. அத்தோடு நீர் வீட்டோடு இருப்பதால் செலவுகள் அதிகமிராது என நம்புகிறேன்.

இப்படிக்கு,
அன்புடன்,
மா. சந்திரசேகரன்.''

அவன் எதிர்பார்த்ததுபோல மூன்றும் நாள் கடிதம் ஒன்று வந்திருந்தது. உறையைப் பிரித்ததும் அதனுள் காசுக் கட்டளை இருப்பது தெரிந்தது. அத்துடன் இருந்த கடிதத்தில்:

''அன்புள்ள அத்தானுக்கு,

இத்துடன் நீங்களனுப்பிய 75-ரூபா மணி ஓடரைத் திருப்பி அனுப்புகிறேன். இதை எனக்கு அனுப்பியிருக்கத் தேவையில்லை. எனது தகப்பனார் சீதனத்தைவிட உங்களுடைய சகோதரிகளுக்கென இனமாகத் தந்த இருபதினாயிரம் ரூபாவுக்கும் மாதமொன்றுக்கு வட்டி எவ்வளவு? எனது தகப்பனார் ஒரு மாதத்தில் கட்டும் வருமான வரி, உங்களின் சம்பளத்திலும் பார்க்க எவ்வளவோ கூடப்போல இருக்கிறது. ஆகவே இந்தக் காசையும் உங்களுடைய பெற்றோருக்கே அனுப்பலாம். இதை ஒரு காசாக நினைத்து எனக்கு அனுப்பி அவமதித்திருக்கத் தேவையில்லை.

இங்ஙனம்,
அன்புள்ள,
ஜெயா.''

சந்திரசேகரன் கடிதத்தை மடித்து சேட் பக்கட்டில் வைத்துவிட்டு எழுந்து நின்ருன். அவனின் தலைக்கு மேல் காற்ருடிகள் சுழல்கின்றன. அவனுடைய கைகளில் வங்கியில் கையிருப்பு இல்லாதவரால் எழுதப்பட்ட காசோலையொன்றில் அவன் கைப்பட சிவப்பு மையினுல் எழுதிய ஆங்கில வாக்கியம் அவனை உறுத்துகிறது—

—'உரியவருக்கே திருப்பப்படுகிறது'—

## 17.

அகிலா, சோமசுந்தரத்திடம் பிரயாணச் செலவுக்கென இரண்டு ரூபா வாங்கிக்கொண்டு நேர்முகப் பரீட்சை ஒன்றுக்காக அதிகாலையிலேயே புறப்பட்டுவிட்டாள். அவளோடு துணையாக அவளின் சினேகிதி ஒருத்தியும் போயிருந்தாள். சோமசுந்தரம் கூடப் போகவில்லை. அன்று அகிலா வீட்டுக்குத் திரும்பிவர மாலையாகிவிட்டது.

''ஏன் பிள்ளை இவ்வளவு நேரம்?'' என்று கேட்டார் சோமசுந்தரம்.

''சோதனை எப்பவோ முடிஞ்சுது. பஸ் கிடைக்காமல் சுணங்கிப்போச்சு'' என்று மகள் பதிலளிக்கவும், ''ஏதோ நான்சொல்லச் சொல்லக் கேளாமல் நீயும் வீணுக அலைஞ்சு திரியிருய். எனக்கெண்டால் நம்பிக்கையே இல்லை'' என்ருர் சோமசுந்தரம் விரக்தியுடன்.

அகிலா தகப்பன் பேசிய வார்த்தைகளைக் காதில் வாங்கியபடியே வீட்டினுள் நுழைந்தாள்.

*

நேர்முகப் பரீட்சைக்கு அகிலா போய்வந்து ஒரு கிழமை கூடப் போயிராது, வீட்டின் வாசலில் சைக்கிள் மணி அடித்தது. ''பிள்ளை இஞ்சை வா! உனக்குத்தானும் ஏதோ காயித

மாம். கையெழுத்துப் போடவேணுமாம். கெதிய வா பிள்ளை'' என்றாள் செல்லம்மா.

அந்தப் பதிவுத் தபாலைப் பிரித்துப் பார்த்தபோது அகிலாவின் உதடுகள் மட்டற்ற மகிழ்ச்சியில் துடிதுடித்தன. உள்ளம் நம்ப மறுத்தது. மீண்டும், மீண்டும் படித்தாள். எத்தனையோ முறைகள் படித்திருப்பாள். காற்றோடு காற்றாகத் தகப்பனிடம் கொண்டோடினாள்.

இளைக்க இளைக்க ஓடிவந்ததால் வார்த்தைகள் அவளிடமிருந்து வெளிவரவில்லை.

''என்ன பிள்ளை?'' என்று பதட்டத்துடன் கேட்டார் சோமசுந்தரம்.

''ஐயா எனக்கு வேலை கிடைச்சிருக்கு. வாற கிழமை முதலாம் திகதி அன்று வரட்டாம். காசாளர் வேலையில்லாத படியால் நல்லதாய்ப் போச்சு. இல்லாட்டி இரண்டாயிரம் ரூபா மட்டில் உடன் காசு கட்டவேண்டி வந்திருக்கும். இதுக்கு ஆக மூந்நூறு ரூபாதான் முற்காசு கட்ட வேண்டுமாம். ஆரிட்டையாகிலும் மாறித் தாருங்கோ. நான் வேலைக்குப் போறதுக்கு உடுத்த இஞ்சை கிடக்கிற ரெண்டொரு சீலைகளுடன் சரிக்கட்டுவம். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வாங்கலாம்'' என்றாள்.

சோமசுந்தரத்திற்கு முந்நூறு ரூபா என்ற வார்த்தை அவரின் கழுத்தை முடிச்சுப்போட்டு இரு மருங்கிலும் இறுக்கித் திணற வைத்தது. காதிடுக்கில் வைத்திருந்த சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டு வெளியே கிளம்பினார். அது மத்தியான நேரம். அவரின் வழமையான இடைவேளை நேரம். கொட்டில் பக்கம் போய் வந்தால்தான் புதிய சிந்தனைகள் கருப்பெறும்.

*

சோமசுந்தரம் தன்னிடம் வேலை செய்வித்த பெரிய மனுஷர்களிடமெல்லாம் சென்று மகளுக்காக வாய்விட்டுக் கேட்டார். யாரும் இவரை நம்பி முந்நூறு ரூபாவைக்

கொடுக்க மாட்டார்கள் என்பதையும், தனக்கிருக்கும் பெறுமதி இவ்வளவுதானென்பதையும் அவரால் அறிந்து கொள்ள முடிந்தது.

ஒரு நாள் இரவு அவரின் மனதில் எழுந்த சிந்தனையின் பயனாக விடிந்தும் விடியாததுமாக யாழ்ப்பாணம் புறப்பட்டார். மகாலிங்கம் கடையில் இல்லை. அங்கு கடமையாற்றும் இருவர்தான் நிற்கிறார்கள்.

''எங்கே முதலாளி? என்னும் வரேல்லையா...?'' என்றார் சோமசுந்தரம்.

''இப்ப வந்திடுவார். என்ன விஷயம்?''

''ஒண்டுமில்லை... அவரோடைதான் கதைக்க வேணும்.''

முதலாளி மகாலிங்கம் காரில் வந்திறங்கினார்.

''ஏது விடியக்காலமையோடை வந்து நிக்கிறியள்'' என்றார் மகாலிங்கம்.

''இல்லைப்பாருங்கோ... சும்மா உங்களிட்டைதான் ஒரு அலுவலாக வந்தனான்.''

''.........'' மகாலிங்கம் மௌனமாகக் கேள்விக் குறியோடு நின்றார்.

''என்ரை மகளுக்கு உத்தியோகம் ஒண்டு கிடைச்சிருக்கு. அதுக்கு இருந்தாப்போலை முந்நூறு ரூபாவைக் கொண்டுவா எண்டு நிக்கிறாள். எல்லா இடமும் பாத்திட்டன். சரிவரேல்லை. கடைசியிலை உங்கட ஞாபகம் வந்தது. ரெண்டொரு மாதத்திலை திருப்பித் தந்திடுறன்...'' சோமசுந்தரம் முடிக்கவில்லை, ''உங்கட மருமகன் செய்யிற வேலையாலை நான் உங்கடை பகுதியிலை ஏன் மேளுக்குச் சம்பந்தம் செய்தன் எண்டு கவலைப்படுறன். என்ரை மகளை வீட்டிலை விட்டுட்டு அவர் சுகசீவியம் கொழும்பிலை நடத்துறார். அது ஒரு பக்கமெண்டிருக்க, கலியாணம் முடிச்சு மூண்டு மாசம் கூட ஆகேல்லை. மருமோன்ரை பேரைச் சொல்லிக்கொண்டு கடன் கேட்டு வாறியள். இப்படியான படுமோசமான பள்ளத்திலை எங்களைக் கொண்டுபோய் செல்வரத்தினம் விழுத்து வாரெண்டு நான் நினைச்சிருக்கேல்லை.''

மகாலிங்கத்திடம் போயும் போயும் ஏன் வந்தோமென்றாகிவிட்டது சோமசுந்தரத்திற்கு.

கடைப் படிகளை மெல்ல மிதித்து இறங்கிக்கொண்டிருந்தார்.

''சா - என்ன பேய்த்தனம். இவனையும் ஒரு மனுசனெண்டு...'' அவரின் வாய் முணுமுணுத்துக்கொள்கிறது.

★

சோமசுந்தரம் கோவில் மடத்தில் சரிந்தவாறு சுருட்டைப் புகைத்துக்கொண்டு ஆழ்ந்து உருப்பெற முடியாத சிந்தனைகளில் மூழ்கியிருந்தார்- இரத்தினம் கோவில் முன்பாக உள்ள ஒழுங்கையால் காரைக் கொண்டு போகும் பொழுது, சோமசுந்தரத்தைக் கண்டதும் சற்றுப்பலமாக 'ஹோனை' அடித்துவிட்டுக் காரை நிறுத்தினன். சோமசுந்தரம் எழுந்து காரடிக்குச் சென்ருர்.

''என்னண்ணை கடுமையாக யோசிக்கிறியள்?''

''எனக்கெடா இரத்தினம் அவசரமாகப் பொடிச்சியின்ரை உத்தியோகத்துக்கு முற்காசு கட்டுறதுக்கு முந்நூறு ரூபா வேணும். நானும் எல்லா இடங்களையும் தட்டிப்பாத்துட்டன். ஒரு இடமும் பிரளமாட்டன் என்கிறது.''

சோமசுந்தரத்தின் பேச்சுக் கூட முற்றுப் பெறவில்லை. காரின் கதவைத்திறந்தான் இரத்தினம். காரின் முன்சீற்றுக் கடியில் தனது வீட்டாருக்குத் தெரியாது வைத்திருந்த ஒரு சிறிய தகரப்பெட்டியை எடுத்து அதில் சேமித்து வைத்திருந்த காசில் முந்நூறு ரூபாய் எண்ணிக் கொடுத்தான்.

''இந்தக் காருக்கு கிளச் பிளேட், பில்டருகள் மாற்ற வேணும். டிவறன்சல். ஒரு சத்தம் போடுது. நியாயமாகப் பாட்சுகள் புதிசாகப் போடவேணும்- இவற்றை வாங்கக் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைச்சனுன். வீட்டிலை கண்டா விடாதுகள், அது தான் இப்பிடி ஒளிச்சு வைக்கிறனுன். கார் ஓடாட்டி என்ன நடக்குமெண்டு அதுகளுக்குத்

தெரியுமே? இப்ப உங்கட அலுவல் முக்கியமானதாலே முதல் முடியட்டும். பிறகு இதைப்பாப்பம்''

அவனிடம் காசு இருந்தால் இப்படித்தான் உடனே தூக்கியெறிந்து விடுவான் என்பது சோமசுந்தரத்துக்கும் தெரியும். உள்ளத்தால் அவனைத் தெய்வமாக நினைத்தாலும், அவரின் முகமோ நன்றிப் பெருக்கைக் காட்டாது இருந்தது. அன்பைக் காட்டும் அவரின் பாங்கு அப்படித்தான்.

''சரி வாறன் அண்ணை'' என்று கூறி விடை பெற்றான் இரத்தினம்.

சோமசுந்தரம், இரத்தினத்தை நோக்கியபடியே மலைத்து நின்றார்.

## 18.

மரியதாஸ் சந்திரசேகரன் கடமையாற்றும் வங்கியில் உதவி முகாமையாளராகக் கடமை பார்ப்பவர். வயதில் முதிர்ந்தவர். சந்திரசேகரனின் கடமையுணர்ச்சியும் வேலைத்திறனும் அவரை வெகுவாகக் கவர்ந்து விட்டதால் அவனிடம் அவருக்கொரு தனி அபிமானம் இருந்தது. அவன் சமீபத்தில் திருமணமாகியும் எல்லோரையும் போலக் குதூகலமாக இல்லாது ஏதோ பறிகொடுத்தவனைப் போல சதா சிந்தனையிலீடுபட்டிருப்பதை அவதானித்த மரியதாஸ், அவனையே எப்படியும் கேட்டுவிட வேண்டுமென ஒரு ஆவல் மேலீட்டினால் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் வேலை முடிந்து சந்திரசேகரன் புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

மரியதாஸின் கார் அவனுக்கருகே வந்து நின்றது.

''சந்திரன்... கெட் இன்... நானும் உமது பாதையால் தான் இன்று போகிறேன். பேசிக்கொண்டே போகலாம்'' மரியதாஸ் காரின் கதவைத் திறந்தபடியே வைத்திருந்த

தால் சந்திரசேகரனுல் அழைப்பை நிராகரிக்க முடியாதிருந்தது. காரில் ஏறி அமர்ந்து கொண்டான்.

''சந்திரன்! டோன்ட் மிஸ் அண்டஸ்ரான்ட் மீ... எனக்கு ஏதோ உம்மிடம் கேட்க வேண்டும் என்று பட்டது. நீர் இப்பிடி எந்த நேரமும் 'வொறீட்' ஆக இருப்பது, அதுவும் கல்யாணம் முடிஞ்சு கொஞ்ச நாட்களிலே எண்டால் என்னுல் விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்கு. நான் உம்மிலும் பார்க்க வாழ்க்கையனுபவம் உள்ளவன் என்பதால் என்னுலும் சிலசமயம் ஏதாவது உதவி செய்யலாம் எண்டு நினைச்சுத்தான்கேட்கிறன். உம்முடைய பிரைவேட் லைபை நான் அறியவேணுமெண்ட எல்லாரையும் போல 'இன்கியூசிட்டிவ்னெஸ்' எனக்கில்லை. என்னைப்பற்றி நீரும் ஒரு அபிப்பிராயம் இதுவரையில் வைத்திருப்பீர். அதன்படி நான் உம்முடைய பிரச்சினையில் பகிர்ந்து கொள்ள லாயக்கிருந்தால் சொல்லும். விரும்பா விட்டால்... இட்ஸ் ஆல் ரைட்''

கார், லைட் சிக்னலில் நிற்கிறது. மஞ்சள் வெளிச்சத்தைத் தொடர்ந்து பச்சை வெளிச்சம் காட்டுகிறது சிக்னல். மரியதாஸ் காரை 'அக்ஸிலரேட்' பண்ணினுர்.

சந்திரசேகரன் தனது பர்ஸில் பவுத்திரப் படுத்தி வைத்திருந்த கடிதத்தை மரியதாஸிடம் நீட்டினுன். அவர் ஸ்டியரிங்கில் ஒரு கையும் கடிதத்தில் ஒரு கையுமாக சொற்ப தூரம் ஓட்டிக்கொண்டிருந்தார்.

''லெட்டரைப் பார்த்தியளா? கல்யாணம் முடிஞ்சு ஒரு மாதத்தாலே மனைவியிடமிருந்து வந்த கடிதம் எப்படி இருக்கிறது?''

''சந்திரன்! நான் உமக்கொன்று சொல்லுறன். நீர் கட்டாயம் கேட்கவேணும். நீர் போய் உடனே மனைவியைக் கூட்டி வாரும். 'என்னுடன் வரப்போகிருயா இல்லையா' என்று கேளும். கட்டாயம் வருவா என்று தான் நினைக்கிறேன். நீர் ஒருவீடு எடுக்கும் வரையிலே என்னுடன் வீட்டில் இரும். புறம்பாகக் குடித்தனம் தொடங்காமல் உம்முடைய கேஸ் சரிவராது''

''நான் பாருங்கோ இப்படியான கருத்துப்பேதங்கள் வரும் எண்டு பெரிய இடத்திலே கலியாணம் செய்யும்போது எதிர்பார்த்து, எல்லாத்துக்கும் தயார் எண்ட ஒரு நிலையிலே தான் சம்மதிச்சனான். அதுக்காக நான் எவ்வளவோ முன்னெச்சரிக்கையாக நடந்தும் அதுக்கு எதுவித பலனும் இல்லாமல் போச்சு.''

அவர்களுடைய கருத்துப் பரிமாறல்களில் சந்திரசேகரனின் வாழ்க்கைப் பின்னணியையும் அவனின் மனைவியின் வாழ்க்கை நிலையையும் அறிந்து கொண்டார் மரியதாஸ்.

''சந்திரன்! நீரும் உம்முடைய மனைவியை உம்முடைய லெவலுக்கு நினைச்சுக் கொஞ்சம் அவசரப்பட்டு விட்டீர். நீர் அவர்களுடைய பாதையில் உம்மைச் சரிக்கட்ட முடியாமல் இருக்கிற உம்முடைய மனோபாவம் உமக்குத் தடையாய் இருக்கு. கொஞ்சம் விட்டுக் கொடுத்து 'அட்ஜஸ்ட்' பண்ணியிருக்கலாம்.

''என்னுடையதாய், தகப்பன் சொந்தக்காரர்களையெல்லாம் நான் நாய்கள் மாதிரியல்லோ நடத்தவேணும்?''

''அப்பிடியில்லை... அவர்களும் இவ்வளவு தொகையாகச் சீதனத்தை அள்ளிக்கொடுத்தது தங்களுடையமகள் வசதியாக இருக்கவேணுமெண்டுதானே. நீரும் கையை நீட்டி உமது சகோதரிகளுக்கெண்டு இனுமாகவும்காசு வேண்டியிருப்பதால் உம்முடைய சகோதரிகளுக்குச் செய்த உதவிக்குப் பலன் கிடைக்கவேணுமெண்டா கல்யாணம்முறிந்து போகாமல் பாக்கவேணும். அட் எனி கோஸ்ட்''

''அதுக்கு?''

''யூ மஸ்ட் லை லோ!'' என்று கூறிக் காரை நிறுத்தினார் மரியதாஸ்.

சந்திரசேகரன் விடை பெற்றான். மரியதாஸ் புறப்படு முன் சந்திரசேகரனைப் பார்த்து.

''நான் சொன்ன விஷயங்களை ஒத்துக்கொள்ளுகிறீரா?'' என்றார்.

சந்திரசேகரன் புன்சிரிப்போடு அவருக்கு விடையளித்தான். தனது அறைக்குப் போகுமுன் அங்கு தகப்பன் வந்து வாசலில் காத்து நிற்பது தெரிகிறது.

''எப்ப வந்தனீங்கள்?''

''இப்ப கொஞ்சம் முந்தித்தான் ரயில் வந்தது. சரியான லேட்''

''என்ன அவசரமாக அறிவிக்காமல் இருந்தாப் போல வாறியள்.''

''தம்பி... எனக்கு ஊராக்களின்ரை கதைகளைக் காது கொடுத்துக் கேட்கேலாமல் கிடக்கு. நீ ஏன் தம்பி இப்படி நடக்கிறாய்? எங்கடை வீட்டிலை நடந்தமுதல் சம்பந்தம் இது. இதே இப்படி சின்னபின்னப் படவிட்டால் மற்றப்பிள்ளையளை எவனொருவன் வந்து கட்டுவான்? இதை யோசிக்காமல் நீ பிடிவாதம் பிடிச்சுக்கொண்டு அந்தப்பக்கம் பொடிச்சியிட்டை வாறேல்லை போறேல்லை எண்டு பலமாதிரிக் கதைக்கினம். கொழும்பில் ஒருத்தியைவைச்சிருக்கிறாய் என்கிறாங்கள். மச்சாள் பொடிச்சியோடை நெடுநாளாகத் தொடர்பு எண்டுஅநியாயமாக அந்தக் குமர்ப்பிள்ளையின்ரை வாழ்க்கையிலையும் பழி தேடுகிறாங்கள். இல்லாட்டி என்ன காரணத்துக்காக நீ இப்படிக் கவனியாமல் இருக்கிறாய் எண்டு கேட்கிறாங்கள். அதுதான் தம்பி உன்னைக் கண்டு நேரிலைபேசிக் கொண்டு போவம் எண்டு வந்தனான்''

''ஊராக்கள் நல்லாச் சொல்லட்டும். நீங்கள் என்னை நம்பிறியள்தானே''

''நான் நம்பினால் போதுமே! இதுக்கொரு வழி தேடாமல் நீ உன்ரை பாட்டிலை இஞ்சை இருந்தால் முடிவு வருமே?''

''ஐயா! உங்கட மகன் ஒரு நாளும் பிசகமாட்டான். அதைமட்டும் நீங்கள் நம்பினால் போதும்- இதுகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணங்கள் வேறு; நான் சொன்னால் நீங்கள் கேட்கமாட்டியள். நான் என்ரை சுயமரியாதை எல்லாத்தையும் விட்டுப்போட்டு அவங்களுக்கு அடிமைச்சீட்டெழுதிக் கொடுத்தனெண்டால் ஒரு பிரச்சினையும் வந்தி

ராது. எங்கடை ஊருக்கும் வராமல் அவைதான் தஞ்சம் எண்டு நான் நிக்க வேணும். அதுக்கு நீங்களெல்லாரும் தயாரெண்டாலும் என்னாலை முடியாது. நான் கல்யாணத் துக்குக் கையெழுத்துப் போடும் போதே எனக்கு இப்படி யான காரியங்கள் வருமெண்டு தெரியும். அப்படியே நடந்து போச்சு. நீங்களெல்லாரும் சீதனம், பெரிய இடம், நல்ல மனுஷர் எண்டு ஒற்றைக்காலில் நின்றீர்கள். இப்போ கடை சியிலை எல்லா இழவுகளுக்கும் நான்தான் காரணமென்று என்ரை தலையிலை கட்டுறியள்,''

''நடந்தது நடந்து போச்சு இனி நடக்கப் போறதை உருப்படியாக நினைக்க வேணும் தம்பி.''

''சரி நீங்கள் போங்கோ- நான் நாளைக்கு ஊருக்குப் புறப்படப்போறன். வந்து அவளை என்னோடு வரச்சொல்லி கேக்கப்போறன். இல்லையெண்டால் அவர்களுடைய போக் குக்கு நானும் தயாராவதைத் தவிர வேறை வழி இல்லை.''

மகன் ஊருக்கு வருகிறான் என்ற செய்தியோடு மாஸ்டர் ஊர் வந்து சேர்ந்தார்.

## 19.

யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கடை அந்த, இரட்டை மாடிக்கட்டிடத் தில் அமைந்திருந்தது. மேல் மாடியில் புடவைகள் விற்பனை நிலையமும் கீழே பல சரக்கு விற்பனையும் கொண்டதாகும். புடவைகள் விற்பனைக்கும் பலசரக்கு விற்பனைக்கும் பொது வாக ஒரு காசாளரே பொறுப்பாகக் கண்ணாடிக் கூட்டினுள் இருந்தார். அவரின் அருகே மேல் மாடிக்கும் கீழும் போய் வந்துகொண்டிருக்கும் ஒரு பிரம்புக் கூடையை கயிற் றினால் பிணைத்து கம்பியொன்றில் பொருத்தப்பட்டிருந்தது. காசாளர் கூடையின் கயிற்றை இழுத்தால் கூடை மேலே

போகும். புடவைகள், 'பில்' என்பனவற்றைப் புடவைப் பகுதிப் பொறுப்பாளர் கூடையில் வைத்துக் கீழே இறக்கினல், அந்தப் பொருட்களுக்குரியவர் சிட்டையின் பிரதியையும் பணத்தையும் காசாளரிடம் கொடுத்துப் பொருள்களைப் பெறுவார்.

அகிலாவுக்கு அந்த யூனியனில் புடவைப் பகுதி பொறுப்பாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அன்று முதன்முதலாக யூனியன் திறக்கு முன்பே அவள் வந்து விட்டாள். பொது முகாமையாளர் வந்து அவளுக்குரிய பகுதியைப் பொறுப்பேற்குமாறு கூறிவிட்டுப் போனுர். அவளுக்குத் துணையாகக்கடமையாற்றுவதற்காக செல்லப்பா நியமிக்கப்பட்டார். அவர் வயதானவர். புதிதாக வேலைக்கமரும் ஒரு இளம் பெண்ணை வேறு யாராவது இளவட்டங்களை நியமித்து அவளைச் சோதனைக் குள்ளாக்க விரும்பவில்லை முகாமையாளர். அன்றைய காலைப்பொழுது அவள் வேலை பொறுப்பேற்கும் படலத்தோடு முடிந்தது. மதிய போசனத்துக்காக வீட்டை நோக்கிப் புறப்பட்டாள். அங்கு மருந்துக்குக் கூட ஒருபெண் வேலை செய்யவில்லை என்பதால் அகிலா மிகவும் வேதனைக் குள்ளானுள். தகப்பனுக்குத் தகப்பனுகச் செல்லப்பா அவளுக்குத் துணையாக அமர்த்தப்பட்டிருப்பது அவளுக்குப் பிடித்தமான அம்சம்.

அவள் தனது மதியபோசனத்தை முடித்துக்கொண்டு மேல் மாடியில் வந்தமர்ந்தாள். அந்தப் புதிய சூழ்நிலையில் எவ்வாறு தன்னைச் சமாளிக்கப் போகிறேம் என்ற அச்சம் அவளின் மனதில் குடிகொண்டிருந்தது.

மதியம் திரும்பி விட்டாலும் வெயிலின் காங்கை தீரவில்லை. மேல்மாடியிலுள்ள யன்னல்களினூடாக அனற்காற்று வீசியது.

★

காசாளர் சவுந்தரநாயகம் வயது முப்பதைத் தாண்டாதவர் திருமணம் என்ற பந்தத்தில் இதுவரை விழாதவர் என்பதை அவர் அணியும் உடைகள் எடுத்துக் காட்டும்.

அகிலாவும் செல்லப்பாவும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர். சவுந்தரநாயகம் மாடிப்படியேறி மேலே வந்து அகிலாவின் முன்பாக நின்றான். அவள் உடனே எழுந்து தலையைக் கீழே போட்டவாறு நின்றாள்.

''உங்களை எங்கேயோ பாத்திருக்கிறன்!''

அவளால் எந்தவித பதிலும் கூறமுடியவில்லை. மௌனமாகவே நின்றாள்.

''ஓ! ஞாபகம் வருகிறது. உங்களுடைய வீடு ஓவசியர் சுப்பிரமணியத்துடைய வீட்டுக்குக் கிட்டவா?''

அவள் 'ஆம்' என்ற பாவனையில் தலையை மட்டும் ஆட்டினாள்.

''அவர் எங்கடை சித்தப்பா. அவருடைய வீட்டுக்கு வந்து நான் சிலநாட்கள் தங்கியிருக்கிறன். அப்பதான்ஒழுங்கையிலை உங்களைக் கண்டிருக்க வேண்டுமெண்டு நினைக்கிறேன்.''

அவனின் கேள்விகளுக்கு வெறுமனே அவள் தலையை மட்டும் ஆட்டினாளேயொழிய வாய் திறந்து பதிலளிக்கும் துணிவு அவளுக்கில்லை. கீழேயிருந்து யாரோ காசாளரைக் கூப்பிடுவது கேட்கவே சவுந்தரநாயகம் கட கடவெனக் கீழே ஓடினான். சாமான்கள் கட்டிக்கொண்டிருந்த 'சேல்ஸ்மன்'மார் சவுந்தரநாயகத்தைப் பார்த்துச் சிரித்தார்கள்.

''என்ன வந்ததும் வராததுமாகப் பொடிச்சியை ஆக்கினைப் படுத்தினா அது மாற்றல் கேட்டு வேறையெங்கையாகிலும் போயிடும்'' என்றான்.

''கிளிக்குக்கிட்டப் போயி வெடியைக் கொளுத்தினா பறந்துபோயிடும்'' என்றான் இன்னொருவன்.

''போங்கோடா... தெரிஞ்ச ஆள்போல கிடக்கு.. ஆரெண்டு விசாரிச்சுப் பாத்தன். வாய் திறக்கிறதாயில்லை. கொஞ்சம் நாகரிகம் பிடிபடாத பேர்வழிபோல இருக்கு'' என்றான் சவுந்தரநாயகம்.

# 20.

ஜெயராணி அந்த ஹாலில் பரப்பியிருந்த செற்றி ஒன்றில் உட்காருவாள். அன்றைய தினசரியிருந்தால் புரட்டுவாள். கண்களோ அதில் செல்ல மறுப்பதை அறிந்ததும் அருகிலிருக்கும் சஞ்சிகையொன்றை எடுப்பாள். அதன் அட்டைப் படத்தையும் பின்புறத்தையும் பார்த்துவிட்டு வைப்பாள். அந்த செற்றியிலிருந்து எழுந்து திரும்புவாள். அங்கேதான் கண்ணுடிக் கபினெட் இருக்கிறது. அதனுள்ளே அடுக்கியிருக்கும் அலங்காரப் பொருட்கள் கண்ணுடியினூடாகத் தெரியும். எதைப் பார்ப்பது? எதை விடுவது? எல்லாமே குழப்பந்தான் அவளுக்கு. அதனுள் அவளின் திருமணதினத்தன்று வந்து குவிந்த பரிசுகள்தான் நிறைந்திருக்கின்றன. சந்திரசேகரனின் நண்பர்கள் நகைச் சுவைக்காக பரிசுப் பொருட்களோடு சேர்த்து சிறு குழந்தையின் கையில் கொடுக்கும் கிலுகிலுப்பையையும் வைத்திருந்தது அவளுக்கு ஞாபகம் வரும். அந்தப் பார்சலைத் திறந்தபோது அங்கிருந்தோர் கொல்லென்று சிரித்ததும், அவள் வெட்கத்தினுல் முகத்தைக் கைவிரல்களால் மூடிக் கொண்டதும், அந்தக் கபினெட்டினருகே வரும்போதெல்லாம் அவளை நினைவுகொள்ளச் செய்து வாட்டுகின்றன. அந்தக் கபினெட்டைத் தாண்டினுல் முருகன் படம் பதித்த பஞ்சாங்கக் கலண்டர் சுவரில் தொங்குகிறது. அதில் ஒவ்வொரு தாளாகக் கிழித்தெடுக்கும் போதெல்லாம் தனிமையின் கொடுமையை அது நாட்கணக்கில் அளவிட்டுக் காட்டும். அதையும் தாண்டி சற்று அப்புறமாகத் திரும்பிப் பார்த்தால் அழகாக வைத்திருக்கும் விலையுயர்ந்த கஸெட் ரேடியோ இருக்கிறது. அதை எப்பொழுதாவது சுழற்றி அதில் அவளின் வேதனையை மறக்க முயன்றிருக்கிருள். அதில் ஒலிபரப்பும் பாடல்களோ, அல்லது நாடகங்களோ

அவளின்விருப்பத்துக்கு மாருக வேதனையை அதிகரித்த நாட்களும்உண்டு. சுவரின் ஓரமாகக் கண்ணுடிப் பெட்டியில் மின் வெளிச்சத்தில் பளபளக்கும் வண்ண வண்ண மீன்கள் ஓடித் திரிகின்றன. அதன் அழகை ஜெயராணியால் எத்தனை நாட்களுக்கு ரசித்துக்கொள்ள முடியும். எல்லாமே புளித்துப்போய்விட்டது. சுவரில் மணிக்கூடு வாத்திய இசை போல் கணீரென்று ஒவ்வொரு மணித்தியால முடிவின் போது ஒலிக்கும்போதும் அவளின் நெஞ்சும் அடித்துக் கொள்ளும். அந்தத் தாக்கத்திலிருந்து மீளக் கதிரை ஒன்றை இழுத்துப் போட்டுக்கொண்டு ரேட்டில் போய் வரும் மக்களை, வாகனங்களை கேட்டினூடாகப் பார்த்துக் கொண்டிருப்பாள். அதுவும் சொற்ப நேரத்துக்குத்தான். அமைதியை இழந்து தவிக்கும் அந்த நெஞ்சத்துக்காக அந்த வீட்டில் இரங்கி ஏதாவது வழிசொல்லத் தாயையும் தகப்பனையும் தவிர வேறு யார் இருக்கிருர்கள்? ஜெயராணி குசினியில் போய் தாயுடன் உதவியாக ஏதாவது செய்வதையே அநேகமாக விரும்பிஞள். அந்த நேரங்களில் தான் அவளால் வேதனைகளை மறக்கக்கூடியதாக இருந்தது.

அன்ெருருநாள் மகாலிங்கத்துக்கு மகளின் தனிமையைப் போக்கும் யோசனை வந்தது. சினிமாவொன்றுக்குக் கூட்டிச் சென்ருர். தியேட்டரில் அவர்களுக்குப் பின்புறமாக அமர்ந்திருந்த சில பெண்கள் பேசிக்கொண்டது ஜெயராணிக்கும் எட்டுகிறது.

''உந்தப் பொடிச்சிதான் கலியாணம் முடிச்ச கொஞ்ச நாள்கூட புருசனேடை ஒற்றுமையாய் இருக்கேல்லை, புருசன்காரன் வாறதுமில்லையாம். போறதுமில்லையாம். புருசன் கொஞ்சம் இவையைப்போல வசதியான குடும்பத்திலை பிறக்கேல்லையாம். அதாலை இவையள் ஏறி மிதிச்சு நடக்க, அவனும் படிச்ச பொடியன் விட்டுக் கொடுப்பனே. உன்ரை பாட்டிலை போ எண்டு விட்டுட்டாஞம். காசைப் பணத்தை வைச்சிருந்து என்ன சுகம்?''

ஜெயராணிக்கு அந்தத் திரைப்படத்தில் என்னென்ன நடக்கிறதென்பதைத் தொடர்புபடுத்திப் பார்க்கவே முடிய வில்லை. அவள் வீடு வந்ததும் சாப்பாடே வேண்டாம் என்று கூறிவிட்டுப் படுத்துவிட்டாள்.

மகளின் நிலையை உணர்ந்த மகாலிங்கத்துக்கு சந்திர சேகரன் மீதிருந்த வெறுப்பு பன்மடங்காகியது.

''நான் ஆழமறியாமல் போய் காலை விட்டதால் அவள் பிள்ளையின்ரை வாழ்க்கை இப்படியாகப் போச்சு. அவங் களுக்கு நான் முறையான பாடம் படிப்பிக்காமல் விடப் போறதில்லை. அவள் பிள்ளைக்கு எழுத்தைத் தள்ளிப் போட்டு இன்னொரு கலியாணம் செய்துவைக்காட்டி நான் மகாலிங்கமில்லை. நாளைக்கு புறக்கிருசி வீட்டை போய் ஆகவேண்டிய அலுவலைப் பார்க்கிறதுதான் என்ரை முதல் வேலை.''

''நீங்கள் கொஞ்சம் அவசரப்படுகிறியள் பாருங்கோ. அவள் பிள்ளையும் நாங்கள் சொன்னதைக் கேட்டு நடந்து தான் தனக்கு இந்த நிலை வந்ததெண்டு நேற்று என்னோடை சண்டைக்கு வாறுள். அவளுக்கும் நாங்கள் எல்லாத்தை யும் ஒருமிக்கப் போட்டுக் குழப்பியடிச்சால் அவள் குழந் தைப் பொடிச்சி என்ன செய்வாள்? மெல்ல மெல்ல நாங்கள் செய்யவேண்டியதை அவளுக்குச் சொல்லி விளங்கப்படுத்தி அவளைச் சம்மதிக்க வைக்கவேணும்'' என்று தனது கணவ னிடம் கூறினுள் ஜெயராணியின் தாய் பூரணம்.

''இல்லைப் பூரணம்! இது என்ரை மானப் பிரச்சினை. இதுக்கொரு முடிவு உடனடியாகத் தேடவேணும். அவங் களை நான் சந்தி சிரிக்க வைச்சிட்டு என்ரை சொத்து முழு தும் போனாலும் பரவாயில்லை. ஒரு நல்ல கலியாணம் அவளுக்குச் செய்து வைக்கிறேனே இல்லையோ எண்டு இருந்து பாரன்.''

ஜெயராணி படுக்கையில் படுத்திருந்தவள் திடீரென வெளியே வருகிறாள். அவளின் முகத்தில் அனல் கக்குகிறது.

''அம்மா! ஐயா சொல்லுற மாதிரி இனி ஒரு கலியா ணம் எனக்குத் தேவையில்லை. நான் செத்துத் துலைஞ்சு

போறன். உங்களெல்லோருக்கும் ஒரு பிரச்சினையும் இராது. நீங்கள் சொன்னதுக்கு மாருக நான் என்ன செய்திருக்கிறன். அப்படியிருந்தும் நான் கண்டதென்ன? அவரோட போயிருந்தால்கூட இப்படி அவலப்பட்டிருக்கத் தேவையில்லை'' என்ருள் அடித்தாற்போல.

''பிள்ளை! நாங்கள் உன்ரை நன்மைக்காக, நீ நல்லாக வாழவேணும், சந்தோஷமாக இருக்கவேண்டுமென்று தான் எல்லாத்தையும் செய்தோம். உனக்கு என்ன குறை வைச்சனுங்கள். அவங்கள் கொஞ்சம் பெருந்தன்மையோட எங்கட சொல்லுக்கு மதிச்சு நடந்தாங்களே! உன்னை அவங்களோடை அனுப்பி அங்கு நீ கொடுமைப்பட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக வாழுறதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது பிள்ளை. நீ இப்ப புருஷனேடை போனுலும், பிறகும் நீ திரும்பி எங்களிட்டைத்தான் தேடி வருவாய். அப்ப என்ன செய்யப்போருய்?''

ஜெயராணிக்குக் கணவன்மீது வெறுப்புத் தோன்றக் காரணமாக இருந்த நிகழ்ச்சிகள் சில மீண்டும் தலைதூக்குகின்றன. அவளின் மூகத்தில் உணர்ச்சிகள் குழம்புகின்றன. அவளுக்கு எல்லாமே நியாயமானதாகவும் எதுவுமே நியாயமில்லாததாகவும் சிந்தனைகள் குழம்பிவிட, கதவின் திரைச்சேலையை விலக்கி மீண்டும் படுக்கை அறைக்குள் போகிருள் ஜெயராணி.

★

''பிள்ளை! இங்காலை வா. பொன்னம்மா மாவிடிக்க வந்திட்டுது. தனியே இருந்து யோசிச்சுக்கொண்டிராமல் அடுக்களையில் நனையப் போட்டிருக்கிற பச்சை அரிசியையும் அரிக்கன் சட்டியையும் எடுத்துக்குடு. அரிச்சுப்போட்டு இடிக்கட்டும்'' என்று கூறி, பொன்னம்மா வீட்டின் பின் புறமாகச் சரித்திருந்த உரலை நிறுத்திவிட்டு, கிணற்றடிக்கு போய் அரிசியை அரிக்கத் தொடங்கினுள். ஜெயராணி அவளைப் பின்தொடர்ந்து போனுள்.

''என்ன பொன்னம்மா மடியிலே ஏதோ கட்டி வைச் சிருக்கிருய்? அதையெடுத்து இங்காலே வைச்சால் சுகமாக இடிக்கலாமெல்லே'' என்ருள் ஜெயராணி.

''ஓம் பிள்ளை... இதிலே அரைருத்தல் பாணும் அஞ் சாறு பீடியும் இருக்கு. என்ரை புருஷனுக்குப் பிள்ளை வாங் கிக்கொண்டு போறன். பழஞ்சோறு கிடந்தது, பொடியள் திண்டிட்டுப் பள்ளிக்கூடம் போட்டுதுகள். என்ரை புருஷன் பிள்ளை கூலி வேலேக்குப் போறது.போற இடத்திலே ஏதேன் சாப்பிடும். வேலையில்லாட்டி வீட்டிலே படுத்துக்கிடக்கும். அப்பிடியான நாட்களிலே நான் வாயைக்கட்டி, வயித்தைக் கட்டிச் சேமிச்சு வைச்சிருக்கிறதைச் சில சமயங்களிலே களவெடுத்துக் கொண்டுபோய்க் குடிச்சுப்போடும். நான் பேசினுக் கொடுக்குக் கட்டிக்கொண்டு சண்டைக்கு வரு மெணை பிள்ளை. என்ன செய்யிறது.இரண்டு நாளாக வேலேக் குப் போகாமல் இருக்கெண்டு வாங்கிக்கொண்டு போறன். என்னட்டை வாங்கிக்கொண்டு வரச்சொல்லேல்லே. எப் பிடியெண்டாலும் என்ரை புருஷன் தானெண்டு எல்லாத் தையும் பொறுக்கிறனன்.''

ஜெயராணி வானத்தைப் பார்த்துப் பெருமூச்சு விடு கிருள்.

''பிள்ளை! என்ன யோசிச்சுக் கொண்டிருக்கிருய்?''

''ஒண்டுமில்லேப் பொன்னம்மா... ஒ...ஒ... ஒண்டுமே யில்லே.''

''பிள்ளை! நீ எனக்குப் பொய் சொல்லுருய். உன்னைக் குழந்தைப் பெட்டையா இருந்த நாள்முதல எனக்குத்தெரி யும். நான் ஒண்டு கேட்பன் கோவிப்பியோ பிள்ளை.''

''இல்லேப் பொன்னம்மா!''

ஜெயராணிக்குப் பொன்னம்மா எதைக் கேட்கப் போகிருள் என்பது நன்ருகத் தெரிந்தது. அவளும் தனது உள்ளத்தின் ஏக்கங்களை யாருடனுவது பகிர்ந்துகொள்ள வேண்டுமென்ற நெடுநாளைய ஆவலில் பொன்னம்மாவின் அருகிலேயே குந்திவிட்டாள்.

''பிள்ளை, ஏன் நீ இந்த வாழுற வயசிலை புருசன்கார னோடை சண்டை பிடிச்சுக்கொண்டு தனியாக இருக்கிறாய்? ஊருலகமெல்லாம் கதைக்கினம். குடும்பமெண்டாப் பிள்ளை எல்லாம் பொண்ணாகப் புறந்தவளின்ரை கையிலைதான் இருக்கு. அது சீர்குலைஞ்சுபோனா ஆம்பிளையிலும் பார்க்க பொம்பிளைக்குத்தான் கூடாது. பொண்ணாகப் பிறந்தவள் எல்லாத்தையும் சகிச்சு நடந்தால்தான் உலகத்திலை சீவிக் கலாம். இல்லையோ பிள்ளை?''

''பொன்னம்மா, உனக்கு ஒரு விபரமும் தெரியாது. அவருக்கு என்னைப் பிடிக்கேல்லை. அவருடைய போக்கும் எனக்குப் பிடிக்கேல்லை. எப்பிடி ஒற்றுமையாய் இருக் கிறது?'' என்று ஜெயராணி எதைச் சொல்வது, எதைச் சொல்லாமல் விடுவதென்ற தடுமாற்றத்தில் பொன்னம் மாவுக்கு உண்மை நிலையை விளக்கமுடியாது தவித்தாள்.

''அதுபிள்ளை நீதான் பிழைவிட்டிருக்கிறாய் போல இருக்கு. கலியாணம் முடிச்சா புருசன்காறன்தான் எல்லா மெண்டு நடக்கவேணும். அப்பிடி நடந்து இப்பிடி வந் திருந்தால் அதைக் கடவுளிலை பழியைப் போடலாம். என் னைப் பார் பிள்ளை. என்ரை புருசனோடை நானும் சீவிக் கிறன்தானே. ஒருநாளைக்கு என்ரை வீட்டுக்கு வந்துபார்த் தால்தான் தெரியும்.''

பொன்னம்மாவின் வார்த்தைகள் அவளுக்கு மனதில் ஒருவித வலிமையை ஏற்படுத்தினாலும் அவளின் மனதில் சந்திரசேகரனுக்கு எதிராக வளர்ந்திருந்த வெறுப்பை முற்றாகப் போக்க முடியவில்லை.

''அது போகட்டும் பொன்னம்மா. அரிசியெல்லாம் அரிச்சு முடிஞ்சுதோ. கெதியெண்டு இடிக்கவேணும். கதை யோடை நிற்காமல் வேலையைத் துவங்கு'' என்று ஜெய ராணியின் அதிகாரம் தலைதூக்கியது.

## 21.

மகாலிங்கமும் அன்னபூரணமும் மத்தியானச் சாப்பாட்டின்பின் கதிரைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். ஜெயராணி அறையினுள் ஏதோ தைக்கும் சத்தம் கேட்கிறது. அன்னபூரணம் கணவனேடு ஏதாவது பேச வேண்டுமென்ருல் அந்த நேரம்தான் உகந்ததாகும். மற்றைய நேரங்களில் மகாலிங்கம் வியாபார விஷயமாகஓடித் திரிவார். அன்னபூரணம் வெற்றிலையை மடித்து வாயில் வைத்துக்கொண்டு பேச்சை ஆரம்பித்தாள்.

"நீங்கள் நேற்றுப் புறக்கிராசியிட்டைப் போன காரியம் என்ணுச்சு?"

"எல்லாம் பேசிவிட்டுத்தான் வந்தனுன். இனியென்ன நடக்கப் போகுதெண்டெல்லாம் நான் வடிவாகத் தெரிஞ்சு வைச்சிருக்கிறன். இந்த வீட்டை இவ்வளவு நாளும் பிடிச்சிருந்த சனியன் கெதியாய்த் துலைஞ்சு போகப்போகுது. அவள் பிள்ளைக்கு இப்பிடியொரு விதி வந்திட்டுதெண்டு தான் கவலையாகக் கிடக்கு. என்னமாதிரிச் செல்லமாக வளர்த்தனுன். அவள் கேட்டதெல்லாம் வாங்கிக் கொடுத்தன். ஆனல், நேர்சீரான வாழ்க்கையை அவளுக்குத் தேடிக்குடுக்கேலாமல் போச்சு. அவளுக்கு என்ன குறையிருந்தது, வடிவில்லையா? படிப்பில்லையா? பொருள் பண்டமில்லையா? அதுதான் பூரணம் விதியென்கிறது?"

மகாலிங்கம்கூட இப்படி உணர்ச்சிகளுக்கடிமையாய்ப் பேசுவதை அன்றுதான் பூரணம் கண்டாள்.

அறையினுள் கடகடவெனத் தையல் மெஷின் சத்தம் கேட்கிறது. அவர்களின் கண்களும் மனங்களும் நம்பமுடியாதவாறு வெளிக் கேட்டைத் திறந்துகொண்டு சந்திரசேகரன் வந்தான்.

அவர்களால் நம்பவே முடியவில்லை... தடுமாறினுர்கள்...

சந்திரசேகரனின் கையொன்றில் 'டாக்குமென்ட் பாக்' ஒன்றிருந்தது. அவன் நிதானமாக நடந்துவந்து விருந்தையில் நின்றுகொண்டிருந்தான்.

ஜெயராணி அறைக்குள் இருந்து விழுந்தடித்துக் கொண்டு ஓடிவந்தாள்.

அவளின் உதடுகளின் துடிதுடிப்பும், புருவங்கள் நெளிந்து ஆயிரம் கதைகளைப் பேசத் தடுமாறுவதும் அவளின் உள்ளத்தைக் காட்டுகின்றன.

ஆனல், அவளாலோ சந்திரசேகரனுடன் பேசமுடியாது. வார்த்தைகளுக்காகத் தேடிக்கொண்டிருந்தாள்.

''இருங்கோவன்'' அவள் படபடத்து நடுங்கிக்கொண்டிருந்தாள், ஆகாயத்தைப் பார்த்துச் சிறகடிக்கும் கூண்டுக் கிளிபோல.

''நான் இருக்க வரேல்லை. உம்மைக் கூட்டிக்கொண்டு போக வந்திருக்கிறன். உமக்குப் பிடிக்காவிட்டால் சொல்லும், நான் ஒரு முற்று எடுத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கிறன்.''

ஜெயராணியின் முகத்துக்குமுன்னல் அன்னபூரணத்தின் சுட்டுவிரல் நீட்டியபடியே நிற்கிறது. எதிரே கணவன் கேள்விக்குறியாக நிற்கிருன்.

அவள் என்ன செய்வாள்?

மௌனமாகச் செயலற்று நிற்கிருள்.

அன்னபூரணம் சந்திரசேகரனைப் பார்த்து, ''என்னுடைய பிள்ளையை எப்படி நம்பி அனுப்புறது? கொண்டு போய் எப்பிடி ஆட்டிவைச்சுக் கொடுமைப் படுத்துவியளோ ஆருக்குத் தெரியும்?''

சத்திரசேகரன் ஜெயராணியைப் பார்த்துக் கேட்டான். ''உம்முடைய முடிவு என்ன?''

அவனுடைய சுட்டுவிரல் அவளைக் காட்டியபடியே நிற்கிறது.

அன்னபூரணம் சைகையால் ஜெயராணியை உள்ளே போகும்படி கட்டளையிடவே அவள் எதுவுமே பேசாது உள்ளே போனுள்.

மகாலிங்கம் எழுந்துவந்து சந்திரசேகரனை மேலும் கீழும் பார்த்துவிட்டு எதுவும் பேச விரும்பாதவராய் வேறு பக்கமாகப் போனார். அன்னபூரணம் பேசிக்கொண்டிருந் தாள்.

''இப்ப மூண்டு மாசமாகப் பெண்சாதியின்ரை நினைப்பு வரேல்லை. இருந்தாப்போலை இப்ப ஏன் வந்தது? ஊர் உல கத்திலை கலியாணம் முடிக்கிற ஆம்பிளையள் இப்பிடியே நடக்கினம்! எங்களுக்கு இனி என்ன செய்யவேண்டுமெண்டு தெரியும்...'' அவளின் பேச்சுத் தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தது.

சந்திரசேகரன் 'கேட்டைச்' சாத்திவிட்டு மறைந் தான். அவன் முகத்தில் வைராக்கியம் வியாபித்து நிற் கிறது.

மகாலிங்கம் கண்கள் சிவக்க மேலும் கீழுமாக நடந்து கொண்டிருந்தார். ஜெயராணி கண்ணாடிப் பெட்டியில் துள் ளித் திரியும் வண்ண வண்ண மீன்களைப் பார்த்தவாறு நின்றுகொண்டிருந்தாள். அதில் அவள் எதைத்தான் காண் கிறாளோ புதிதாக? ஓ! அவளின் கண்கள்கூடக் கலங்கியிருக் கின்றன.

*

சந்திரசேகரன் வீட்டுக்கு வந்து சேட்டைக் கழற்றி விட்டு முன் விறாந்தையில் அமர்ந்துகொண்டான். அவன் தனது சப்பாத்துக்களைக் குனிந்தவாறு கழற்றிக்கொண் டிருந்தான்.

''தம்பி! என்ன நடந்தது .. போனகாரியம்?'' என்றாள் சிவபாக்கியம்.

''முடிஞ்சு போச்செணை. இனி நடக்கிறதைப் பார்க்க வேண்டியதுதான்.''

மாஸ்டர் எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டேசாய்வு நாற்காலியில் கிடக்கிறார். வங்கியில் கொண்டுபோய் தனது பெண் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகப் போட்டு வைத் திருந்த இருபதினாயிரம் ரூபா அவரின் உள்ளத்தினுள்

புகுந்து விளையாடிய்தால் அவரால் பல நாட்களாக நிம் மதியாக உறங்க முடியவில்லை, இந்தப் பிரச்சினை சிவபாக் கியத்தின் திறமைக்கு அப்பாற்பட்டமையால், கோவில் மணி கேட்கும் போதெல்லாம், ''அப்பு பிள்ளையாரே...! வயிரவரே...!'' என்று பெருமூச்சு விடுவதைத் தவிர அவ ளுக்கு வேறு வழி இருக்கவில்லை. சந்திரசேகரன் மறுநாளே கொழும்புக்குப் போய்விட்டான்.

மறுநாள் சந்திரசேகரனை வங்கியில் கண்டதும் மரிய தாஸ் அவனிடம் வந்து மெதுவாக விசாரித்தார். சந்திர சேகரன் நடந்ததைச் சுருக்கமாக விளக்கினுன். மரிய தாஸின் முகத்தில் வேதனை நிழலாடி மறைந்தது. ''ஐ ஃபீல் ஸொாரி ஃபோர் தற் கேர்ள்!'' என்று கூறிவிட்டு தனது இருப்பிடத்திற்குப் போனுர். அதன்பிறகு சந்திர சேகரனிடம் இதுபற்றி எதுவுமே மரியதாஸ் விசாரித்த தில்லை.

## 22.

அகிலா கடமையாற்றும்யூனியனின் பொது முகாமை யாளர் அங்கு கடமையாற்றுபவர்களிடம் மிகவும் கடுமை யாக நடந்து கொள்கிருரென்பதை அறிய அவளுக்கு அதிக நாட்கள் பிடிக்கவில்லை. அவர்கள் விடும் சிறு தவறுகளுக் கெல்லாம் எரிந்து விழுவார். அகிலா அவரின் கோபத் துக்கு இலக்காகக் கூடாதென்று மிகவும் கவனமாகவே கடமையாற்றி வந்தாள். ஒருநாள் துணிகளையும் அதற் குரிய 'பில்'லையும் கூடையில் வைத்து கீழே இறக்கினுள். அவள் இறக்கிவிட்ட கூடை சொற்ப நேரத்தில் மீண்டும் மேலே வந்தது. அதில் அனுப்பிய துணிகளும் பில்லும் இருந்தன. அந்த பில்லுக்கு உரியவர் திரும்பவும் மேல் மாடிக்குத் தனது பிரதியுடன் வந்தார். அகிலாவுக்கு எது

வும் விளங்கவில்லை. அந்தக் கூடையில் மீண்டும் போய்ப் பார்த்தாள். அதில் சிறு கடதாசித் துண்டொன்று இருந்தது. அதில், ''ஐந்து யார் துணி வெட்டியிருக்கிறது. 'பில்' மூன்று யாருக்குமட்டும் போட்டிருக்கு. மனேஜருக்குத் தெரியாமல் பில்லைத் திருத்தி அனுப்பவும்— சவுந்தரா'' என்று எழுதியிருந்தது.

அகிலா அதைக் கண்டதும் தனது தவறை உணர்ந்து பில்லைத் திருத்தி அனுப்பினாள்.

இந்த நிகழ்ச்சி சவுந்தரநாயகத்துக்கு அகிலாவிடம் பேச்சுவார்த்தைகளைத் தொடங்குவதற்குத் திறவுகோலாக அமைந்தது. அவன் கீழே வேலையில்லையென்றால் மனேஜர் இல்லாத நேரங்களில் மேல் மாடிக்குப் போய் விடுவான். அவன் தனக்காகச் செய்த உதவிக்காக அவனைத் தட்டிக் கழிக்க முடியாமல் ஏதோ கேட்கும் கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அகிலா ஆளாகி இருந்தாள்.

அகிலா அன்று மேல்மாடியில் தனியாக இருந்தாள். வியாபாரம் எதுவுமில்லை. செல்லப்பாவும் அன்று வேலைக்கு வரவில்லை. கப்பியின் 'கிறீச், கிறீச்' ஒலியுடன் கூடை மேலே வந்தது. அகிலா போய்ப் பார்த்தாள். அழகான சிறிய பேப்பர் 'பாக்' ஒன்றில் சிறிய பார்சலும் ஒரு கடிதமும் இருந்தது. அந்தக் கடிதத்தை எடுத்துப் பிரித்தாள்.—

''இன்று எனது பிறந்தநாள். எனது அன்பளிப்பு- சவுந்திரா'' என்று அதில் எழுதியிருந்தது. அந்தக் கடிதத்தை உடனே அந்தக் கூடையுள் மீண்டும் போட்டாள். கூடையைக் கீழே இறக்க விரும்பியவளாய் கயிற்றை இலேசாக இழக்கினாள். ஏதோ நினைத்தவளாகி இடையில் நிறுத்தினாள். அவளின் மனமும், கூடையும் மேலுமில்லாமலும் கீழுமில்லாமலும் நின்றன. அப்பொழுது மேல்மாடிக்குவந்த 'சேல்ஸ்மன்' ஒருவரிடம் அகிலா, ''இண்டைக்கு காஷியருக்குப் பிறந்தநாளா?'' என்று விசாரித்தாள்.

''ஓ...ஓ... எங்களுக்கெல்லாம் சொக்கிளேற்றுகள், கேக்குகள் எல்லாம் தந்தவர். இண்டைக்கு எங்கடைபாடு

பிழையில்லை. அவருக்கென்ன? தாய், தகப்பன் சேர்த்து வைச்சிருக்கினம். அவன் அனுபவிக்கிறான். அது போக, ஏன் உங்களை மேலுக்குத் தனிய இருந்ததாலை மறந்து போனாராக்கும்...''

''இல்லை... இங்கை கூடையிலை ஏதோ வைச்சு அனுப்பி யிருக்கு. அதுதான் விசாரிச்சனான். அவர் பொதுவாகக் கொண்டாடுறபடியால் நான் அவர் அனுப்பியதை எடுக் கிறதிலை பிழையில்லைத்தானே?''

''உப்பிடித்தான் பிள்ளை எல்லாத்திலும் கவனமாய் இருக்கவேணும். பெண்புரசுகள் வேலைக்கெண்டு வெளிக் கிட்டால் இப்படித்தான். ஒருமாதிரியாகச் சமாளிச்சுக் கொண்டு போகவேணும்.'' அவன் பேசிக்கொண்டே கீழே போய்க்கொண்டிருந்தான்.

அகிலா கயிற்றை மேலுக்கு இழுத்து அந்தப் பார்சலை எடுத்தாள். சவுந்தரநாயகம் சற்றுநேரத்தின்பின் கூடை யைக் கீழே இறக்கி, அவன் அனுப்பிய பார்சலுக்கு என்ன நடந்ததென்பதை அறிந்துகொண்டான். அன்று பின்னேரம் அகிலா மாடிப்படியால் கீழே வந்துகொண்டிருந்தபொழுது அவளின் கண்களுக்கெதிராக வந்துநின்றான் சவுந்தரநாய கம். அவள் அவனைக் கடந்து செல்லுமுன் புன்சிரிப்பையா வது உதிர்த்தவேண்டிய ஒரு தர்மசங்கடமான நிலை ஏற்பட் டது.

அவள் புன்சிரிப்போடு அவனையும் கடந்து போனாள்.

அவள் கீழே இறங்கிப்போவதைக் காணும் ஊழியர் கள் எப்போதும் உற்சாகம் பெறுவார்கள். அவள் காலை யில் வாசற் கதவைத் தாண்டி வரும்போது பொது முகா மையாளர்கூடத் தன்னுடைய மூக்குக் கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொள்வார். அவருக்குத் தூரப் பார்வை மந்தம். எழுத்து வேலைகளுக்குக் கண்ணாடி பாவிப்பதில்லை. அவள் உள்ளே வந்து படிகளில் ஏறியதும் கண்ணாடியைக் கழற்றிக் கீழே வைத்துவிடுவார்.

சவுந்தரநாயகத்துக்கு அகிலாவின் பிறப்பு வளர்ப்பு என்பன பற்றிய சகல தகவல்களையும் அங்கு வேலை செய்பவர்களிடம் விசாரித்தறிய அதிக சிரமம் ஏற்படவில்லை.

அகிலாவும் தான் கடமையாற்றும் இடத்தில் ஏற்படும் அனுபவங்கள் எல்லாவற்றையும் தாயிடம் ஒன்றும் தப்பாமல் கூறுவாள். செல்லம்மா அவற்றைச் சோமசுந்தரத்திடம் கூறுவாள்.

''பிள்ளை! நீ சொன்னியாம். ஆரோ ஓவசியர் மணியத்தாற்றை பெருமோனும். அவன் உன்னோடை வேலை செய்யிறனும். அவங்களோடை புளங்கிறது கவனமாய் இருக்கவேணும். அவங்கடை வமிசம் அப்பிடியானது. அவன் அங்கை பொழுது போறதுக்காக வேலைக்கு வாறனும். அப்பிடியான ஆளுக்கு எல்லாம் பொழுதுபோக்காகத் தானிருக்கும். அவங்களோடை பகைக்காமல் ஒருமாதிரிக் கெட்டித்தனமாகப் பழகவேணும். தேவையில்லாத கொண்டாட்டம் வைக்கப்படாது.'' அகிலாவைப்பற்றிச் சோமசுந்தரம் நன்றாக அறிந்தவரானாலும், நான்கு திக்குகளிலும் ஈட்டிகள் நீட்டப்பட்டால் சுருண்டு விழவேண்டியதுதானே என்ற பயத்தால் மகளை எச்சரித்து வைத்தார்.

★

அன்று பகல் பூராக விடாது மழை பெய்தது. யூனியன் கதவுகளை இழுத்து மூடினார்கள். அகிலா குடையை விரித்துக்கொண்டு புறப்பட ஆயத்தமானாள். அதைக் காணும் சவுந்தரநாயகம், ''என்ன நானும் வரட்டே?'' என்றான் மிகவும் சாதாரணமாக.

''நனையாமல் போகவேணுமெண்டால் இதை நீங்கள் கொண்டு போங்கோ. நான் மழை விட்டதும் போறன்'' என்று குடையை நீட்டினாள் அகிலா.

''வேண்டாம். சும்மா பகிடிக்குக் கேட்டனான்'' என்று மழுப்பினான் சவுந்தரநாயகம்.

அடுத்தநாள் பின்னேரமும் அவள் வேலைகள் முடிந்து வீட்டுக்குப் புறப்படுமுன் கணக்குகளைக் கூட்டிக்கொண்

டிருந்தாள். சவுந்தரநாயகம் மேல்மாடிக்கு வந்து பேச்சை ஆரம்பித்தான்.

''என்ன வேலையெல்லாம் முடிஞ்சுதோ?''

''ஓ! முடியுது!''

''நான் கூட்டித்தரட்டா?''

''சீ...சீ... வேண்டாம். நானே கூட்டுறன்.''

''ஏன் நீங்கள் என்னோடு வெட்டொன்று துண்டுரெண்டாகப் பேசுறனீர்?''

''என்றை சுபாவம் அப்படி.''

''இல்லை! என்னை உமக்குப் பிடிக்கேல்லை.''

''எனக்கு உங்களை எதுக்காகப் பிடிக்கவேணும்?''

''எனக்கு உம்மைப் பிடிச்சிருக்கு...'' அவன் சொல்ல வந்த விஷயத்தை நாசூக்காகச் சொன்னான்.

''நான் எப்பிடியான ஆளெண்டு உங்களுக்குத் தெரியேல்லை.''

''ஏன் தெரியாது? எல்லாம் தெரியும். நான் எவ்வளவு அக்கறையோடு அறிஞ்சு வைச்சிருக்கிறன். ஆனா உங்களுக்கு விளங்காதாம்.''

''எனக்கு எல்லாம் விளங்கும். நீங்கள் எதுக்காக இவ்வளவு தூரம் பேசிறியள் எண்டும் தெரியும். நீங்கள் சரி வராத ஒண்டிலை வீணாக மினக்கடுறியள்.அதை மட்டும்தான் இப்ப என்னாலை சொல்லமுடியும். நான் இப்படிச் சொல்லிப் போட்டேனென்று மனஸ்தாபப்படக் கூடாது.''

அவள் கணக்குகளை முடித்துவிட்டுக் கீழே வந்து முகாமையாளரிடம் கணக்குகளைச் சமர்ப்பித்தாள். சவுந்தரநாயகம் மேலேயிருந்து ஒவ்வொரு படிப்படியாக மெதுவாக இறங்கிப் பூமிக்கு வந்துகொண்டிருந்தான்.

# 23.

அகிலா முதன் முதலாகக் கிடைத்த சம்பளத்தைக் கொண்டுவந்து தகப்பனிடம் பவுத்திரமாகக் கொடுத்தாள். செல்லம்மா அதில் பத்து ரூபாவை வாங்கி ஐயரிடம் பூசைக்காகக் கொடுத்தனுப்பினுள். மிகுதிப் பணத்தில் நூறு ரூபாவை எடுத்து வேட்டித் தலைப்பில் முடிந்து கொண்டு இரத்தினத்தின் வீட்டுப் பக்கமாகப் போனூர் சோமசுந்தரம். இரத்தினம் காரில் ஏதோ பழுது பார்த்துக் கொண்டு நின்றான்.

''என்னண்ணை விஷயம்?''

''இந்தா ரெத்தினம்! இதிலை நூறு ரூபா கிடக்கு. இதை இப்போதைக்கு வைச்சுக்கொள். பிள்ளை இண்டைக்குத் தான் முதன் முதலாய்ச் சம்பளம் எடுத்தது. மிச்சம் பிறகு தாறன். ஒருமிக்கத் தர ஏலாமல் கிடக்கு ரெத்தினம். என்ரை பாடு உனக்குத் தெரியுந்தானே.''

''அதிலை என்ன. வசதியைப்போலத் தாருங்கோவன். அண்ணை நிண்டாப்போலை இந்தக் காரைக் கொஞ்சம் பிடிச்சுத் தள்ளுங்கோ பாப்பம்.''

கார் ஒருவாறு 'ஸ்டாட்'' ஆகியது. இரத்தினம் காரி லிருந்தவாறே, ''அண்ணை ஒரு விஷயம்மட்டும் சொல்லிப் போடுறன். மோளின்ரை சம்பளக் காசிலை ஒருசதமும் எடுத் துக் கள்ளுக்குடிச்சுப் போடாதையுங்கோ. அது பழி... இல் லையோ அண்ணை?''

சோமசுந்தரம் சுருட்டுக் காவி படிந்த தனது பற்களைக் காட்டிச் சிரித்துவிட்டுத் திரும்பி நடக்கலானுர்.

இரத்தினம் ஏதோ நினைவுக்கு வந்தவனுகி, சோமசுந் தரத்தை மீண்டும் கூப்பிட்டான். ''அண்ணை! அண்டைக்கு நான் ஒருபகுதியைக் காறிலை ஏத்திக்கொண்டு போனனுன். காறுக்குள்ளை அவையள் பேசிக்கொண்டிருக்கேக்க உங் கடை மகளின்ரை பேரும் அடிபட்டதாலை கொஞ்சம் கூர்

மையாகக் கேட்டன். அவை கதைக்கினம், உங்கடை மரு மகன் சந்திரன் பெண்சாதிக்காரியை விட்டிட்டு இருக்கிறது உங்கடை மோள் அகிலாவாலையாம். அதோடை வேறை யெல்லாம் பலமாதிரிக் கதைச்சினம். எனக்கு வாய் பொறுக்கேல்லைத்தான், என்ன செய்யிறது? பாத்தியளே எப்பிடிக் கதை மாறுதெண்டு. அண்டைக்கு நான் மாஸ்டரிட்டைச் சொன்னனான். இந்தமாதிரி நீங்கள் சீதனம், பணக்கார இடமெண்டு போய் விழுறியள் குட்டுப்பட்டுக் கொண்டு திரும்பிவராமல் பாருங்கோ எண்டனான். இண்டைக்கு உங்கடை மோளையும் இழுத்துக்கட்டிப் பேசுறுங்கள். இப்ப மாஸ்டர் என்ன செய்யப்போகிறார்? இனும் வருகுது. என்ரை குமரெல்லாம் கிசுகிசுவெண்டு விலை போகுமெண்டார். இப்ப பேச்சுமூச்சில்லை.''

''இஞ்சைபார் ரெத்தினம்! அவையள் தங்கடை விருப்பத்துக்குக் கலியாணத்தைச் செய்தினம். எல்லாரும் நல்லா இருப்பினம் எண்டு நினைச்சுத்தான் கலியாணத்தைச் செய்து வைக்கிறது. ஆனால், சிலநேரம் பிழைச்சுப் போகுது. ஆனால் என்ரை மகளைப்பற்றிக் கதையள் வாறதுக்கெல்லாம் மகாலிங்கம் ஆட்கள்தான் கால் எண்டு எனக்கு வடிவாகத் தெரியும். என்ரை மோளைப்பற்றி இவங்கள் ஆர் கதைக்கிறதுக்கு? என்ரை மோள் நல்லாவாறது எல்லாருக்கும் எரிச்சல். அவள் இப்ப நாலு காசு உழைக்கத் தொடங்கி விட்டாளெல்லே. அதுதான். வீணாக குமர்ப்பிள்ளையளை அநியாயம் சொல்கிறவங்கள் நல்லா இருப்பாங்களே?''

சோமசுந்தரத்துக்கு இரத்தினம் கூறியவற்றைக் கேட்டதும், தனது மகளின் எதிர்கால வாழ்வு தன் கண்முன்னாலேயே சிதைந்துபோவதுபோல இருந்தது. என்றாலும்இரத்தினத்துக்குக் காட்டிக்கொள்ளாமலிருக்க, சுருட்டை எடுத்துப் பற்றவைத்தபடி கோவில் மடத்தை நோக்கி நடக்கலானார்.

செல்லம்மா பூசைக்காக அர்ச்சனைத் தட்டுடன் கோவிலை நோக்கி வருவதை மடத்திலிருந்தபடி கண்டார் சோமசுந்தரம்.

## 24.

சந்திரசேகரன் தனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளையைப் புரட்டியவாறு சிந்தனையிலாழ்ந்திருந்தான். என்றைக்காவது ஒருநாள் இப்படி நடக்குமென எதிர்பார்த்துத் தான் இருந்தான். என்றாலும் அது உண்மையாக நடந்த போது அவனை அது எவ்வளவு தூரம் பாதிக்கிறதென்பதை அப்பொழுதுதான் உணர்ந்தான். இவ்வளவு சீக்கிரமாக தனது வாழ்க்கையில் களங்கமேற்படுமென எதிர்பார்த்திருக்கமாட்டான். வழக்கு விசாரணைக்கு எடுக்கும் நாளைக் கலண்டரில் அடையாளமிட்டுக்கொண்டான்.

மனைவியை நிராகரித்தது—செலவுக்குப் பணம் அனுப்பவில்லை—திருமணமாகி ஆறு மாதங்களாகியும் எதுவிதத் தொடர்புமில்லை—

அவன் தன் மனைவிக்கெதிராக நீதிமன்றம் ஏறப் போகிறான்.

★

சந்திரசேகரன் வழக்குக்காக இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான், வீட்டுக்கு வந்ததும் கிட்டினர் ஒரு சமாதானத் தூதொன்றுடன் சந்திரசேகரனை எதிர்பார்த்து நின்றார்.

''தம்பி! உன்னோடை ஒரு விஷயம் கதைக்கவேணும். உன்ரை பெண்சாதியைப்பற்றி. நீ பெண்சாதியை உன்னோடை கூட்டிக்கொண்டுபோய் வைச்சிருக்கிறதுக்கு ஓமெண்டால் மகாலிங்கமாக்கள் வழக்கைக் கைவிடுகினமாம். ஆனால் ஒண்டு! நீ கொம்மா கொய்யாவின்ரை சொல்லுக்கு ஆடப்படாதாம். அதோடை உன்னையும் சோமற்றை பொடிச்சியையும் ஏதோ முடிச்சுப்போட்டும் கதைக்கிறதாலை நீ இங்காலிப்பக்கம் வரக்கூடாதாம். அதுக்கு நீ சம்மதிப்பியோ?''

சந்திரசேகரன் கிட்டினரின் வயது முதிர்ச்சியையும் கவனியாது சற்றும் கடுமையாகப் பேசினுன். ''அவைய ளிட்டைப் போய்ச் சொல்லுங்கோ! இரு எண்ட இடத்திலே இருக்கவும் நில்லெண்ட இடத்திலே நிற்கவும் நாங்கள் பேயரில்லேயெண்டு.''

''அப்ப உன்ரை முடிவு மோனே?''

''கோட்டிலே தீர்க்கிறபடிதான்!''

''உன்ரை சகோதரிகளின்ரை வாயிலே மண்ணே அள்ளிப் போடப் போகிருய்!''

''இல்லாட்டியும் மண் விழத்தானே போகுது.''

கிட்டினர் போய்விட்டார்.

சிவபாக்கியத்துக்கு மகனின் பக்கத்தில் தர்க்கரீதியான நியாயமிருந்தாலும் மேலோட்டமாகப் பிரச்சினையைப் பார்த்துவிட்டு ஊர் மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற ஏக்கமும், அவன் வாழ்விழந்து தனியாக நிற்க, சகோதரிகளும் கதியற்றவர்களாகி விடுவார்களென்ற பய மும் வர்ட்டியெடுத்தன. அவள் தனியாக இருந்து கண் கலங்குவதைத் தவிர வேறெந்த வழியையும் காணவில்லே. அவள் அழுதுகொண்டிருப்பதைக் கண்ட மாஸ்டர், ''இப்ப ஏன் ஒப்பார்ரி வைக்கிருய்? ஆர் செத்துப் போச்சின மெண்டு!'' என்று ஆத்திரத்துடன் கேட்டார்.

''ஓ நீங்கள் இப்பிடித்தான் அறப்படிச்சுக் கூழ்ப்பானே யிலே போய் விழுகிறனீங்கள். இனி என்ன மிச்சங் கிடக்கு? எல்லாமே முடிஞ்சுபோச்சு'' என்று பதிலளித்தாள் சிவபாக் கியம்.

செல்லம்மா வந்து எட்டிப் பார்த்தாள்.

''மச்சாள்! இஞ்சை வா. ஒரு அலுவல்.''

''இஞ்சாலே வாவென்.''

''உன்ரை மருமோளின்ரை ஆட்கள் தேவையில்லாமல் என்ரை மோனே இழுத்துப் பேசுகினம். அவள் பிள்ளே யின்ரை காதிலேயும் இது எட்டி நேற்று முழுக்கச் சாப்பிட வும் இல்லே; நித்திரையும் கொள்ளேல்லே. அழுது கொட்டிக் கொண்டிருக்கிருள். உவையளுக்கேன் உந்த அநியாயம்.

அவள் குமர்ப்பிள்ளை. இப்படி அவையள் இல்லாததையும் பொல்லாததையும் கதைக்கிறதாலை அவள் பிள்ளையின்ரை வருங்காலம் நாசமாயெல்லே போகப் போகுது. நாங்கள் உங்கடை மருமோளின்ரை ஆட்களிட்டை என்னத்துக்குப் போறம். எங்கடை கரைச்சலும் நாங்களுமாக இருக்கிற எங்களுக்கு வீணுகத் தலையிடியை உண்டாக்கிருங்கள்.''

''இஞ்சை பார்; உன்ரை மோளைப்பற்றியோ அல்லது என்ரை மோனைப்பற்றியோ கதைகட்டி இந்த ஊருக்கிள்ளை நம்ப வைக்கமாட்டினம். எங்கடை ஆட்களும் இஞ்சை அக்கம் பக்கத்திலை இருக்கிற நாலு சனத்தைக் கேட்டால் தெரியும் என்ரை மோனைப் பற்றியோ அல்லது அவள் பிள்ளையைப்பற்றியோ. உவையின்ரை புலுடாவை யாழ்ப்பாணத்திலை வேணுமெண்டா வைக்கட்டும்: அங்கை ஆரேன் நம்புவினம். அவையள் நம்பிஞ எங்களுக்கென்ன?''

சிவபாக்கியம் சொல்வதிலும் ஏதாவது நியாயமிருந்தாலும், செல்லம்மாவின் மனதிலெழுந்த பீதி நீங்கியதாகத் தெரியவில்லை. ஆனல், செல்லம்மாவின் கோபம் சற்றுத் தணிந்தது. சந்திரசேகரனின் வழக்கு விஷயமாக விசாரித்தாள் செல்லம்மா. சிவபாக்கியம் வெற்றிலைத் தட்டத்தை செல்லம்மாவின் முன்பாக வைத்துவிட்டு, ''இந்தா வெற்றிலையைப் போடு. குடத்திலை தண்ணி அள்ளிக்கொண்டு வந்துடுறன்'' என்று வெளியே போனுள்.

★

சந்திரசேகரன் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு வந்திருந்தான். ஜெயராணியும் தகப்பன், தாயுடன் காரில் வந்திறங்கினுள்.

அன்று அவர்களுடைய வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை. அவன் இப்படி லீவு போட்டு வருவதும், விசாரணைக்காகக் கோர்ட்டில் தவம் கிடப்பதும் வழக்கமாகிவிட்டன. கடைசியில் ஒருநாள் அவனின் வழக்கு விசாரிக்கப்பட்டது. சந்திரசேகரனுக்கு எதிராக எவற்றையெல்லாம்

கூறமுடியுமோ அவற்றையெல்லாம் வழக்கறிஞர் விளாசித் தள்ளி விவாகரத்துக் கோரினர்.

ஜெயராணி சாட்சிக்கூண்டில் ஏறினுள்.

அவள் தனது இதயம் சுமக்கும் பாரங்களை இறக்கி விடுதலைபெற அவளுக்குக் காட்டிவிட்ட வழியில் வந்து அழுதும் அழாமலும் நிற்கிருள்.

''உமக்குக் கணவனுடன் சமாதானமாகப் போக விருப்பமா?'' என்ருர் நீதிபதி.

அவள் சந்திரசேகரன் இருந்த திக்கை, சூழ்நிலையையும் மறந்து ஒருகணம் நோக்கினுள். அவனின் பார்வையோ வேறுபக்கம் லயித்திருந்தது. அவனின் கண்கள் எவ்வித உத்தரவாதத்தையும் அவளுக்குக் கொடுக்கவில்லை. என்ருலும் அவளின் உதடுகள் துடிக்கின்றன. அவள் தாயும், தகப்பனும் இருந்த பக்கத்தை நோக்கினுள்.

முகம் வைராக்கியம் பெறுகிறது.

''இல்லை'' என்ற பதிலைத் தலையசைத்துக் காட்டினுள்.

''எதற்காக என்று கூறமுடியுமா?''-நீதிபதி.

அவளின் சார்பில் தோன்றிய வழக்கறிஞர் விளக்கம் கூறினர்.

நீதிபதி அவரை அமரும்படி பணித்துவிட்டு, ஜெயராணியின் பதிலை எதிர்பார்த்து நின்ருர்.

அவள் மௌனம் சாதித்தாள்.

ஜெயராணியின் தாய் தனது கண்களால் அதற்குரிய பதிலைச் சொல்லிக் கொடுத்தாள்.

''எனக்கு அவரைப் பிடிக்கவில்லை'' - உள்ளத்தைப் பிரதிபலிக்கச் சொற்கள் எப்போதும் பாவிக்கப்படுவதில்லையே!

அவளின் கைவிரல் சந்திரசேகரன் கல்யாணப் பதிவுத் தினத்தில் போட்டுவிட்ட மோதிரத்தை வருடிக் கொண்டிருந்தது.

நீதிபதி அவளைப் போகலாம் என்று கூறி, மறுவிசாரணைக்காக ஒருதினத்தைக் குறிப்பிட்டுவிட்டு அடுத்த வழக்கு நம்பரைக் குறிப்பிட்டார்.

# 25.

அகிலா அன்றைய கணக்குகளை முடித்துக் கொண்டிருந்தாள். வியாபாரம் முடிந்து மூடும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. அப்படியான நேரத்தில்தான் தருணம் பார்த்து சவுந்தரநாயகம் மேல்மாடிக்கு வந்து அவளுடன் பேச்சுக் கொடுப்பது வழக்கமாகிவிட்டது. அன்றும் அவன் மேல்மாடிக்கு வந்திருந்தான். அகிலா கதிரையொன்றில் இருந்து சிறிய மேசையின் முன்னல் ஏதோ கணக்கைச் சரி பார்த்துக்கொண்டிருந்தாள். சவுந்தரநாயகம் 'கோயா' சென்ற் கமழ, அவளுக்கு வெகு அண்மையில் வந்துநின்று தனது பட்டி 'பெல்டை'ப் பிடித்தவாறு ஆடிக் கொண்டிருந்தான். அவன் தனது வலது கையின் மூன்று விரல்களால் அந்தப் பெல்ட்டைப் பிடித்துக்கொண்டும், பெருவிரலையும், சுட்டுவிரலையும் ஒரு கைத் துப்பாக்கி அமைப்பில் நீட்டியவாறு குதியில் நின்று அரைவட்டம் போட்டுச் சுழன்றுகொண்டும் நின்ருன்.

அவன் அப்படிச்சுழலும்போது பெல்ட்டைப் பிடித்திருந்த கரத்தின் கைத் துப்பாக்கி அமைப்பிலுள்ள பெருவிரலும், சுட்டுவிரலும் அகிலாவின் கன்னத்தில் இடைக்கிடை முட்டின. அதை அவள் சட்டை செய்யாதவள் போன்ற பாவனையில் உடனே எழுந்து அலுமாரியின் முன்பாகப் போய் நின்ருள்.

-'இது தற்செயலாக நடந்திருக்கக்கூடுமா?'-

அவன் பம்பரமாக அங்குமிங்கும் சுழன்று தனது அமைதியின்மையைக் காட்டிக்கொண்டு நின்ருன். திடீரென மேசையின்முன்பாக இருந்த யார்த் தடியை எடுத்து அலுமாரியில் அடுக்காது விரித்தபடியே மேசையில் சுருளாகக் கிடந்த புடவையொன்றை எடுத்து அர்த்தமில்லாமல் ''ஒன்று - இரண்டு......'' என அளந்துகொண்டு போனுன். அவன் அப்படி அளக்கும்போது அவனுடைய பார்வை

அந்தத் துணியின் மேல்தான் இருந்தது. ஆனாலும் அந்த யார்த் தடியின் ஒரு முனை அவளின் மார்பில்போய் நேராக இடித்தது.

அவள் துடித்து மறுபுறம் திரும்பினாள்—

அவன் புன்முறுவலுடன் 'ஸொாரி' என்று கூறித் தானும் அவளுக்கு நடந்ததை அறிவான் எனக் காட்டிக் கொண்டான்.

அகிலா இரண்டு மூன்று அடிகள் வைத்து வேறொரு அலுமாரியின் அருகில் வந்து நின்றாள். அதன் கதவு 'ஓ' வென்று திறந்து கிடந்தது.

அதில் சாய்ந்தவாறு நின்றாள்.

'இதுவும் தற்செயலாக நடந்ததென்று எப்படி எடுக்க முடியும்?'— சவுந்தரநாயகம் அவ்விடத்தைவிட்டகன்று கண்ணாடிப் பெட்டியொன்றில் 'அடுக்கி வைத்திருந்த பொருட்களை இதுவரை காலமும் பார்க்காதவன்போலப் பார்த்துக்கொண்டு' நின்றான். 'பெண்களின் சாரிகள்', 'ரெடிமேட் பிளவுசுகள்', கைக்குட்டைகள், அழகுசாதனப் பொருட்கள், குழந்தைகளுக்கான பரிசுப் பொருட்கள் அடங்கியிருந்தன. அந்தக் கண்ணாடிப் பெட்டியில் அவனுக்குத் தேவைப்படக்கூடிய எந்தப் பொருளும் இருக்கவில்லை.

அதிலும் அவனுடைய பார்வை நிலைக்கவில்லை.

மீண்டும் அகிலா நின்றுகொண்டிருந்த இடத்தினருகே வந்தான். தனது காற்சட்டைப் பக்கட்டிலிருந்த கைக்குட்டையை இழுத்தெடுத்தான். பக்கட்டிலிருந்த சில்லறைக் காசுகள், திறப்புக் கோர்வை ஆகியன கலகலவென விழுந்தோடின. சவுந்தரநாயகம் குனிந்து பொறுக்கிக்கொண்டிருந்தான்.

அவளும் குனிந்து பொறுக்கினாள்.

அவள் குனிந்து பொறுக்கியபோது கூந்தலும் முந்தானைச் சேலையும் முன்னால் வந்து விழுந்து அழகுகாட்டின. சவுந்தரநாயகம் குனிந்தவாறே அதையும் ரசித்துக்கொண்டான்.

அகிலா சில்லறைகளைப் பொறுக்கி அவனிடம் நீட்டினாள். அவளின் விரல்கள் படபடத்தன. அவன் அதைக் கவனித்திருக்க மாட்டான்.

அவன் சில்லறைக் காசுகளோடு அவளின் கையையும் சேர்த்துப் பற்றினான்.

★

கீழ் மாடியில் வேலை செய்துகொண்டிருந்தவர்களெல்லாம் மாடிப் படிகளில் கடகடவென ஓடிக்கொண்டிருந்தனர்.

அங்கு எதுவித சலனமுமின்றி நின்றுகொண்டிருந்த சவுந்தரநாயகத்தையும், மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க பற்களை நெரித்தவாறு நிற்கும் அகிலாவையும் கண்டனர். அவளின் கையொன்றில் அவள் அன்று அணிந்துவந்த செருப்பு தூக்கியபடியே இருக்கிறது.

சவுந்தரநாயகம் அவர்களின் முன்பாக மெல்ல நடந்து வந்தான். ''நான் பாருங்கோ, இவவிட்டை எப்பிடி இந்த வேலையை எடுத்தனீங்கள் எண்டு கேட்டன். இந்த நாளையிலை உத்தியோகம் எடுக்கிறதெண்டா குறைஞ்சது இரண்டாயிரமாவது கையிலை வேணும். அப்பிடியில்லையெண்டால் பொம்பிளையள் எண்டால் அதுகும் கொஞ்சம் வாட்டசாட்டமாக இருந்தால் காசில்லாமல் சரிவந்திடும். உங்களிட்டை ஒரு சல்லிக் காசில்லை எண்டுசொல்லுறீங்கள். அப்ப நீங்கள் வேலைக்காக உங்களைக் கொடுத்ததா எண்டு கேட்டன். அதைக் கேட்டுவிட்டுத்தான் உவ இப்பிடிச் சந்நதம் ஆடுகிரு. கேட்டது என்ரை பிழைதான். மன்னிச்சுக்கொள்ளுங்கோ. நான் கேள்விப்பட்டதை என்ரை மடத்தனத்தாலை வாயைத் திறந்து கேட்டன்.''

அவள் கதறியழுது நியாயத்தை நிலைநாட்டிவிட முடியுமா?— அவள் விரும்பாமலே அவளின் கண்கள் நீரைச் சொரிந்துகொண்டிருந்தன.

அவன் ஒரு நீண்ட நாள் இலக்கோடுதான் பழகினான் என்பதை அப்பொழுதுதான் உணர்ந்தாள்.

சவுந்தரநாயகத்தை இரண்டொரு சாதாரண வார்த்தைகளால் எச்சரித்துவிட்டு மேலே வந்தவர்கள் மெல்லக் கீழே இறங்கிப் போனார்கள். சவுந்தரநாயகமும் அவர்களைப் பின் தொடர்ந்தான். அவள் தனியாக, எரிமலையின் முகடாக அந்த மாடியில் நின்றாள். அன்று யூனியன் பூட்டியதும் அவள் நடைப் பிணமாக எவரையும் ஏறெடுத்துப் பாராது வீட்டை நோக்கி நடக்கலானாள்.

அந்த ரோட்டால் எத்தனையோ மாலை வேளைகளில் வேலை முடிந்து போயிருக்கிறாள். இன்றைக்கு அந்தப் பாதையும் புதிது. அந்த மாலையும் புதிதுதான். அவளின் சேலைத் தலைப்பும், கூந்தலும் காற்றின் வேகத்தில் கடல் அலையாகிப் பறக்கின்றன. கண்களிலிருந்து கொதி நீர் கன்னங்களால் வழிகிறது. அவள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் இதயத்தின் வேதனையைக் காட்டுகிறது.

'நாளைக்கு அவன் பேசியதெல்லாம் வீட்டிலும், ஊரிலும் ஒலிக்கப்போகின்றன. அந்த வார்த்தைகள் சாவுப் பறையாகப் பயமுறுத்துகின்றன. அவற்றின் நியாயத்தை அலசி ஆராய்ந்து அவளுக்காக யாரும் பேசப்போகிறார்களா? ஊர்ப் பெண்கள் காதோடு காதாகப் பேசுவதற்கு எவ்வளவு சுவையான நிகழ்ச்சி கிடைத்திருக்கிறது. அப்படியொரு அவமானத்தைக் கண் முன்னால் சிருஷ்டித்துப் பார்க்கிறாள் அகிலா. வானத்தின் நாலா பக்கமும் இடி முழங்குவதுபோலிருக்கிறது. — 'ஆண்டவனே என்னை ஆண்களைக் கவரமுடியாத ஒரு குரூபியாகப் படைத்திருக்கக் கூடாதா? எனது வாழ்க்கையில் நிம்மதியாக எனது கருமங்களை நடத்தியிருப்பேனே!' — அவளின் சிந்தனைகள் எத்தனையோ திக்குகளில் மௌனக் கூச்சலாக வியாபிக்கின்றன. காலம் பூராகப் பூவோ, பொட்டோ இல்லாமல் இப்படியே காலத்தைப் போக்கிவிடலாம் என்றுகூட அவள் சில சமயங்களில் நினைத்திருக்கிறாள். ஒரு ஆணின் துணை காலாகாலத்தில் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு அவசியமென்பதை இன்று அனுபவபூர்வமாக உணர்ந்தபோது அவளின் மனதில் கட்டி

யிருந்த மாளிகை எவ்வாறு சிதைந்து தரைமட்டமானதென் பதையும் ஒரு கணப் பொழுது நினைக்கிறாள் அகிலா. அவ ளின் நடையும் வேகம் பெறுகின்றது.

அந்த ரோட்டில் பஸ் நிற்பாட்டும் கம்பத்துக்கருகில் சந் திரசேகரன் பஸ்ஸை எதிர்பார்த்துத் தனியாக நின்று கொண்டிருந்தான்.

தூரத்தே அவனை அடையாளம் கண்டுகொண்டாள் அகிலா. அவளையறியாமல் நடை வேகம் பெறுகிறது. அவ ளின் கால்கள் அவனருகே போய் நின்றன. அவனைக் கண்ட தும் 'ஓ'வெனக் கதறினாள். அவள் உலகத்தை மறந்தாள். அந்த ரோட்டில் யாராவது நிற்கிறார்களா என்பதைக்கூட மறந்து அவனின் மார்பில் ஓடிப்போய் விழுந்தாள். அவனின் சேர்ட் அவளின் கண்ணீரில் நனைகிறது. அவளின் கைகள் சந்திரசேகரனின் கைகளை இறுகப் பற்றியிருந்தன. விக்கி, விக்கி அழுதுகொண்டிருந்தாள் அகிலா. அவனை, அவள் பற்றியிருந்தபோது அவள் பெண்ணுகைவும் அவன் ஆணுகை வும் இருக்கவில்லை. இரண்டு பக்கங்களிலும் அன்புதான் பேசிற்று. சந்திரசேகரன் எதையுமே கிரகித்துக்கொள்ள முடியாதவனாகித் திணறினான். அகிலாவின் கண்கள் துடித்து நீரைச் சொரிவது அவனின் இதயத்தை ஈர்த்தது. அவளை விடுவித்து நிறுத்தினான்.

"அகிலா!"

எத்தனை வருடங்களுக்குப் பின் அந்தக் குரலைக் கேட் கிறாள் அகிலா. அதில்தான் அவளுக்குத் தேவையான ஆதர வும், அரவணைப்பும், நம்பிக்கையும் உள்ளன.

"என்ன நடந்தது? ஏன் அழுகிறாய் அகிலா?"

அவளுக்குச் சந்திரசேகரனைக் கண்டதும் மனதுக்கு எவ் வளவோ ஆறுதலாக இருந்தது. அவள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். அவனின் மார்பில் போய்ச் சாய்ந்துவிட்டதை அவள் குற்றவுணர்வோடு நோக்காவிட் டாலும் உணர்ச்சி வசப்பட்டுத் தவறிவிட்டாள் என்றே நினைத்தாள். தாயின் மார்பில் விழுவதைப் போலத்தான்

அவள் விழுந்தாலும் அவள், ஏன் போய் இப்படிச் செய் தோம் என வருந்தினாள்.

''சந்திரன் என்னை மன்னிச்சிடு.''

''நீ ஒரு பிழையும் செய்யேல்லையே. ஏன் இப்படி அழுது குழம்புகிறாய் என்று விளங்கேல்லை.''

''உனக்கெண்டாலும் நான் உள்ளதைச் சொன்னா என்ரை மனதுக்கு எவ்வளவோ நிம்மதியாயிருக்கும். நாளைக்கு நான் செத்துக்கெட்டுப் போனாலும் உனக்கெண் டாலும் உண்மை தெரியட்டும்.''

''என்ன அகிலா! ஒண்டும் சொல்லாமல் செத்துக் கெட் டுப் போறதெண்டு சொல்லுறாய்.''

''சந்திரன்! நான் வேலை செய்யிற இடத்திலை ஓவசியர் மணியத்தாருடைய பெறுமோன் முறையான சவுந்தரநாய கம் எண்ட ஆள்தான் காஷியர். அவன் வில்லங்கத்துக்கு வந்து என்னோடை தேவையில்லாமல் கதைச்சுக்கொண்டி ருப்பான். நானும் வேலை செய்யிற இடத்திலை ஏன் வீணாகப் பகையை உண்டாக்குவான் எண்டு பெரிசா எடுக்கேல்லை. அதோடை அவன் அப்பிடியான ஆளெண்டு கண்டுபிடிக்கக் கூடிய மாதிரியும் நடக்காதபடியாலை அவனைப்பற்றிச் சரி யாப் புரிஞ்சுகொள்ள ஏலாமல் போட்டுது. இண்டைக்கு அவன் வந்து மேல் மாடியிலை நான் தனியாக இருக்கேக்கை வில்லங்கமாக என்ரை கையை இழுத்துப் பிடிச்சான். நான் செருப்பைக் கழற்றி அடிச்சன். நான் போட்ட சத்தத்திற்கு எல்லாரும் ஓடி வந்தினம். அதுக்கிடையிலை அவன்ரை நரி மூளை வேலைசெய்து போட்டுது. நான் என்ரை மானத்தை வித்துத்தானும் இந்த உத்தியோகத்தை எடுத்தனானும் எண்டு சொல்ல, நான் கோபப்பட்டுச் செருப்பாலை அடிச்சனா னும் எண்டு அங்கைவந்த ஆக்களெல்லாருக்கும் சொன்னான். என்ரை கையிலை அந்த நேரம் கத்திரிக்கோல் அகப்பட்டிருந் தால் அவன்ரை குடலைப் பிச்செடுத்திருப்பன்... சந்திரன்! நான் இப்பிடி மானங் கெட்டவளென்று ஊர் உலகமெல்

லாம் கதை பரவி அவமானத்தோடை சீவிக்கிறதிலும் பார்க்க......''

''அகிலா! உனக்கு மூளை குழம்பியிருக்கு. நீ ஒண்டுக்கும் யோசிக்காதை. உன்ரை மனச்சாட்சிக்கு விரோதமாக நீ நடந்திருந்தால்தான் உலகத்துக்குப் பயப்படவேணும்.''

''நான் எப்பிடி யோசியாமல் இருக்கிறது? ஐயாவுக்கும் ஒருவேளை இந்தக் கதை காதிலை எட்டினுல், நான் அவங்கள் சொன்னமாதிரி என்ரை மானத்தை வித்துப்போட்டுத்தான் எப்பிடியும் உத்தியோகம் கிடைச்சால் சரியெண்டு நடந்திட் டேனே எண்டுகூட அவர் நினைக்கலாமெல்லே. நான் கூட என்னுடைய சிநேகிதப் பெட்டையளோடை இன்டர்வியூக் கெண்டு தனியாக ஐயாவை வரவேண்டாம் எண்டு சொல் லிப்போட்டுப் போயிருக்கிறன். அந்த நிகழ்ச்சிகளை அவர் கூட்டாயம் தொடர்புபடுத்திப் பாப்பர். அவன் சவுந்தர நாயகம் என்ரை கையைப் பிடிக்க வந்ததெண்டால் ஆர் கண்டது? அங்கை வேலைசெய்யிற ஆக்களே அவன்ரை சொல்லை நம்பிவிட்டினம். மற்றவை நம்பாமலோ இருக்கப் போகினம்? நான் என்ரை புனிதத் தன்மையை எப்பிடி நம்பவைக்க முடியும்? பேச்சளவிலை சொன்னுலும் இந்தக் கதை நாளைக்கு ஊருக்குள்ளை போகிடும். அதுக்குப் பிறகு நான் ஊர் உலகத்தைப் பொறுத்தளவிலை மானங் கெட்ட வள் தானே? அப்பிடியான அவமானத்தோடை வாழுற தும் ஒரு வாழ்க்கையா? நான் செத்துப்போய் உண்மையை விளங்கவைக்க முடியுமெண்டால் இப்பவே நான் சாகத் தயாராக இருக்கிறன் சந்திரன்.''

''அகிலா உன்னைப்பற்றி எனக்குத் தெரியாதா? நீ எப் பிடிப்பட்டவள் எண்டு மாமாவுக்கும் தெரியும். சும்மா விழல் யோசினைகளை விட்டிட்டு வீட்டுக்குப்போ. வீட்டிலை போய் இதுகளைப்பற்றிக் கதையர்தை. அவையளுக்கு விளங்காமல் வீணுக யோசித்துக் கவலைப்படுங்கள்.''

''சந்திரன்! நீ ஒராள் மட்டும் என்னைப்பற்றி அறிஞ்சு வைச்சிருக்கிருய். அதுவே எனக்குப் போதும்.''

சந்திரன் அவளோடு பேசும்பொழுது எவ்வளவோ நிதானமாகப் பேசினலும் அவள் இந்த நிலைக்காளாகியிருப்ப தற்குத் தானே காரணமென்று வருந்தினன். அவளுக்காக இரக்கப்படுவதைத் தவிர வேறு ஏதாவது உதவிசெய்ய முடியாத நிலையிலிருப்பதை நினைத்து ஏங்கினன். அவளோ கடலிலே சங்கமிக்கும் நதியாக எல்லாவற்றையும் இழந்து, அவன் முன்னல் நிற்கிருள். அவள் இழப்பதற்கு இனி என்ன இருக்கிறது? அவன்தான் கடல்போல அவளின் முன்னல் நிற்கும்பொழுது அதிலே அழிந்துபோவதும் பெருமைதான் என்று எண்ணுகிருளோ?

''அகிலா! அந்தா பஸ் வருகிறது. நான் போயிட்டு வாறன்''- என்று விடை பெற்ருன் சந்திரசேகரன்.

இவ்வளவு ஆண்டுகளின் பின்பும் அவனேடு பழைய மாதிரி இத்தனை நேரமும் குழந்தைப் பிள்ளையைப் போலப் பழகிவிட்டேனே என்ற வியப்புடன் தன்னைச்சுற்றி இரும்புக் கவசம்போலச் சந்திரசேகரன் வந்துகொண்டிருக்கிருன் என்ற புதிய நம்பிக்கையுடன் வீட்டை நோக்கி நடக்கிருள் அகிலா. வீட்டுக்கு வந்ததும் தலையிடி எனச் சொல்லிவிட்டு அறையில் பாயைப் போட்டுப் படுத்துக்கொண்டாள்.

## 26.

சவுந்தரநாயகம் அன்று தனக்கேற்பட்ட நிலைமையை வெகு சாதுரியமாகச் சமாளித்திருந்தாலும் தன்னுடைய நிலையைப் பலப்படுத்தும் வகையில் அகிலாவுக்கும் தனக்குமிடையில் நடந்த சம்பவத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தினன். பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து தேநீர்க் கடைகளிலும், மதுபானச் சாலைகளிலும் நண்பர்களுடன் பேசினன். அவனுக்கு அவளின் செருப்பால் அடிபட்ட கன்னம் எப்பொழுதும் வஞ்சத்தை நினைவூட்டிக் கொண்டிருந்தது. அவனிலிருக்கும் திறமை என்னவென்ருல்,

அவனை யாருமே சந்தேகிக்காதவாறு வெறும்அப்பாவிபோல, மனதில் உருவாகும் திட்டங்களை நிறைவேற்றிவிடுவான். அகிலாவின் விஷயத்தில் அவன் தோல்வியடைந்தது அவனின் சாதுரியம் பிழைத்ததாலல்ல. அவள் ஒரு நெருப் பென்று அவன் கனவுகூடக் காணவில்லை. இந்த நாட்களில் இப்படியொரு பெண்ணு?

அப்பொழுது மாலையாகியிருந்தது.

கோவில் மடத்திலிருந்து வம்பளந்துகொண்டிருந்த சிலர் கலைந்து போவதற்காக எழுந்து நின்றனர். சோமசுந் தரம் அந்த வழியால் சுருட்டில் நெருப்பு மினுமினுக்கப் போய்க்கொண்டிருந்தார். அங்கு நிற்போரின் கவனம் சோமசுந்தரத்தின் மேல் விழுந்தது.

''பெரிய நடப்பாக வேட்டி சால்வை போட்டுக் கொண்டு போருர். அட! சீ...'' என்ருெருவன் காறித் துப்பி ஞன்.

''மோளுக்கு வேலை கிடைச்சிருக்கெண்டு நடப்பாகத் திரியிருர். எப்பிடி வேலை கிடைச்சதெண்டு நேற்று அவன் சண்முகம் சொல்லியெல்லோ தெரியும். அதுதானே நினைச் சன்'' என்ருன் இன்னெருவன்.

''என்னெண்டு மச்சான் கிடைச்சது?'' ஒருவன் தெரி யாததுபோல மற்றவனைக் கேட்டான்.

''அதெடாப்பா பெரிய மனுஷன் ஆருக்கோ படுக்கை விரிச்சு மானத்தை விலையாகக் குடுத்து ஒரு உத்தியோகம்... கேவலம்...... எங்கடை ஊரிலை இப்பிடி நடந்திருக்குதே எண்டு அவமானமாகக் கிடக்கு. உப்பிடி உழைப்பிச்சுச் சாப் பிடுறதிலும் பார்க்க ரேட்டிலை பிச்சை எடுக்கிறது எவ்வ ளவோ மேல்.''

அகிலாவைப்பற்றி அவர்கள் பேசிய வார்த்தைகள் சோமசுந்தரத்தின் காதுகளையும் எட்டின. அவரின் காது களையும் எட்டவேண்டுமென எய்துவிட்ட வார்த்தைகள் தான் அவை. அவை செய்யவேண்டிய வேலையை முறையா கச் செய்தன. சோமசுந்தரம் விசுக் விசுக்கென நடந்து

கொண்டிருந்தார். வீட்டுப் படலையைத் திறந்ததும் சுருட்டை வீசியெறிந்தார். நேராகக் குசினிக்குள் போனார். அகிலா தட்டில் சோற்றைப் போட்டுவிட்டுக் கறிச் சட்டியைத் தூக்கிக்கொண்டிருந்தாள். அன்று பகல் பூராகச் சாப்பிடவேயில்லை. அப்பொழுதுதான் தாயின் வேண்டுதலால் ஏதாவது சாப்பிடுவோம் என்று குசினிக்குள் வந்திருந்தாள்.

சோமசுந்தரத்தின் கால்கள் நிலத்தைத் தேய்த்தபடி மகளின் அருகே வந்து நின்றன.

தகப்பனைப் பார்த்தாள் அகிலா.

சோமசுந்தரத்தின் வலது கரம் அளவுக்கு மிஞ்சிய முரட்டுத்தனத்தோடு அவளின் கூந்தலைப் பற்றியது. அப்படியே இழுத்து அசுரப் பலத்தோடு முன்னாலிருந்த சுவரில் அவளை மோதியது.

''ஐயோ! அம்மா! ஐயோ!'' என்ற கதறல்.

செல்லம்மா ஓடோடி வந்தாள் குசினிக்குள்.

அகிலாவின் நெற்றியிலிருந்து இரத்தம் லேசாகக் கசிந்தது. வீட்டில் ஒரு பிரளயமா? செல்லம்மா எதுவும் அறியாதவளாகக் கணவனின் முரட்டுச் சத்தத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் திகைத்து நின்றாள். அகிலா நெற்றியைப் பொத்தியவாறு எழுந்து நின்றாள்.

''நீ ஏன் இப்ப மூண்டு நாளாக வேலைக்குப் போகேல்லை?'' சோமசுந்தரந்தான் பேச்சை எடுத்தார்.

''சுகமில்லை!'' அகிலா நிலத்தைப் பார்த்தவாறே பதில் சொன்னாள்.

''சுகமில்லைத்தானா அல்லது வேறெதுவுமா? உண்மையைச் சொல்லு? இல்லாட்டிக் கொண்டுபோடுவன்...''

''ஐயோ! ஏன் போட்டு அவள் பிள்ளையைக் கொல்லுறியள்?'' செல்லம்மா கலங்கியவாறு கணவனின் கையைப் பிடிக்கிறாள்.

''நீ போ அங்காலை. உன்ரை மோள் செய்திருக்கிற வேலைக்கு......'' சோமசுந்தரத்தின் வார்த்தைகள் முற்றுப் பெறவில்லை.

அகிலா தகப்பனின் முன்பாக வந்து நின்றுகொண்டாள்.

"நீ உத்தியோகம் கிடைக்க வேணுமெண்டதுக்காக ஆரையேன் போய்ச் சந்திச்சனியோ? அந்தப் பொட்டையோடை கூடிக்கொண்டு என்னத்துக்குப் போனனி? உள்ளதைச் சொல்லிப்போடு...... இல்லாட்டி என்ன நடக்குமெண்டு........."

அகிலா எது நடக்கக் கூடாதென்று ஏங்கியிருந்தாளோ அது நடந்துவிட்டது. செய்யாத ஒரு குற்றத்துக்காக அவள் குற்றவாளிக் கூண்டில் நின்ருள். அவளின் முகத்தில் வேதனை மேலிட்டது. என்ருலும் தகப்பன் இப்படி அடித்துத் துன்புறுத்திவிட்டாரே என்ற கோபத்தின் சாயல் எதுவுமே அவளிடம் இல்லை. வாழ்க்கையில் ஒரு நாளைக்காவது தகப்பனின் கையால் அடி வாங்கவேண்டுமென நினைத்திருந்தவள் போல அதை அசட்டையே செய்யாது தகப்பனைப் பார்த்துக் கூறினுள்:

"ஐயா! நான் உங்கடை மகள். நீங்கள் என்ன மனதிலை வைச்சிருக்கிறியள் எண்டு தெரியும். உங்களுக்கு மானம் பெரிசெண்டு நினைக்கிறியள். நீங்கள் நினைக்கிற மாதிரி ஏதேன் நடந்திருந்தால் இப்ப என்ரை துவசமும் முடிஞ்சிருக்கும். ஐயா நீங்களும் ஊராக்களின்ரை பேச்சை நம்பிவிட்டியளே...... அதுதான் எனக்குக் கவலையாக் கிடக்கு..."

சோமசுந்தரம் தனது இரு கரங்களாலும் மகளை வாரி அணைத்து அவளின் தலையைத் தடவிவிட்டார். அவளின் வார்த்தைகளுக் கெதிராக அந்தத் தந்தையின் மனம் கூனிக் குறுகிக்கொண்டது.

குரல் தாழ்ந்து நடுக்கம் கண்டது.

"பிள்ளை! நீ அப்பிடி ஒருநாளும் நடக்காயெண்டு எனக்குத் தெரியும். அந்த எளியவங்களின்ரை பேச்சைக் கேட்டதிலை ஆத்திரம் வந்து அடிச்சுப்போட்டன் பிள்ளை. நீ போய்ச் சாப்பிடு. சாப்பிடக் குந்தின உன்னை அடிச்சுக் காயப்படுத்திப் போட்டேன்!" சோமசுந்தரம் வழக்கத்துக்கு மாருக மிகவும் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினுர்.

அவர் திரும்பிப் போகுமுன் அகிலாவைக் கூப்பிட்டு, ''பிள்ளை! நீ இந்த ஊர்ச் சனத்தின்ரை பேச்சைக் கேட்டு விட்டு முட்டாள்தனமாக ஏதேன் முடிவு செய்துவிடக் கூடாது பிள்ளை'' என்றார்.

''ஐயா! நான் அப்படி ஊர்ச் சனத்துக்காக உயிரைவிட மாட்டன். நீங்கள் பயப்படாதையுங்கோ.''

''பிள்ளை! அந்த மடத்திலை இருந்து கதைச்ச நாலு பேருக்கை நீ மானங் கெட்டவள் எண்டு அடிபட்டா இனி ஊரெல்லாம் பரவினமாதிரித்தான். அதுக்கு இனித் தலை கால் வச்சுக் கதைப்பினம். உனக்கு எங்கையாகிலும் சம் பந்தம் பேசினால் கல்லுக்குத்துவாங்கள். நான் அப்பவே சொன்னனான், உனக்கு இந்த உத்தியோகம் ஒன்றும் வேண்டாமெண்டு. நீ கேக்கேல்லை. இப்ப உன்ரை நிலை வரம் சீவிய காலம் முழுக்க வீட்டோடை அடைஞ்சு கிடக் கிறதுதான்.'' — கூறிக்கொண்டே சோமசுந்தரம் உள்ளே போனார். செல்லம்மா சுவரில் சாய்ந்தவாறு மலைத்து நின் றாள். அகிலாவின் சகோதரிகள் விழிகள் பிதுங்க நின்றார் கள்.

## 27.

மகாலிங்கம் கடையிலிருந்து மூன்று மணிக்கே திரும்பிவிட்டார். முக்கியமான அவரின் வியாபார நண்பர், வீட்டுக்கு என்றுமில்லாதவாறு வரப்போவதினால் அன்ன பூரணம் நேர காலத்துடனே ஆயத்தங்களைச் செய்துவைத் திருந்தாள். கோழிக்கோடு வாழைப் பழங்கள் ஒரு தட்டத் திலும், சிற்றுண்டி வகைகள் வேறு இரண்டு தட்டங்களி லும் அழகாகச் சாப்பாட்டு மேஜையில் வைக்கப்பட்டிருந் தன. அன்று மலர்ந்த ரோஜாப் பூக்களையும், வேறும் அதற் குப் பொருத்தமான சில கத்தாளை இனத்தைச் சேர்ந்த இலை

வகைகளையும் சேர்த்து அழகாக 'வாஸில்' வைத்திருந்தாள் ஜெயராணி. நான்கு மணியாகியும் இன்னும் ஆள் வர வில்லை.

''பிள்ளை! நீ இப்பிடி நிக்காமல் நல்ல சீலையிருந்தால் உடுத்து வெளிக்கிட்டு நில்லன்'' என்று கேட்டாள் தாய் அன்னபூரணம்.

''ஏன் நான் வெளியாலை வரப்போறனே? ஆரும் வாற தெண்டால் வந்திட்டுப் போகட்டுமென்; எனக்கென்ன'' என்றுள் ஜெயராணி.

''இல்லை...... தற்செயலாக உன்னை யாரும் கண்டிட் டால் என்ன நினைப்பினம்? நீ இப்பிடிக் கேவலமாக இருந் தால் கொய்யாவின்ரை மரியாதைதானே போகும் பிள்ளை.'' அன்னபூரணம் நாசூக்காக விஷயத்தைப் போட்டு வைத் தாள்.

அவர்கள் எதிர்பார்த்த கார் வாசலில் வந்து நின்றது.

மகாலிங்கம் வரவேற்பதற்காக வாசல் வரைக்கும் வந்து விட்டார். காரிலிருந்து கம்பீரமாக நடுத்தர வயது மதிக்கத் தக்க ஒருவர் இறங்கி வந்தார்.

உடையில் ஆடம்பரம் தெரிந்தது. விரல்களில் மோதிரங் கள் பளபளத்தன. விலையுயர்ந்த வெளிநாட்டுச் சேர்ட்டும், பட்டு வேட்டியும் உடுத்திருந்தார். தங்கச் செயின் போட்ட கைக் கடிகாரம், அவரின் செழிப்பைப் பார்த்தவுடனேயே காட்டுகிறது. மகாலிங்கம் அவரின் தோளில் பிடித்தவாறு உள்ளே அழைத்து வருகிறுர்.

இருவரும் ஹாலில் இருந்து வியாபார விஷயமாகச் சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தனர். அவர் வியாபார விஷயம் மட்டும் பேசுவதென்றுல் மகாலிங்கத்தைக் கடையி லேயே கண்டு பேசியிருக்கலாம். ஆனுல் அவர் இன்று வந்தி ருப்பது மகாலிங்கத்தின் வேண்டுகோளில்தான். அவரின் வருகையும், மகாலிங்கத்தைப் பொறுத்தமட்டில் எவ்வ ளவோ முக்கியமானதுங்கூட. அவருடைய மகளின் எதிர் காலமே இதில்தான் தங்கியிருக்கிறது. வியாபாரத்தில் இவ் வளவு நெருக்கமாகப் பழகும் அவரைத் தனது மருமகனுக்கி

ஞல் என்னவென்று மகாலிங்கம் சிந்தித்ததன் விளைவுதான் இன்று அவர் வந்திருக்கும் நிகழ்ச்சி.

அன்னபூரணத்திற்கு மட்டுமே விஷயத்தைச் சொல்லி வைத்திருந்தார். அவர் வியாபாரப் பேச்சுடன் ஜெயராணியையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்ற எண்ணத்தோடு வந்திருந்தார். மகாலிங்கம் அவரைச் சற்று அமர்ந்திருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனுர். ஜெயராணி கிணற்றடியில் குடத்தில் தண்ணீர் நிறைத்துக்கொண்டிருந்தாள். அவள் குனிந்து தண்ணீரைக் குடத்தில் ஊற்றியபோது அவளின் உடைக்குள் மறைந்திருந்த தாலிக்கொடி வழுக்கி வெளியே வருகிறது.

''என்ன பிள்ளை! இப்பிடி நிக்கிருய். ஓடிப்போய் வெளிக்கிட்டுக்கொண்டு உந்தத் தாலிக்கொடியைக் கழற்றி வைச்சுப்போட்டு கோப்பி போட்டுக்கொண்டு முன்னுக்கு வா கெதியா'' என்று உத்தரவு போட்டுவிட்டு மீண்டும் வெளியே போய்விட்டார்.

அன்னபூரணம் வந்த விருந்தாளிக்கு முன்ஞல் பல காரத்தைக் கொண்டுபோய் வைத்துவிட்டுச் சென்ருள்.

ஜெயராணிக்கு விஷயமெல்லாவற்றையும் தெளிவாக விளங்கிக்கொள்ள அதிகநேரம் பிடிக்கவில்லை.

''அம்மா! என்ன இந்தக் கூத்தெல்லாம். நான்தானே என்ரை முடிவை நேற்று உங்களுக்குச் சொன்னனுன். நான் உயிரோடை இருக்கிறது உங்களுக்கு விருப்பமெண்டால் தயவுசெய்து என்னை ஒண்டும் கேக்காமல் இங்கையிருந்து போங்கோ அம்மா. தாலிக்கொடியை நான் கழட்ட மாட்டன். ஐயா என்னை வெட்டிப் போட்டாலும் பரவாயில்லை. சாகிறது ஒரு நாளைக்குத்தான். அது எப்பிடி வந்தாலும் வரட்டும்.''

மகாலிங்கம் மகள் வெளியே வராததால் மிகவும் கொதிப்படைந்தார். வந்திருக்கும் நண்பர் முன்பாக வெளிப்படையாகக் கடிந்துகொள்ள முடியாமலும், நிலைமையை எப்படி மனஸ்தாபம் ஏற்படாமல் சமாளிப்பது என்பதிலும் மகாலிங்கம் அவதிக்குள்ளானுர்.

''அது பாருங்கோ...... மகளுக்கு இருந்தாப்போல...... சுகமில்லாமல் போச்சு...... நேற்று நல்ல சுகமாய்த்தான் இருந்தவள்...... ராத்திரி சரியான காய்ச்சல்... இண்டைக்கு பாக்கிறதுக்கு வசதியில்லாமல் இருக்குப் பாருங்கோ...... ஏன் நீங்கள் எப்பவெண்டாலும் இன்னொரு நாளைக்கு வரலாம்தானே...... என்ன அவசரம்?''

''ஓ...... அதிலையென்ன...'' அவருக்குச் சற்று ஏமாற்றமாகவே பட்டாலும் நாகரிகமாக அதை ஏற்றுக்கொண்டு மகாலிங்கத்திடம் விடை பெற்றுர். மகாலிங்கம், அவர் 'கேட்'டைத் தாண்டியதும் கோபக் கனல் பொங்க உள்ளே போனுர்.

''ஏய்...! ஜெயராணி! உன்ரை போக்கு உனக்கே நல்லாக் கிடக்கே? உனக்கென்று ஒரு வாழ்க்கை கிடைக்கக் கூடாதெண்டு ஆரோ சாபம் போட்டிருக்கு. இல்லாட்டி இவ்வளவு பாடுபட்டு நான் காரியத்தை நடத்த நீ என்ரை முகத்திலை கரியைப் பூசுவியே? எத்தினை கதையைச் சொல்லி என்மேலை இரக்கப்பட்டு அந்த ஆள் வர ஓம்பட்டது. உனக்கு வாழ்க்கை இருண்டுபோகாமல் ஒரு வழியிலை விடலாம் எண்டுதான் நானும் விசர்த்தனமாகத் தெண்டிச்சன். எல்லாத்தையும் பாழாக்கிப் போட்டு மரக்கட்டையாக நிக்கிருய். எங்கடை சொல்லைக் கேட்டு நடக்க ஏலாட்டி ஏன் இஞ்சை இருக்கிருய்? எங்கையாகிலும் போய்த் தொலையன்! துர்க்குறி பிடிச்சதுகள் வீட்டிலை இருந்தால் வீட்டுக்கே ஆகாது.'' மகாலிங்கத்தின் கோபம் சரமாரியான வார்த்தைகளாக ஜெயராணியைத் தைத்தன.

''அட கடவுளே! என்னையா ஐயா இப்பிடித் திட்டிப் போட்டுப் போருர்?'' அவள் எதுவுமே பேசாது அறைக்குள் போய்ப் படுத்துக்கொண்டாள். அந்த அறைக்குள்ளிருந்து விம்மல் ஒலி கதவினூடாக வெளியேறிக்கொண்டிருக்கிறது.

# 28.

சந்திரசேகரன் இன்னும் பயணமாகவில்லை. அவன் வீட்டில் நின்ற நாட்களில் அகிலாவின் விஷயம் தனது தாய்க்கும் எட்டிவிட்டதை அறிந்தான். அதற்குத் தூபமிட்டாற்போல் மாஸ்டரும், சிவபாக்கியமும் விறுந்தையில் தனியாகப் பேசிக்கொள்வது அவனுக்கும் கேட்டது.

''இஞ்சை பாருங்கோ! சந்திரன்ரை எழுத்தைத் தள்ளின பிறகு எங்கடை அண்ணற்றை பொடிச்சி அகிலாவைத் தான் செய்வமெண்டு யோசிச்சிருந்தனுன். அண்ணை மாட்டன் எண்டு சொல்லமாட்டார். சந்திரன் இப்பிடி இனிக் காலம் முழுக்கத் தனியாகச் சீவிக்கப் போறுனே? அவள் பொடிச்சி அகிலாவும் பாவமெண்டு செல்லம்மாவோடை சாடைமாடையாய்ப் பேசினுள். இப்ப பார்த்தால் எங்கடை மோனுக்குப் பொம்பிளை கிடைக்காமல் போய் இப்பிடி மானம் மரியாதையை வித்து உத்தியோகம் எடுத்த ஒருத்தி தான் கிடைச்சிருக்கெண்டு ஊர்ச்சனம் எங்களைப் பேசாதே. அண்ணைக்காக எங்கடை மரியாதையை விட்டுக் கொடுக்க முடியுமே?'' என்றுள் சிவபாக்கியம்.

மாஸ்டர் விறுக்கெனக் கதிரையிலிருந்து எழுந்தார். ''நீ சும்மா பேய்க்கதை கதையாதை. அவளுக்கென்ன நடந்ததெண்டு எனக்கெல்லாம் தெரியும். சந்திரன் வந்து எனக்கெல்லாம் சொல்லிப் போட்டான். உனக்கு அந்த விஷயமெல்லாம் சொல்லச் சரிப்பட்டு வராது. சும்மா அநியாயமாய் ஒரு பொம்பிளைப் பிள்ளையை வாய் கூசாமல் கண்ட நிண்டபடி கதைக்கிறதுக்கு உனக்கும் மனம் வந்திட்டுதே எண்டுதான் நான் மனவருத்தப்படுறன். உன்ரை பிள்ளை வேறை; கொண்ணற்றை பிள்ளை வேறையெண்டு நீ நினைச்சுப் போட்டாய். அவள் அப்பிடியா உங்களெல்லா ரோடையும் நடந்தவள்? நான் இப்ப எந்த முகத்தோடை போய் சந்திரனைக் கட்டச் சொல்லிக் கேக்கிறதெண்டு வெக்

கப்படுறன். நீயெண்டா மகாராணி போல கதைக்கிருய். போய் உன்ரை அலுவலைப் பார்'' என்ருர்.

சந்திரசேகரன் அறையில் நிற்பதைக் கண்டதும் அவனருகில் சிவபாக்கியம் போய், ''சந்திரன்...... இஞ்சை வா. ஒரு விஷயம்'' என்ருள்.

''என்னம்மா?''

''உனக்கு அண்ணற்றை மோளைச் செய்ய ஓம்படுவியோ? அவளைப்பற்றி என்னவெல்லாமோ கதைக்கினம். நீ கேள்விப்படேல்லையே?''

''எனக்கு இனிக் கலியாணம் செய்யவேணுமெண்ட கட்டாயம் இல்லை. அகிலாவைப்பற்றி உனக்கு இவ்வளவு நாளும் பழகியும் அறிய முடியாமல் போட்டுதேயெணை'' என்று சந்திரசேகரன் பேச்சை முடித்துவிட்டுக் கிணற்றடிப் பக்கமாகப் போனன்.

★

அகிலா மீண்டும் வேலைக்குப் புறப்படும் எண்ணத்தைத் தந்தையிடம் வெளியிட்டாள்.

''பிள்ளை! நீ வீட்டோடை இரு. வெளிக்கிட்டு வேலை வேலையெண்டு போனதாலைதான் எல்லாம் வந்திருக்கு'' என்ருர் தகப்பன் பிடிவாதமாக.

''ஐயா நான் வீட்டோடை இருந்து என்னத்தைக் காணப்போறன். நானும் உழைக்கிறதாலை வீட்டிலை அடுப்பு மூன்று நேரமும் புகையுதே. அதுக்காகவெண்டாலும் நான் போகத்தான் வேணும். நீங்கள்தானே ஐயா சொல்லுவியள் பிரச்சினைகளைக் கண்டு பயந்தோடக் கூடாதெண்டு. எனக்கு எதையும் சமாளிக்கிற வைராக்கியம் இருக்கு. நீங்கள் பயப்படாதையுங்கோ. எங்களை ஆட்டிப்படைக்கிற இந்தத் தாத்திரங்கள் கட்டாயம் ஒரு நாளைக்கு மறைஞ்சுபோகும். அந்த நம்பிக்கையிலைதான் பிறகும் வேலைக்குப் போக யோசிச்சனன். என்னை மறிக்கவேண்டாம் ஐயா.''

''என்னவோ பிள்ளை நீ சொல்லுருய். உன்னை நினைக்க... எனக்குப் பாவமாகக் கிடக்கு. பாரத்தைச் சுமக்க வேண்டிய

வன் நான். பொண்ணுப் புறந்த நீ கஷ்டப்படுகிறதை எப்பிடிப் பிள்ளை பார்த்துக்கொண்டிருக்க முடியும்? சரி...சரி... போட்டு வா...'' என்று தகப்பன் தயங்கியபடி விடை கொடுத்தார்.

அவள் மீண்டும் வேலைக்காகப் புறப்படப் போவதைப் பற்றிய தகவல் சந்திரசேகரனுக்கும் எட்டியது. அகிலா வேலைக்காகப் புறப்பட்டு அரை மணித்தியாலம் ஆகியிருக்கும். சந்திரசேகரன் திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவனுகிச் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவள் போன திக்கில் புறப்பட்டான். அவள் யூனியன் கடைக்கு அண்மையில் போய் விட்டாள். சந்திரசேகரன் அவளின் அருகில்போய்ச் சைக்கிளை நிறுத்திவிட்டு இளைக்க இளைக்க நின்ருன்.

''அகிலா!''

''என்ன சந்திரன்?''

''நீ இனிமேல் வேலைக்குப் போகவேண்டாம். வீட்டை திரும்பிப் போ.''

''ஏன்?''

''நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன். எனக்கு உன்ரை சம்மதம்தான் வேணும். உனக்கு விருப்பமில்லாவிட்டால் உன்ரை கொய்யா, கொம்மாவின்ரை விருப்பத்துக்காகவோ அல்லது எங்கடை ஐயா கேக்கிருர் எண்டோ அல்லது...... என்ரை நிலைபரத்தை நினைச்சு இரக்கப்பட்டோ நீ விரும்பாத ஒண்டுக்குச் சம்மதிக்கக் கூடாது அகிலா.''

''சந்திரன்! நீ என்ன சொல்லுகிருய்? எனக்கு ஒன்றுமே விளங்கேல்ல.''

''இஞ்சை பார்! என்ரை வழக்கு ஒருமுடிவுக்கு வருகுது. கல்யாண எழுத்தைத் தள்ளிவிட ரெண்டு பகுதிக்கும் விருப்பம். அவை தந்த சீதனத்தை நாங்கள் திருப்பிக் கொடுக்க வேண்டி வரும். நான் கட்டின தாலி திரும்பவும் என்னுடைய கைக்கு வரும். அதன் பிறகு உன்னை எனக்கு கல்யாணம் கட்டி வைக்கிற

துக்கு எங்கடை அம்மாவும் ஐயாவும் கொய்யா கொம்மா விட்டைக் கேட்க ஆயத்தப்படுத்தினம். அவை ஒருநாளும் மறுக்கமாட்டினம் எண்டு எனக்குத்தெரியும். உன்ரை விருப்பம் இல்லாமல் நான் உன்னைக் கல்யாணம் செய்யச் சம்மதிக்க மாட்டன். நான் உன்னைத்தான் கலியாணம் கட்டுவன் எண்டு அப்ப நினைச்சிருந்தன். எங்கடை இரண்டு குடும்பமும் அப்படித்தான் இருந்ததாலை நான் வேறை ஒரு பெண்ணைக் கலியாணம் முடிப்பன் எண்டு கனவிலையும் நினைச்சிருக்கேல்லை. எங்கடை குடும்ப நலனுக்கு நான் முட்டுக்கட்டையாக இருக்கப் படாதெண்டு அம்மா ஆக்கள் பேசிக் கொண்டு வந்த கலியாணத்துக்குச் சம்மதிச்சன். உன்னைத் தான் கலியாணம் கட்டுவேன் எண்டு திடமாக நின்று வாழ்க்கையிலை வாற எல்லாப் பிரச்சினைகளையும் போராடுவேன் என்ற மனவைராக்கியம் அப்ப இல்லாமல் போச்சு. நீ கூட நினைச்சிருப்பாய் இப்படித்தான். இல்லையா அகிலா? ஆனால் ஏதோ எல்லாமோ நடந்து போச்சு. நான் அவளைக் கல்யாணம் மனவிருப்பத்தோடுதான் கட்டினன். நான் உன்னை இழந்துவிட்டேன் எண்டு அவளைப் புறக்கணிக்கேல்லை. அன்பாகத்தான் இருந்தன். அவளுக்காக எவ்வளவோ விஷயங்களில் நான் விட்டுக்கொடுத்து எவ்வளவோ கண்ணியமாக நடந்து கொண்டன். இருந்தும் எங்களுக்கிடையில் நிறைய வேற்றுமை இருக்குது. அவள் ஒரு முனை; நான் மறு முனை. இரண்டும் சந்திக்கவே மாட்டாது.''

''சந்திரன்!...'' அகிலாவின் கண்கள் கலங்கி நின்றன.

''நீ என்னைக் கல்யாணம் கட்டுறதைப் பற்றிச் சொல்ல எனக்கு அழுகையாகவும் வருகுது, சிரிப்பாகவும் வருகுது. என்னை நீ கட்டினால் நாளைக்கு றோட்டாலை என்னைக் கூட்டிக் கொண்டு போக 'மானத்தை வித்த பொம்பிளை உவதான்' எண்டு ஆராகிலும் சொல்லக்கேட்டால் நீயெண்டால் கலங்க மாட்டாய். உனக்கு அந்தத்தைரியம் இருக்கெண்டு எனக்கு தெரியும். ஆனால் இன்னொரு பக்கத்தாலை பாத்தால் நீ உன்ரை குடும்பத்தை விட்டதுக்கு நான் தான் காரணம் எண்டு உன்ரை பெண்சாதியாக்கள் சொல்லுறது உண்மையாகப்

போயிடும் சந்திரன்! எங்கடை குடும்பத்துக்கு வருமானம் போதாது. நான் உழைக்கப்போகாட்டி வீட்டிலே கஷ்டமாக கிடக்கு. நான் என்ரை சீவியகாலம் முழுக்க இப்பிடியே காலந்தள்ளலாம் எண்டுதான் யோசிச்சிருக்கிறன். ஐயா, எனக்கு இப்பிடி மரியாதைக் கேடான பெயர் வந்திட்டுது, என்னை ஆர் நம்பிக் கல்யாணம் செய்யப் போகினம் எண்டு சொல்லுறுர். அவர், நான் வீட்டிலேயே இருந்து இப்பிடிப் பேர் வாங்காமல் இருந்திருந்தாலும் கூட என்னைக் கரை சேர்த்து போடுவரா? எல்லாரும் ஒவ்வொண்டும் நடந்து முடிஞ்சவுடனை தங்களுக்கு வசதியாகப் பேசுறது தானே உலக வழக்கம். ஏன் இப்பிடி நடக்குதெண்டு ஆராகிலும் யோசிச்சுப் பாக்கினமே. நான் சமூகத்தைப் பொறுத்த மட்டிலே புறக்கணிக்க வேண்டியவளாகிவிட்டன். இல்லாவிட்டாலும் நான் ஏதோ அதிட்டத்திலே கல்யாணம் வேறை யாரையாவது உன்னைத்தவிர முடிச்சால் ஒரு நாளைக்காவது இந்தக் கதை என்ரை வாழ்க்கையிலே வராமலா விடப் போகிறது. அப்பிடியொரு பூகம்பத்தை என்னல் கற்பனை பண்ணவே பயமாக இருக்கிறது. ஆனபடியாலே என்ரை வாழ்க்கையின்ரை முடிவு எந்தப்பாதையாலே வந்திருந்தாலும் இப்பிடித்தான் முடிஞ்சிருக்கும். அது எனக்கு வடிவாகத் தெரியுது. உன்னோடை நான் இவ்வளவும் பேசுறது உன்ரை அபிமானத்தைப் பெற எண்டு மட்டும் நீ நினைக்காட்டி அதுவே எனக்குப் போதும். உனக்காவது என்ரை மனசிலே இருக்கிறதைச் சொல்லவேணுமெண்டதுக்காகத் தான் இவையளைச் சொன்னனுன்''

சந்திரசேகரன் சைக்கிளின் ஹாண்டிலைப் பிடித்தவாறு அகிலாவின் தலைக்கு மேலாகத் தெரியும் நீல வானத்தைப் பார்த்து நின்முன். அந்த வானத்தைப் போல எல்லாமே தெளிவாகத் தெரிந்தன. அகிலாவின் வார்த்தைகளைக்கேட்டதும் சந்திரசேகரன் வருங்காலத்தில் தான் செல்லவேண்டிய பாதையை ஆணித்தரமாக உணர்ந்தவனுக ''அகிலா! உனக்கு என்னைக் கலியாணம் கட்டச் சம்மதமா எண்டதை மட்டும் சொல்லு. என்னுடைய நிலையை நினைத்து நீ இரக்

கப்பட்டு அதன் நிமித்தம் சம்மதிக்காதை. உன்னுடைய முடிவு உனக்கு மனசாரப் பிடிக்க வேணும்'' என்றான்.

''சந்திரன் உன்ரை வாழ்க்கையிலும் ஒரு குறையாப் போச்சு, என்ரை வாழ்க்கையிலேயும் நான் தேடாமலேயே ஒரு குறை வந்திட்டுது. என்னைப்புரிந்து கொண்ட உன்னைத் தவிர வேறை ஆரையும் கட்டுவதென்றால்... அதிலும் பார்க்க சீவிய காலம் முழுக்க என்ரை சகோதரிகளுக்கு உழைச்சுக் கொடுத்து ஆளாக்கி விடுறது எவ்வளவோ மேல். ஆனால் சந்திரன்... முன்னை சொன்னேனே உன்னுடைய பெண்சாதியினுடைய ஆட்கள் எல்லாருக்கும் சொல்லித்திரிஞ்ச மாதிரி எனக்கும் உனக்கும் முந்தின தொடர்பு இருக்கிறதென்பதை நிரூபிக்கிறது போலை ஆகிவிடும். நீ இதைப்பற்றிக் கவலைப்படமாட்டாய். நான் என்னதானென்றாலும் பெண்தானே. அதை என்னாலை தாங்கிக் கொள்ள முடியாது. நான் மனசார உன்னையே கலியாணம் கட்ட நினைச்சிருந்தேன். அதிலை என்ன பிழை இருக்கு? ஆனால் அவர்கள் சொல்லுற பழிச்சொல்லுக்கு நியாயமாகப் படக்கூடிய காரியம் ஏதும் செய்திருக்கிறேனா? ஆனபடியால் சந்திரன் நீ வேறை ஆரையும் கட்டுறதுதான் உனக்கும் நல்லது எனக்கும் நல்லது.''

அகிலா கண்களில் நீர் சுரக்கத் தலை குனிந்தவாறு நின்றாள். தனது இதயத்தின் ஏக்கத்துக்கு எதிரான பதிலை அளித்ததால் இந்நிலை அவளுக்கேற்பட்டது. சமூகம் என்ற கூட்டுக்கு வெளியே பறந்து செல்ல அவளால் முடியவில்லை. அவளின் கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர் சொட்டுக்கள் சந்திரசேகரனின் காலின் பெருவிரலொன்றில் விழுந்து சிதறின. புறக்காரணங்களுக்காக ஏன் பயந்து ஒதுங்கவேண்டுமென்ற எண்ணம் தான் சந்திரசேகரனின் மனதில் வேரூன்றியது. இனியாவது துணிந்து செல்லத் திடசங்கற்பம் கொண்டான்.

''அகிலா! உன்ரை மனதிலை உள்ளதை நீ சொல்லிப் போட்டாய். இனி நான் செய்யவேண்டியதைச் செய்யத்தான் போறன். நீ வேலைக்குப் போகத் தேவையில்லை. வீட்டை

திரும்பிப்போ''. என்று சைக்கிளை எடுத்தான். அகிலா வேலைக்குச் செல்லவில்லை. தனது நடையை சந்திரசேகரன் போன திக்கில் தொடர்ந்தாள்.

புதிய நம்பிக்கைகளும் புதிய சிந்தனைகளும் அவளின் மனதில் ஊற்றெடுத்துப் பாய, அவள் நடந்து கொண்டிருந்தாள்.

## 29.

அகிலா 'அரிக்கன்' லாம்பின் சிமினியைத் துடைத்துக் கொளுத்தினாள். சிமினியில் படிந்திருந்த கரி விலகி, அவளின் வாழ்க்கையைப் போலப் பிரகாசித்தது. அன்று அவளின் ஒவ்வொரு செயலிலும் உயிர் இருந்தது. அவளின் உடல் இதுகாலவரை ஏதோ யந்திரமாக இயங்கிவிட்டது போல இருந்தது. காலம் தாழ்த்தியாவது அவளின் விருப்பம்போல வாழ்க்கை அமையப் போகிறதென்ற இன்பக் கிளுகிளுப்பு அவளையும் நிலை தடுமாறச் செய்தது. முகத்தில் என்றுமில்லாத புதிய ஒளி பரந்திருந்தது. முற்றத்துப் பந்தலில் வீசுகிற மல்லிகையின் நறுமணமும், இரும்புக் கம்பியில் தொங்கிக் காற்றில் ஆடிக்கொண்டிருக்கும் அரிக்கன் லாம்பும் அவளுக்குப் பல்லாயிரம் செய்திகளைச் சொல்லின.

வீட்டு வாசலில் காரொன்று வந்து நிற்பதைக் கேட்டுச் சோமசுந்தரம் எழுந்துபோய்ப் படலையைத் திறந்தார். இந்த நேரத்தில்... கார் வந்து நிக்குது!—

இரத்தினம் காரிலிருந்து இறங்கி வந்தான். பின் சீற்றிலிருந்து வீட்டில் உடுத்திருந்த நூல் சேலையுடன், தலைகூட வாரிவிடாமல் கழுத்தில் கட்டியிருந்த தாலிக்கொடியுடன் மட்டுமே ஜெயராணி இறங்கிவந்து படலையின் முன் நின்றாள். சோமசுந்தரம் படலையைத் திறந்துவிட்டவர் அப்படியே மலைத்துப்போய் எதுவும் பேசமுடியாத நிலையில் நின்றார்.

அகிலா அரிக்கன் லாம்பைக் கழற்றிக்கொண்டு படலைக்குச் சென்றாள். அந்த வெளிச்சத்தில் ஜெயராணியின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீர் மினுமினுத்தது. வழிந்து போன கண்ணீரில் முந்தானை நனைந்திருந்தது. அகிலா அவளையே பார்த்தவாறு நின்றாள். லாம்பைப் பற்றியிருந்த விரல்கள் நடுக்கம் பெற்றன. அவளின் இதயம் சில்லிட்டது. அவளின் கால்கள் மிதித்திருந்த உலகமே வெடித்துச் சுக்கு நூறாகியது.

''சோமண்ணை! நான் படத்துக்கு ஒரு பகுதியாட்களைக் கொண்டுபோய் விட்டுவிட்டு வந்துகொண்டிருக்கேக்கை இவ தனியாகப் பாதை தெரியாமல் தடுமாறிக்கொண்டு நிண்டா. எங்கடை தம்பி சந்திரனுக்காக நான் காரை அருகில் கொண்டுபோய் விசாரிச்சன். தான் தகப்பனுக்களோடை கோவிச்சுக்கொண்டு வந்தவவாம். உங்கடை வீட்டிலை கொண்டு போய்த் தன்னைவிடச் சொன்னா. அது தான் கூட்டிக்கொண்டு வந்தனான்'' என்று இரத்தினம் கூறிவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு போய்விட்டான்.

அந்த இரவு நேரத்தில் தனது வீட்டைத் தேடி வந்துவிட்டாளே என்ற ஒன்றுக்காக மட்டுமே ஜெயராணியை உள்ளே அழைத்துப் போனார் சோமசுந்தரம். வெறும் ஜடமாக அகிலாவும் அவர்களைப் பின் தொடர்ந்து சென்றாள்.

ஜெயராணி விருந்தையில் வெகு சாதாரணமாக அமர்ந்துகொண்டாள். தன் தலையைத் தொங்கவிட்ட நிலையில் சகலவற்றையும் இழந்து சோமசுந்தரத்தின் குடும்பத்திடம் வந்து அபயம் கேட்கின்றாள்.

அகிலா அவளின் முன்பாக வந்து நின்றாள். ஜெயராணியின் தோற்றம் அகிலாவை நெகிழ வைத்தது. மனிதத்தன்மை அவளின் உள்ளத்தில் பொங்கிப் பிரவாகித்த உணர்ச்சிகளையெல்லாம் கொன்று தீர்த்தது. அவளின் மனம் திடம்பெற்றது. இனி அவள் என்ன செய்யவேண்டுமென்பதை முன் கூட்டியே தீர்மானித்துவிட்டவளாகிப் பேச்சைத் தொடங்கினாள் அகிலா.

''ஏன் இந்த நேரத்திலை இப்படித் தனியாக வெளிக்கிட்டு வந்தனீங்கள்?''

ஜெயராணியின் பதில் விக்கலாகவும், அழுகையாகவும் வெளிவந்தது. அந்த அழுகையில் அவள் இதுவரை காலமும் கட்டிக் காத்துவந்த செல்வச் செருக்கும், இறுமாப்பும் கரைந்து போயிருந்தன. அவள் சற்று நேரத்தின் பின் சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துவிட்டுப் பேசத் தொடங்கினாள்: ''அகிலா! நான் வீட்டிலை இருந்து இந்தா இந்தச் சீலையோடு வெளிக்கிட்டு பஸ்ஸிலை ஏறி வந்திருக்கிறன். நான் வெளிக்கிட்டு வந்தது ஒருத்தருக்குமே தெரியாது. அவர்களுக்கு நான் செல்லப் பிள்ளைதான். என்னை இவ்வளவு காலமும் கட்டிக் காத்து வளத்தவைதான். எனக்கு ஒரு குறையும் வைக்காம நடந்தவைதான். ஆனால், அங்கை இருக்கிற சுகபோக வாழ்க்கை எனக்கு இப்ப சிறையாகக் கிடக்கு. நான் கலியாணம் முடிக்காமலே இருந்திருந்தால் எனக்கு இது நேர்ந்திருக்காது. எங்களுடைய வீட்டிலை இருக்கிற மீன்களும், கண்ணாடிப் பெட்டியும் போலத்தான் கிடக்கு. நான் இந்த ஆறு மாத காலமும் அனுபவிச்ச சித்திரவதை போதும். எல்லா வசதியுமிருந்தும் எதுவுமே இல்லாத ஒரு வாழ்க்கையை அனுபவிக்கிறதுபோல நரக வேதனை உலகத்திலை ஒண்டுமேயில்லை. இனியும் அந்த மறியல் வீட்டிலை அம்மா, ஐயா சொல்லுறபடி ஆடிக்கொண்டிருந்தால் எனக்கு விசர் பிடிச்சுப் போகும்போல இருக்கு. இல்லாவிட்டால் நஞ்சைக் கிஞ்சைக் குடிச்சு சாகவேண்டித்தான் வரும். என்ரை மனச்சாட்சியையும் விட்டுட்டு அவை பின்ரை சொல்லைக் கேட்டுக் கண்மூடித்தனமாக நடந்திட்டன். எல்லாத்துக்கும் நான்தான் முதன் முதலிலை காரணம். நான் இப்பிடியெல்லாம் வருமெண்டு நினைச்சுப் பாத்திருந்தேனா? என்னாலை மனச்சாட்சிக்கு எதிராக கன தூரம் போக ஏலாமல் வந்துட்டுது. என்னுடைய நன்மைக்காகத்தான் எல்லாத்தையும் செய்கிறார்களெண்டு நானும் எல்லாத்துக்கும் ஆமாப் பாடி இப்ப கோட்டிலை பிரிஞ்சுபோற

நிலைக்கு வந்திட்டுது. இதை நான் ஆரிட்டைப் போய்ச் சொல்லி அழுகிறது?''

அகிலா அவள் பேசுவதைக் கேட்டவாறு, தனது வாழ்க்கையில் எப்படி இருள் கவிந்துகொண்டிருக்கிறது என்ற பிரக்ஞையே இல்லாமல் அவளுக்கு எவ்வாறு உதவலாம் எனச் சிந்தித்தவாறு நின்ருள். ஜெயராணியின் நிலை கண்டு சோமசுந்தரமும், செல்லம்மாவும் மனமிளகினர்கள்.

''அப்ப பிள்ளை! நீ புருஷனைத்தானே வேண்டாமெண்டு கோட்டிலை சொல்லிப்போட்டு இப்ப இப்பிடி வந்து நிக்கிருய். உன்னுடைய நிலையையும் பார்க்க இரக்கமாகத்தான் கிடக்கு. கொய்யா இப்ப பொலிசிலை அறிவிச்சுப் போடுவர். நான்தான் 'உன்னைக் கூட்டிக்கொண்டு வந்ததெண்டு என்னையும் கட்டாயம் கோட்டுக்கு இழுப்பர். அதுகளுக்கு நான் பயப்படேல்லை. செய்யிற காரியத்தை நேர்சீராகச் செய்தால் பிள்ளை ஒரு கரைச்சலும் வராது.''

''நான் இனிமேல் திரும்பி வீட்டை போகப்போறேல்லை. அவர் என்னை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நான் வேறை ஏதாகிலும் முடிவு கட்டுவன். அவர் ஏற்றுக்கொண்டா நான் போய் பொலிசிலை, என்னுடைய விருப்பத்தோடுதான் புருசன் வீட்டுக்குப் போகிறேன் எண்டு அறிவிச்சுப்போட்டு வருவன். வழக்கிலையும் அடுத்த தவணைக்கு இதைத்தான் சொல்லுவன். நீங்கள்தான் அவரைச் சமாதானப்படுத்தி என்னை ஏற்றுக்கொள்ளச் சொல்லிக் கேட்கவேணும். இந்த உதவியை நீங்கள் செய்யவேணுமெண்டு கையெடுத்துக் கும்பிடுறன். நீங்கள் கைவிட்டால் நான் தனியாகப் போய் அவருடைய காலிலை விழக்கூடப் பயமாகக் கிடக்கு. குற்றமுள்ள நெஞ்சு என்னுடையது. குறுகுறுக்கும்தானே. அவரைப் புருசன் எண்ட இடத்திலை வைச்சு நான் அவரோடை வாழ்ந்த நாட்களிலை நடத்தேல்லை. ஆனுல் அவர் எவ்வளவு பெருந்தன்மை உடையவர் எண்டு நாட்பட நாட்படத்தான் தெரிஞ்சுது.''

அகிலா அவளின் தீர்மானம் வெறும் தற்காலிகமான மனக் குழப்பமாக இல்லாமல் இவ்வளவு பலமானதாக உள்

ளதை அறிந்ததும், அதன் பின்பும் அவளை அங்கு பேச வைக்க விரும்பாதவளாய் உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் அருகருகாக அமர்ந்துகொண்டனர். பூகம்பத்தின் பின்பும் அமைதி நிலவாமலா போகப் போகிறது? அகிலா ஜெயராணியின் முதுகைத் தட்டி, ''ஜெயா! உம்முடைய வாழ்க்கையை மீண்டும் பிரகாசிக்க என்னாலை முடியுமான எதையும் செய்யத் தயாராக இருக்கிறன். என்ரை மனசிலை நெடு நாளாக உறுத்திக்கொண்டிருந்த ஒண்டை உம்மிடம் கேட்கவேணுமெண்டு என்ரை மனசு துடிக்குது. என்னையும், சந்திரனையும் பற்றிச் சம்பந்தப்படுத்திக் கதைச்ச கதையளை இப்ப எண்டாலும் நம்புறீரா எண்டு சொல்லும்.'' அகிலா நிதானமாகவே கேட்டாள்.

ஜெயராணி, அகிலாவின் தோள்களைப்பற்றிக் கட்டியணைத்தாள். ஜெயராணியின் கண்களிலிருந்து நீர் சொரிந்தது. ஒரு பெண்ணின் கண்ணீரால் அகிலாவுக்கு ஏற்பட்ட வசை தீர்ந்துவிடப் போகிறதா?

''இல்லை... அகிலா... ..! இல்லை......அகிலா......!! என்னை மன்னிச்சிடும். நான் அநாதரவாக விடப்பட்ட நிலையில் நியாயமானது நியாயமில்லாதது எல்லாத்தையும் யோசிச்சன். என்ரை பலவீனம் உம்மை இவ்வளவு பாதிச்சிருக்கெண்டு எனக்கு இண்டைக்குத்தான் தெரியும் அகிலா. உம்மையும், உம்முடைய தாய், தந்தையுடைய குணத்தையும் அறியாமல் உங்களுடைய வீடு தேடி வருவேனா அகிலா?'' ஜெயராணி, அகிலாவிடம் தனது ஆறு மாத கால வாழ்க்கையை ஒரு பெண் என்ற கோதாவில் விபரித்தாள். வெளியேயிருந்து சோமசுந்தரம் அகிலாவைக் கூப்பிட்டார்.

''பிள்ளை! அந்தப் பொடிச்சியையும் கூட்டிக்கொண்டு வா - சந்திரன் உங்கை வீட்டிலைதான் நிக்கிறான். இன்னும் பயணம் போகேல்லைப் போல கிடக்கு. வழக்குக்கு வந்தாப் போலை நிக்கிறானக்கும். கூட்டிக்கொண்டு போய்க் கதைப்பம். கொம்மா இஞ்சை நிக்கட்டும்'' என்றார் சோமசுந்தரம்.

அகிலா அறைக்குள் போய் ஜெயராணியின் கையைப் பிடித்து அழைத்தாள். ஜெயராணி தலையைக் குனிந்தவாறு மாஸ்டரின் வீட்டுப் படலையால் சோமசுந்தரத்தையும், அகிலாவையும் தொடர்ந்து உள்ளே நுழைந்தாள்.

சந்திரசேகரனுக்கு ஏற்கனவே அகிலாவின் சகோதரிகள் மூலமாகச் செய்தி போய்விட்டது. அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டியவாறு மூவரையும் பார்த்து நின்றான். அவனின் முகம் கோபக் கனலைக் கக்கிக்கொண்டிருந்தது.

ஜெயராணி, சந்திரசேகரனைக் கண்டதும் அவளின் இதயம் மடை திறந்து பாய்ந்தது. அதன் வெளிப்பாடாக அவளால் ஒரு வார்த்தைகூட அவனைப் பார்த்துப் பேச முடியாது உணர்ச்சிகள் ஊமையாகி அவளுள் குமைந்தன. சந்திரசேகரனே பேச்சைத் தொடக்கினான்:

''ஏன் இஞ்சை வந்தனீர்? இது உம்முடைய புது நாடகமோ? நீர்தானே என்னை வேண்டாமெண்டுவிட்டனீர். இப்ப என்ன புதிசாக யோசனை வந்திருக்கு? கோட்டிலை எல்லாருக்கும் முன்னாலை என்னை வேண்டாமெண்டு சொன்னனீர். இவ்வளவு மரியாதைக் கேட்டை எனக்கு வரப்பண்ணிப் போட்டு என்ரை வீட்டுப் படலையைத் திறக்க வெக்கமாயில்லை... சீ... சீ... உங்கடை சகவாசந்தானே வேண்டாமெண்டு நான் கைகழுவி விட்டுட்டன். பிறகேன் வருவான்?''

''தம்பி! பொடிச்சியை அழுவிக்காதையெடா. அது நிக்கிற கோலத்தைக் கிட்டவந்து பார். உன்னையே தஞ்சம் எண்டு வந்திருக்கேக்கை நீ இப்பிடி நடக்கப்படாது. இப்பிடி உடுத்த உடையோடை நகை நட்டு ஒண்டுமில்லாமல் நீ கட்டின தாலிக்கொடியோடை பஸ்ஸிலை ஏறி உன்னைத் தேடிவர முடிவு கட்டினதிலையிருந்து நீ யோசிச்சுப் பார்க்க வேணும். பழைய ஆளாக இருந்தால் இவ்வளவு துணிவு வந்திருக்குமே?'' என்றார் சோமசுந்தரம்.

''இப்ப மனம் மாறிப் பிரயோசனமில்லை. அதுக்கு நான் எவ்வளவோ சந்தர்ப்பங்கள் கொடுத்துப் பார்த்தனான்.

எல்லாத்திலேயும் எனக்குக் கிடைச்சது ஏமாற்றந்தான். இப்ப மனம் மாறி வந்து பழையபடி தன்னுடைய பழைய சொகுசுகள் இங்கை இல்லையெண்டு திரும்பவும் என்னைப் பிடிக்கேல்லை எண்டு போகமாட்டா எண்டு என்ன நிச்சயம்? ஆனபடியாலே நான் கலியாண எழுத்தைத் தள்ளிப்போட்டு அகிலாவைக் கட்டுறதாக முடிவு செய்திருக்கிறன். நான் இவ்வளவு நாளும் அனுபவித்தது போதும்.''

அகிலா அப்பொழுதுதான் வாயைத் திறந்தாள்:

''சந்திரன்! இன்னொரு பெண்ணின்ரை வயித்திலே அடிச்சுப்போட்டு நான் ஒரு நாளும் வாழப்போறதில்லை. நீ என்ன மாதிரி, உன்ரை பெண்சாதி இருக்கவேணுமெண்டு நினைச்சிருப்பாயோ அப்பிடித்தான் ஜெயராணி இப்ப வந்து உன்ரை காலடியிலே விழுகுது. தாய், தகப்பனையும் வெறுத்துச் சுகபோக வாழ்க்கையையும் வேண்டாமெண்டு வாற தெண்டால், உன்னிடத்திலே இவ்வளவு நாளும் மறைச்சு வைச்சிருந்த பாசம் இல்லாமல் வேறை என்ன? நீ ஒதுக்கினல் தன்ரை உயிரையே போக்கிறதுக்கு நினைச்சிருக்கிற பெண்ணை நீ சந்தேகிக்கக் கூடாது. அதைவிட உனக்கு வேறை என்ன உத்தரவாதம் தேவை சந்திரன்? இனியும் பிடிவாதம் பிடிக்கிறது மனிசத் தன்மையில்லை......''

சந்திரசேகரன் பிடிவாதக்காரன், ரோஷக்காரன் என்றாலும் அவனிடம் நிறைய மனிதத்தன்மை உண்டென்பதை அகிலா அறியாதவளா என்ன? அவளே மீண்டும் தொடர்ந்தாள்:

''ஜெயராணி வீட்டில் நடந்ததெல்லாத்தையும் என்னட்டைச் சொன்னது. ஒரு பெண்ணை ஒரு பெண்ணாலே தான் உணர முடியும். ஜெயராணியின் தகப்பன் கல்யாண எழுத்தைத் தள்ளின பிறகு உடனே தன்னுடைய மகளுக்குக் கல்யாணம் திரும்பவும் செய்ய ஒழுங்கு பண்ணியவராம். பிஸினஸ் செய்யிற பெரிய பணக்கார மாப்பிள்ளை. உள்ள சீதனமெல்லாத்தையும் கொட்டிக் கொடுத்து எப்படியும் செய்துமுடிக்க மும்முரமாக நின்றாராம். அந்த மாப்பிள்ளை வியாபாரம் சம்பந்தமாக ஜெயராணியின் தகப்பனிடம்

வந்தவராம். கையோடை ஜெயராணியையும் பார்த்துவிட்டுப்போக ஆசைப்பட்டாராம். தகப்பன் தாலிக்கொடியைக் கழற்றி வைச்சுப்போட்டு முன்னுக்குத் தேநீர் கொண்டுவரச் சொன்னராம். ஜெயராணி தாலிக்கொடியைக் கழற்றவுமில்லை; முன்னுக்கு வரவுமில்லை. அதன் பிறகு அங்கை எப்பிடி நிக்கிறது? உன்னை நினைச்சு இங்கை வந்திருக்கு. இப்ப சொல்லு சந்திரன், நீ இனியும் இரக்கம் காட்டாமல் நிக்கிறது சரியோ எண்டு?''

சந்திரசேகரனின் வாயிலிருந்து எந்தவித வார்த்தையும் வெளியாகவில்லை. உள்ளே வரச்சொல்லிக் கையினல் சைகை ஒன்றை மட்டுமே அவனுல் காட்ட முடிந்தது. என்றைக்குமே கலங்காத சந்திரசேகரனின் கண்கள் அப்பொழுதுதான் கலங்குகின்றன. யாருக்காக? மனைவிக்காகவா? அல்லது அகிலாவுக்காகவா?

சிவபாக்கியம் மகனின் வாழ்வு இருளடையாமல் மலரப் போகிறதென்ற திருப்தியோடு நின்ருள்.

அகிலா, ஜெயராணியைப் பார்த்துச் சிரித்துவிட்டுத் தனது கையைப் பற்றியிருந்த அவளின் கையை விடுவித்துவிட்டு தனது வீட்டை நோக்கி நடந்தாள்.

அவள் அந்த இருளிலும் நிதானம் தவருது தனது வீட்டுப் படலைக்கு நேராகப் போய்க்கொண்டிருந்தாள் — இருள் தான் அவளுக்குப் பழக்கமாகிப் போய்விட்டதே! எனக்காக யாரும் அழுதுவிடாதீர்கள் - நான் வாழும் சமூகத்துக்காக அழுங்கள் என்று சொல்வது போலிருக்கிறது, இருளில் கலக்கும் அவளின் உருவம்.

''தம்பி! இரத்தினத்தின்ரை காரைப் பிடிச்சுக்கொண்டு ரெண்டு பேருமாகப் போய் பொலிசிலை ஒரு முறைப்பாடு 'நான் என்ரை விருப்பத்தோடைதான் புருஷன் வீட்டுக்குப் போறன்; என்னை ஒருதரும் தேடவேண்டாம்' எண்டு கொடுத்துவிட்டு வா பிள்ளை. உன்ரை கொய்யா பொல்லாத ஆளணை. நான் போய்க் காருக்கு இரத்தினத்திட்டைச் சொல்லிப்போட்டு வாறன்'' என்று கூறிவிட்டு சோமசுந்தரம் விடைபெற்ருர்.

அவர்களெல்லாரும் போய் மறைந்ததும் ஜெயராணி சந்திரசேகரனின் கால்களைப் பற்றியவாறு அழுது தீர்த்தாள். அவளால் அதைத் தவிர வேறு மொழியால் தன்னை அவனுக்கு விளங்க வைக்க முடியவில்லை. அவளின் தோள்களைப் பிடித்து எழுந்திருக்க வைத்தான் சந்திரசேகரன். நன்றிப் பெருக்கோடு எழுந்து நின்முள் ஜெயராணி. சிவபாக்கியம் கோப்பி போட்டுக்கொண்டு வந்து மருமகளிடம் நீட்டினுள். அவள் அதை வாங்கிக்கொள்ளவும், இரத்தினம் காரைக் கொண்டுவந்து நிறுத்தினுன். சந்திரசேகரனின் சகோதரியின் சேலையொன்றை ஜெயராணி எடுத்து உடுத்திக்கொண்டு அவன் பின்னுல் போய்க் காரில் ஏறினுள். கார் கோயிலைத் தாண்டிக் கிழக்கு முகமாகத் திரும்புகையில் பூரண நிலவு காலித்திருந்தது. அவர்களின் முகத்துக்கு நேராகக் காரின் கண்ணுடியினூடாகப் புகுந்தது நிலவொளி.

*

அகிலா இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு பாயை எடுத்து விரித்துப்போட்டுத் தலையணையைத் தட்டிப் போட்டாள்.

அரிக்கன் லாம்பின் சிமினியில் புகை மண்டிக் கிடக்கிறது. நிரையாகப் படுத்துறங்கும் தனது மூன்று சகோதரிகளையும் பார்க்கிறுள் அகிலா. அப்பொழுது ஏதோ நினைவுக்கு வந்தவளாகத் தாயைக் கூப்பிட்டாள்:

''எணை அம்மா! நாளைக்கு என்னை நேரத்தோட எழுப்பிவிடு. ஒரு கிழமையாக நேரஞ் செல்ல எழும்பிப் பழகிப் போனன். அதாலை மறந்து போய்ப் படுத்துக் கிடந்திடுவன். ஏனெண்டால் நான் நாளைக்கு வேலைக்குப் போக வேணும்.''

அகிலாவின் இளைய சகோதரிகள் மூவரும் விடும் குறட்டை ஒலி அந்த அணியில் நிறைத்து நிற்கிறது.

*

ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களின் தரமான படைப்புகள் மாதா மாதம் வீரகேசரி பிரசுரமாக நூலுருவில் வெளிவருகின்றன.

தவறாமல் இவைகளைப் பெற்று உங்கள் இல்லத்தில் ஓர் "குடும்ப நூல் நிலையத்தை" ஆரம்பியுங்கள்.

ஆறு புத்தகங்களை அடுத்து நீங்கள் வாங்கினால், ஏழாவது புத்தகம் இனமாக அனுப்பி வைக்கப்படும். இப்பரிசுத் திட்டத்தில் ஏற்கனவே ஆயிரத்திற்கு மேற்பட்ட வாசகர்கள் இனமாக நூல்களைப் பெற்றுள்ளனர்.

புத்தகங்களைக் கிரமமாகப் பெறுவதில் சிரமமிருந்தால் நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம்:

விநியோக நிர்வாகி,
வீரகேசரி,
த. பெ. 160,
கொழும்பு.

158010



ஞானரதன்

தமிழர் சமூகத்தில் பிறந்துவிட்ட
பெண்களுக்கு - 'அடக்கம்'
ஆபரணமென்றால்,
சில சமயங்களில் அது
கைவிலங்காகவும் ஆகிவிடுகின்றது!

*

ஆசைகள்—
அங்கலாய்ப்புகள்—
ஆயிரம், ஆயிரம் இருந்தென்ன?
உள்ளத்தின் உணர்ச்சிகளை
நெஞ்சத்தின் ஆழத்தில்—
புதைத்துவிட்டு
வாழ்ந்துகொண்டிருக்கின்றன
இந்த—
'ஊமை உள்ளங்கள்!'

---

சமூக நாவல்

வீரகேசரி பிரசுரம் — 40